

நம்பிக்கை!
வந்த விருந்தினரை
நரஸுஸ் காபி அளி
த்து உபசரித்திருக்கி
றாள். அவர்கள்
அதை வெகுவாக விரு
ம்புவார்களென்பது
அவளுக்கு நிச்சயமா
கத் தெரியும். நர
ஸுஸ் காபி, மிகச்
சிறந்தவை என்பது
விஷயமறிந்த வீட்டு
எஜமானிகளுக்குத்
தெரிந்தது தானே!
நரஸுஸ்
இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா
MHKi20


நாகரீகத்திற்கேற்ற
கண்ணைக்கவரும்
ஆடைகள்
கவர்ச்சிதரும்
புடவைகள்
அருணா புடவைகள்
நீடித்த சாயத்துடன் கூடிய பட்டு வேலைப் பாடுகள் நிறைந்தவை
அருணா வேஷ்டிகள்
அழகிய பார்டருடன் கூடிய நேர்த்தியான ரகங்கள்
நேர்த்தியான
வேஷ்டிகள்
விதவிதமான
ஷர்டிங்
அருணா ஷர்டிங்ஸ்
கண்ணைக் கவரும் கலர்களில் சோபையான டிஸைன்கள்
அருணா பாப்லின்கள்
தேஜோமயமான வானவில் கலரில்
மிருதுவான
பாப்லின்
அருணா
மில்ஸ், லிமிடெட்
ஆமதாபாத்.

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 } இதழ் 17 } 1944 நவம்பர் 26 { தாரண ஐ கார்த்திகை 11

உலகத்தில் நாம் சற்றும் எதிர்பாராத சம்பவங்கள் சில நேரிட்டு விடுகின்றன. அவற்றில் ஒன்று இந்தக் கல்கி இதழின் அட்டை, பாரிஸ்டர் வி. எல். எத்திராஜ் அவர்களின் படத்தைத் தாங்கி வருவது.

ஸ்ரீ எத்திராஜின் பெயரை இதற்கு முன் நாம் கேள்விப் பட்டதுண்டு. கிரிமினல் கோர்ட்டு நடவடிக்கைகளில் அவருடைய பெயர் அடிக்கடி அடிபடும்;—பிரபல கிரிமினல் கேஸ் வக்கீல் என்ற முறையில்தான்! சில வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீ எத்திராஜுக்குச் சென்னை சர்க்காரின் பப்ளிக் பிராஸிக்யூடர் உத்தியோகம் கிடைத்தது: ஆனால் அந்தச் செய்தியானது தேசத்தில் எவ்வித பரபரப்பையும் உண்டுபண்ணி விடவில்லை.




இடைசென்று போன வாரத்தில் ஒரு திடுக்கிடும் செய்தி கிடைத்தது. சென்னையில் ஒரு புதிய பெண்கள் கலாசாலை ஏற்படுத்துவதற்காக ஸ்ரீ எத்திராஜ் பத்து லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்க முன்வந்திருக்கிறார் என்பது அந்தச் செய்தி.

இதிலிருந்து, ஸ்ரீ எத்திராஜ் வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்தவர் என்பது வெளியாயிற்று. எப்படியென்றால், வட ஆற்காடு ஜில்லா வாசிகள் கூடிய கூட்டமொன்றில், "ஸ்ரீ எத்திராஜ் எங்கள் ஜில்லாக்காரர்; அவராக்கும் இவ்வளவு பெரிய தர்மத்தைச் செய்தார்!" என்று பெருமை பாடிக்கொண்டார்கள்!

ஆனால், இது வட ஆற்காடு ஜில்லாக்காரர்கள் மட்டும் பெருமை கொள்ளக்கூடிய காரியமல்ல; தமிழ் நாடே பெருமை கொள்ள வேண்டிய காரியம். அவ்வளவு மகத்தான பெரிய தர்மம்; அவ்வளவு சிறந்த நன்கொடை.

சமீப காலத்தில் தமிழ் நாடு பல விதங்களில் முன்னேற்ற மடைந்து வருகிறது. அநேக காரியங்களில் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் முன்னணியில் நின்று வருகிறது. பெரிய தர்மங்களைச் செய்வதிலும் தமிழ் நாடு பிற மாகாணங்களுக்கு வழி காட்டக் கூடும் என்பதை டாக்டர் அளகப்பச் செட்டியார், பாரிஸ்டர் வி. எல். எத்திராஜ் போன்றவர்கள் நிரூபித்து வருகிறார்கள். அவர்களை மனமார வாழ்த்துகிறோம்.

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!





ஆஷலதா

“என்னுடைய அழகிய பளிச்சென்றிருக்கும் சருமத்தின் பெருமை லக்ஸ் டாய்லெட் சோப்பிற்கே உரியது” என்கிறார் சௌந்தரிய ஆஷலதா. தன் சருமத்தின் மயிர்கண்களிலிருக்கும் கெடுதல் செய்யக்கூடிய அசுத்தத்தை நீக்க இந்த அழகிய சோப்பின் நுரையைத்தான் நம்பி இருக்கிறார். அநேக இந்திய சினிமா நக்ஷத்திரங்கள் இந்த சோப்பைத் தவறாமல் உபயோகிக்கிறார்கள்.

லக்ஸ் டாய்லெட் ஸோப்

LTS. 126-50-40 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 17

என்ன சேதி?

அவதூறுக்கு மதிப்பு

சென்ற வாரத்தில் திருச்சினாப் பள்ளியில் திருச்சி ஜில்லா பத்திரிகைக் காரர்கள் மகாநாடு நடந்தது. பிரபல பத்திரிகை முதலாளியான ஸ்ரீ ராமநாத் கோயங்கா அவர்களின் தலைமையில் நடந்த மேற்படி மகாநாட்டில் பத்திரிகைக்காரர்களின் முன்னேற்றத்துக்கான பல அவசியமான தீர்மானங்கள் நிறைவேறின. அவற்றோடு அவசியமில்லாத ஒரு தீர்மானமும் நிறைவேறியது. அதாவது, பெவர்லி நிக்காலஸ் என்பவர் எழுதிய "இந்தியா மீது தீர்ப்பு" என்னும் புஸ்தகத்தைக் கண்டனம் செய்யும் தீர்மானந்தான்!

இந்த பெவர்லி நிக்காலஸ் என்பவரின் பெயர் சில காலமாக இந்தியப் பத்திரிகைகளில் அடிக்கடி தென்பட்டு வருகிறது. இந்த பாக்கியம் பெறுவதற்கு அந்த மகான் செய்த காரியம் என்னவென்றால் இந்தியாவையும் இந்திய தேச பக்தர்களையும் இந்தியப் பத்திரிகைகளையும் நன்றாகத் திட்டி, இழிவு படுத்தி, அவதூறு கூறிப் புத்தகம் எழுதியதேயாகும்.

நம்மைப் பற்றி யாராவது இழிவாகப் பேசினால் அதைத் தெரிந்து கொள்ள விரும்புவதும், அதே ஞாபகமாயிருப்பதும், அதற்காக வருத்தப்படுவதும், கோபம் கொள்வதும் மனித இயல்பே ஆகும். ஆனால் உயர்ந்த மனித இயல்பு என்று சொல்ல முடியாது. தன் மதிப்புக்கும் சுய நம்பிக்கைக்கும் மாறுபட்ட இயல்பு. ஒரு உதாரணம். பிரிட்டிஷ் பத்திரிகைகளைப் பற்றி நமது அபிப்பிராயத்தை இதோ பின் வருமாறு வெளியிடுகிறோம்:—

"பிரிட்டிஷ் பத்திரிகைக்காரர்களில் முக்கால்வாசிப்பேர் பரம முட்டாள்கள். பொய்க்கும் பழிக்கும் அஞ்சாதவர்கள். அவர்களுக்குள்ளே பெவர்லி நிக்காலஸ் என்பவன் முதல் நம்பர் முட்டாள். பக்காத் திருடன்."


சரி; இவ்வாறு நாம் எழுதியதைப் பற்றி எத்தனை பிரிட்டிஷ் பத்திரிகைகள் கண்டித்து எழுதும் என்று நினைக்கிறீர்கள்? இங்கிலாந்தில் எத்தனை பொதுக் கூட்டங்களில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்படும்?

ஒன்றும் நடக்காது; கேள்வி முறையே இராது. அப்படியிருக்க, பெவர்லி நிக்காலஸ் எழுதிய பித்தல் புஸ்தகத்தைப்பற்றி மட்டும் நாம் ஏன் இவ்வளவு அலட்டிப்பட வேண்டும்?


அச்சுக்கு மரியாதை

அச்செழுத்துக்கு அளவு கடந்த மரியாதை கொடுப்பதும் பெருந் தவறு ஆகும். அச்சுக்கும் அச்சு யந்திரத்துக்கும் உயிர் கிடையாது, உணர்ச்சி கிடையாது. எந்தப் பொய் புனைசுருட்டுகளை வேணுமானாலும் அச்சு யந்திரம் அச்சடித்து விடும். உலகத்திலேயே பிறரைப் பற்றிய அவதூறுகள் எழுதி அச்சடிப்பதைப் போல் சுலபமான காரியம் வேறொன்றுமில்லை. அவதூறுக்குள்ளானவர்கள் சாதாரணமாக நடவடிக்கை எடுக்க முடியாது. ஆயிரக் கணக்காகப் பணச் செலவு செய்ய வேண்டும். அப்படியும் பொய்யைப் பொய் என்றும் அவதூறை அவதூறு என்றும் இந்தக் காலத்தில் கோர்ட்டுகளில் நிரூபிப்பது எளிய காரியமன்று. தனி மனிதர்களைப் பற்றிய விஷயமே இப்படியானால் ஒரு தேசத்தின் மக்களைப் பற்றி இன்னொரு தேசத்திலிருந்து கொண்டு அவதூறு கூறுவதென்பது இன்னும் சர்வ சுலபமானது. அதைச் செய்வதற்குப் பெரிய கெட்டிக்

நிகழ்ச்சிச் சித்திரம்



சமூகப் பிரச்னை முட்டுக்கட்டையைத் தீர்ப்பதற்கு சர்டேஜ்பகதூர் சாப்ரு மகாத்மாவின் ஆசியுடன் மற்றொரு முயற்சியைத் தொடங்கி இருக்கிறார்.



ஐரோப்பிய அரசியல் அரங்கத்தில் ஸ்டாலினுக்கு இணையாக பலம் பெற சர்ச்சில் முயன்றுவருவதாகச் சொல்லப் படுகிறது.

-உம்மன்



பர்மா என்றென்றைக்கும் பிரிட்டனுக்கே சொந்தம் என்று பிரிட்டிஷ் பிற்போக்காளர் கனவு கண்டுகொண்டிருந்தனர்
பிரிட்டிஷ் பிற்போக்காளர்
யுத்தத்துக்குப் பின்னால் அரசியல் திருத்தம்.
விழித்தெழுந்ததும் நிலைமை மீறிப்போனதைக் கண்டு பர்மாவுக்குச் சீர்திருத்தம் வழங்குவதைப்பற்றி பேசுகிறார்கள்.

காரத்தனம் ஒன்றும் வேண்டியதில்லை. எந்த முட்டாளும் போக்கிரியும் எளிதில் செய்து விடலாம். அத்தகையவர்களுடைய அவதூறுப் பிதற்றல்கள் அச்சில் வந்து விட்டதினாலேயே அவற்றுக்கு மதிப்புக் கொடுத்துப் பதில் எழுதுவதும் கண்டனத் தீர்மானங்கள் போடுவதும் நம்முடைய சுய கௌரவத்தை நாமே பங்கம் செய்து கொள்வதாகும். பெவர்லி நிக்காலஸ் என்னும் ஒரு மனுஷன் உலகத்தில் இருக்கிறான் என்பதையே மறந்து விடுவதுதான் அந்த மகானுக்கு நாம் அளிக்கக்கூடிய சரியான தண்டனை.

நெஞ்சம் வேகுமோ?

பழந் தமிழ் நாட்டின் வீரத்தைப் பற்றி நாம் சங்க இலக்கியங்களில் படிப்பதெல்லாம் வெறும் கற்பனையல்ல — உண்மைதான் — என்பதை இந்த நாளில் நிலை நாட்டியவர் தூத்துக்குடி ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை. அவர் வெள்ளைக்காரக் கம்பெனிக்குப் போட்டியாகக் கப்பல் ஓட்டத் துணிந்ததும், அதன் பயனாகச் சிறையிலே செக்கு இழுக்க நேர்ந்ததும் வீர காவியமாகப் புனையப்பட வேண்டிய சம்பவங்கள். பாரதியாரின் வீர சுதந்திரக் கவிதை ஒன்றுக்கு மேற்படி சம்பவங்கள் காரணமாயின:

"கூட்டம் கூடிவந்தே மாதரம் என்று
கோஷித்தாய் எமைத் தூஷித்தாய்!
ஓட்டம் நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்! பொருள் ஈட்டினாய்!"

என்று ஆங்கில அதிகாரி சீறியதற்கு,

"சதையைத் துண்டுதுண்டாக்கினும் உன் எண்ணம்
சாயுமோ ஜீவன் ஓயுமோ?
இதயத்துள்ளே இலங்கும் மகா பக்தி
ஏகுமோ? நெஞ்சம் வேகுமோ?"

என்று தேசபக்தன் பதில் கூறியதாகப் பாரதியார் பாடியது, ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை மனதில் வைத்துக் கொண்டுதான் என்பது பிரசித்தம்.

அத்தகைய தேசபக்த வீரரின் புனிதமான ஞாபகத்தை அவர் காலஞ்சென்ற தினமாகிய நவம்பர் 18உ தமிழ் நாட்டில் பல இடங்களில் கொண்டாடினார்கள். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை காலஞ் சென்று விட்டது உண்மைதான்; ஆனால் அவருடைய வீர நெஞ்சு வெந்திருக்குமென்று நமக்குத் தோன்றவில்லை. என்றைய தினம் தமிழ் நாட்டுக் கப்பல்கள் இந்திய சுயராஜ்யக் கொடியைப் பறக்க விட்டுக்கொண்டு அலைகடல்களில் நாலு திசைகளையும் நோக்கிச் செல்கின்றனவோ, அன்றைக்குத்தான் அந்த மகா தேசபக்தரின் நெஞ்சு வேகும்! அவருடைய ஆன்மாவும் சாந்தியடையும்!

வாழ்க காங்கிரஸ்!

பாரதத் தாயின் உத்தமோத்தமமான புதல்வர்கள் பெற்று வளர்த்துப் போற்றிப் பாதுகாத்து வந்த சபை காங்கிரஸ் மகாசபை; அடிமை இருளில் ஆழ்ந்து கிடந்த மக்களுக்குச் சுதந்திர ஒளி காட்டி விடுதலை வெறி ஊட்டிய சபை காங்கிரஸ் மகாசபை; இன்று இந் நாட்டில் வாழும் நாற்பது கோடி இந்தியர்களின் தேசிய சுதந்திர ஆர்வத்துக் கெல்லாம் அறிகுறியாயிருப்பது காங்கிரஸ் மகாசபை; லட்சக் கணக்கான தேச பக்தர்களின் மகத்தான தியாகங்களுக் கெல்லாம் சின்னமாயிருப்பது காங்கிரஸ் மகாசபை; மட்டுமீறிய புயல் சுழன்று சுழன்று அடித்தாலும் மசியாமல் தலை நிமிர்ந்து நின்று உயர்வானில் பறக்கும் சுதந்திரத் துவஜம் காங்கிரஸ் மகாசபை.

அத்தகைய தேசிய மகா சபைக்கு அழிவு என்பது கிடையாது. அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைகளினாலும் அதை அழிக்க முடியாது; 'உடன் பிறந்த வியாதி'யைப் போல் காங்கிரஸுக்குள்ளேயே இருக்கும் சுயநல விஷமிகளினாலும் அதை நாசமாக்கி விட முடியாது.

விரோதிகளும் சரி, போலி சிநேகிதர்களும் சரி, தேசிய மகா சபைக்கு அற்ப விபத்துக்களை உண்டு பண்ணலாம்; சில காலம் அதை அடக்கியும் வைத்திருக்கலாம். ஆனால், விரைவிலே அந்த விபத்துக்கள் எல்லாம் விலகப் பெற்றுக் கிரகணம் நீங்கிய சூரியனைப் போல் காங்கிரஸ் பிரகாசித்தே தீரும்.

* * *

சென்ற இரண்டு வருஷ காலமாகக் காங்கிரஸ் மகா சபைக்குக் கிரகணம் பிடித்திருந்தது. அதன் ஒளி குன்றி மறைந்திருந்தது. காங்கிரஸ் தலைவர்கள் பலர் சிறையிலே அடைக்கப் பட்டிருந்தார்கள். காங்கிரஸ் கமிட்டிகள் எல்லாம் அடக்கு முறைச் சட்டங்களினால் கலைக்கப் பட்டிருந்தன.

காங்கிரஸின் அக்ஞாத வாசம் இன்னமும் பூர்த்தியாகி விடவில்லை. அக்டோபர் 1உ பண்டித ஜவாஹர்லால்ஜி உள்ளிட்ட சுமார் பத்தாயிரம் காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் சிறைவாசம் செய்ததாக இந்தியா சட்ட சபையில் அறிவிக்கப் பட்டது. ஏறக் குறைய இன்றைக்கும் அதே நிலைமைதான்.

எனினும், சமீப காலத்தில் காங்கிரஸைப் பிடித்திருந்த கிரகணம் ஓரளவு நீங்கி, அதன் ஒளிக் கிரணங்கள் ஆங்காங்கு வெளியில் தெரிய ஆரம்பித்திருக்கின்றன.

சிறைக்கு வெளியில் உள்ள காங்கிரஸ் வாதிகள் கூட்டம் கூடிப் பேசுகிறார்கள்; காங்கிரஸ் சங்கம் ஏற்படுத்துகிறார்கள்; நிர்மாண வேலைகள் நடத்துவதற்கான ஏற்பாடுகளைப் பற்றி யோசிக்கிறார்கள்; வேலைத் திட்டம் வகுக்கிறார்கள்.

காங்கிரஸுக்கும் காங்கிரஸ் வேலைகளுக்கும் புத்துயிர் தருவதற்கான இந்த முயற்சிகளை நாம் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். "காங்கிரஸ் கமிட்டி" என்னும் பெயரைக் காட்டிலும் "காங்கிரஸ் சங்கம்" என்பது காதுக்கு நன்றாயிருக்கிறது; சொல்வதற்கும் அழகாயிருக்கிறது. இதோடு கூட, காங்கிரஸ் மகா சபையின் பெயரைப் பொது ஜனங்களின் முன்னால் நிறுத்தி வைப்பதற்கும், காங்கிரஸ் வாதிகள் கூட்டம் கூடிக் கலந்தாலோசிப்பதற்கும், கூடிய வரையில் நிர்மாணத் திட்டங்களை நடத்துவதற்கும் புதிய காங்கிரஸ் சங்கங்கள் பெரிதும் உபயோகமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

புதிய தீண்டாமை

ஆனால் இப்படி நல்ல காரியத்துக்காகக் கூடி நல்ல ஏற்பாடுகளைச் செய்கிற காங்கிரஸ் வாதிகள், 'தென்னிய பாலில் சிறிது நஞ்சை'ச் சேர்ப்பது போன்ற காரியத்தையும் செய்து வருகிறார்கள். இது பெரிதும் வருந்தத் தக்கது; காங்கிரஸ் சங்கங்கள் அமைப்பதினால் ஏற்படக்கூடிய நன்மையை அடித்துவிடக் கூடியது; தேசத்துக்குத் தீங்கையும் சுதந்திரப் போருக்குப் பாதகத்தையும் உண்டாக்கக் கூடியது.

அப்படிப்பட்ட காரியம் என்ன?

புதிதாக ஏற்படும் காங்கிரஸ் சங்கங்களில் சிற்சில கூட்டத்தினரைச் சேர்த்

துக் கொள்ளக் கூடாது என்று தீர்மானங்கள் நிறைவேற்றுவதுதான்.

காங்கிரஸின் பெயரால் இந்தகைய புதிய தீண்டாமைக் கொள்கையை அமுல் நடத்துவதற்கு ஏதேனும் அவசியம் இருக்கிறதா?—இல்லவே இல்லை!

அதில் நியாயம் உண்டா?—நிச்சயமாய் இல்லை.

அதனால் ஏதேனும் நன்மை உண்டா? கிடையவே கிடையாது!

தீமை உண்டா?—நிறைய உண்டு!

முறை தவறு

காங்கிரஸின் பெயரால் தீண்டாமைத் தீர்மானம் செய்வது முறை தவறான காரியம் என்பதற்கு இரண்டு பூர்வாங்கக் காரணங்களை முதலில் குறிப்பிடுகிறோம்:—

1. காங்கிரஸ் மகா சபை பாரத நாட்டின் மக்கள் அனைவருக்கும் பொதுவான சபை; பிரதிநிதி சபை; பாரத மக்களின் சார்பாகப் பேசக் கூடிய சபை காங்கிரஸ் ஒன்றுதான் என்று நாம் உரிமை கொண்டாடுகிறோம்.

அத்தகைய காங்கிரஸி லிருந்து தோத்திலே ஒரு கூட்டத்தார் தாங்களாகவே விலகி நின்றால் அதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் காங்கிரஸ்காரர்களே ஒரு கூட்டத்தாரை விலக்குவதென்பது காங்கிரஸின் பெருமைக்கும், பிரதிநிதித்வ உரிமைக்கும் குந்தகம் விளைவிக்கும் காரியம். அப்மாதிரி பேச்சைக் கேட்கும் போதே நமக்கு அருவருப்பு உண்டாகிறது.

2. உண்மையில், அசல் காங்கிரஸ் மகா சபையிலிருந்து அப்படி யாரையும் விலக்க முடியாது. காங்கிரஸ் இலட்சியத்தை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டு நாலு அணா சந்தா கொடுக்கும் யாரையும் காங்கிரஸில் சேராமல் தடுக்க முடியாது. இதைச் சமீபத்தில் மகாத்மாஜீ தெளிவுபடுத்தி யிருக்கிறார்.

காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டிகளோ, சாதாரண காங்கிரஸ் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவை. அவர்களுடைய தேர்தல் உரிமையிலும் தலையிட முடியாது.

ஆகவே, என்ன ஆயிற்று?

இப்போது அமைக்கப்படும் காங்கிரஸ் சங்கங்களி லிருந்து சில கூட்டத்தாரை விலக்கினால், இந்தப் புதிய சங்கங்கள் உண்மையான காங்கிரஸ் சபைகள் அல்ல என்று ஏற்படும்.

எனவே, தீண்டாமைத் தீர்மானங்களினால் இந்தப் புதிய காங்கிரஸ் சங்கங்கள் தங்கள் மதிப்பைக் குறைத்துக் கொள்கின்றன. அதோடு மட்டும் இருந்தால் நாம் அதிக கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் காங்கிரஸ் மகா சபையின் மீதும் மேற்படி தீர்மானங்கள் களங்கப் பூசுவதினால்தான் நாம் கவலைப்பட வேண்டி யிருக்கிறது.

ஆகஸ்டு தீர்மானம்

மேற்படி தீண்டாமைத் தீர்மானங்களுக்கு நியாயம் உண்டா, அவசியம் உண்டா என்று பார்ப்போம்.

புதிய காங்கிரஸ் சங்கங்களி லிருந்து யார் யாரை விலக்க வேண்டுமென்று தீர்மானம் செய்கிறார்கள்?

1. ஆகஸ்டு தீர்மானத்தை எதிர்ப்பவர்கள்;

2. கம்யூனிஸ்டுகள் (அதாவது பொது உடைமைக் கட்சியார்;)

3. ராயிஸ்டுகள் (அதாவது எம். என். ராய் கட்சியினர்.)

ஒவ்வொரு கூட்டமாக எடுத்துக் கொண்டு கவனிக்கலாம்:

1. 'ஆகஸ்டு தீர்மானத்தை எதிர்ப்பவர்கள்' என்று பொதுப்படையாகச் சொல்வதிலேயே ஒரு குழப்பம், — ஒரு பொய்மை, — இருக்கிறது.

ஆகஸ்டு தீர்மானம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி, இந்தியாவின் பூரண சுதந்திர உரிமையை வற்புறுத்தியது. இந்தப் பகுதியை எந்தக் காங்கிரஸ் வாதியும் எந்தக் காலத்திலும் எதிர்த்தது கிடையாது. எதிர்ப்பவர்கள் காங்கிரஸுக்கே வந்திருக்க மாட்டார்கள்.

இரண்டாவது பகுதி, மேற்படி கோரிக்கைக்கு பிரிட்டிஷார் இணங்காவிட்டால் பொதுஜனச் சட்ட மறுப்பு ஆரம்பிக்க மகாத்மா காந்திக்கு அதிகாரம் அளித்தது.

இந்த அதிகாரம் காலாவதியாகி விட்டதென்றும், ஆகையால், தீர்மானத்தின் இந்தப் பகுதி இப்போது அமுலில் இல்லையென்றும் மகாத்மாஜீ சொல்லி விட்டார்.

எனவே, 'ஆகஸ்டு தீர்மானத்தை எதிர்ப்பவர்கள்' என்று சொல்லும் போது தீண்டாமை வாதிகள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெளிவு படுத்த வேண்டும். இப்போது அமுலில் இருப்பது ஆகஸ்டு தீர்மானத்தின் முதல் பகுதிதான். அதை எந்தக்

காங்கிரஸ் வாதியும் எதிர்க்கவில்லை; எதிர்க்க மாட்டார். அதற்காக மட்டும் என்றால், விலக்குத் தீர்மானம் அவசியமே இல்லை.

ஆகஸ்டு தீர்மானத்தின் காலாவதியான இரண்டாவது பகுதியையும் இப்போது ஒப்புக் கொள்ள வேண்டும் என்பது கருத்தாயிருந்தால், அதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

அல்லது ஆகஸ்டு தீர்மானத்தை அப்போது எதிர்த்ததற்காக இப்போது விலக்குகிறது என்றால், அது அற்ப வைஷம்யத்தையும் சின்ன புத்தியையுமே காட்டுவதாகும்.

ஆகஸ்டு தீர்மானத்தை அச்சமயம் எதிர்த்த காங்கிரஸ்காரர்கள் (டாக்டர் சையத் முகம்மது உள்பட்டதான்) அதன் முதற் பகுதியை எதிர்க்கவில்லை. இரண்டாவது, பொது ஜனச் சட்ட மறுப்புப் பற்றிய பகுதியைத்தான் எதிர்த்தார்கள்.

எதிர்த்ததற்குக் காரணம், கஷ்டப்படுவதற்கோ, தியாகம் செய்வதற்கோ பின்வாங்கியல்ல. ஏனெனில், தனிப்பட்ட சட்ட மறுப்புக்கும் தாங்கள் கஷ்டப்படுவதற்கும் அவர்கள் எப்போதும் சித்தமாயிருந்தார்கள். பின் ஏன் எதிர்த்தார்கள் என்றால், பொது ஜனச் சட்ட மறுப்புக்குச் சந்தர்ப்பம் சரியில்லையென்றும், அதனால் தேசத்துக்குக் கெடுதல்தான் உண்டாகுமென்றும் நம்பியபடியினால்தான். அவர்கள் எவ்வளவு தீர்க்கதிருஷ்டியுள்ளவர்கள் என்பது பின்னால் நடந்த சம்பவங்களிலிருந்து வெளியாயிற்று. பொது ஜனச் சட்ட மறுப்பு ஆரம்பிப்பதற்கே முடியவில்லை. எத்தனையோ பேர் அளவற்ற கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளானார்கள். பலன் ஒன்றும் இல்லை. தேசத்தில் குடிகொண்டிருந்த மகத்தான உற்சாகம் பெரும் சோர்வாக மாறியது.

தீர்மானத்தை எதிர்த்தவர்கள் நியாயமாக "நாங்கள் சொன்னது பலித்தது பார்த்தீர்களா?" என்று பெருமையடித்துக் கொள்ளலாம். அவர்களுடைய தேசபக்தி அவ்விதம் பெருமையடித்துக் கொள்ளாமல் அவர்களைத் தடுக்கிறது.

மேலும், அவ்விதம் ஆகஸ்டு தீர்மானத்தின் இரண்டாவது பகுதியை எதிர்த்தவர்கள், தீர்மானம் நிறைவேறிய பிறகு அதற்கு விரோதமாக எந்தக் காரியமும் செய்யவில்லை. சட்ட மறுப்பையே ஆரம்பிக்காதபோது, அதற்கு எதிராக என்ன காரியம் செய்ய முடியும்? எதிர்த்தவர்களிலே சிலர் ஆதரித்தவர்களைக் காட்டிலும் அதிகமான அடக்கு முறைக் கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

பின்னால் வரப்போவதைத் தீர்க்க திருஷ்டியுடன் சொன்னதற்காக இப்போது அவர்களைத் தீண்டாதவர்களாகச் செய்வதென்றால், கோர்ட்டில் வியாஜ்யம் தோற்றுப் போனதற்காக வீட்டில் குழந்தைகளைப் போய் அடிக்கும் கேவலமான மனப்பான்மையையே அது காட்டுவதாகும்.

ராயிஸ்டுகள்

எம். என். ராய் என்பவர் சிவப்பா, கறுப்பா, அவர் என்ன செய்கிறார், என்ன சொல்கிறார் என்பது தமிழ் நாட்டில் யாருக்கும் தெரியாது. இங்கே அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை. எனவே, அவருடைய கூட்டத்தை விலக்கத் தீர்மானம் செய்ய வேண்டிய அவசியமும் கிடையாது.

கம்யூனிஸ்டுகள்

ஆகவே, பாக்கி இருப்பவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் என்று சொல்லப்படும் பொது உடைமைக்காரர்கள்தான். இவர்களை ஒரு கூட்டமாகக் காங்கிரஸிலிருந்து விலக்க வேண்டியது அவசியமா? அப்படி விலக்குவதற்கு அவர்கள் செய்த குற்றம் என்ன?

வெளிப்படையான காரணம் எதுவும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

பொது உடைமைக் கட்சியில் தனி மனிதர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் தியாகத்திலோ, தேசத்துக்காகக் கஷ்டங்களை அநுபவித்ததிலோ யாருக்கும் பின் வாங்கவில்லை. நமது தமிழ் நாட்டில் கம்யூனிஸ்ட் பி. சீனிவாசராவ் சுமார் பத்துவருஷ காலம் சிறையிலேயே கழித்தவர். ஸ்ரீ ராமமூர்த்தி, ஸ்ரீ பால தண்டாயுதம் போன்றவர்கள் தியாகத்திலோ கஷ்டப்பட்டதிலோ வேறு எந்தக் காங்கிரஸ் வாதிக்கும் பின் வாங்கியவர்கள் அல்ல. நிர்வாகத் திறமையிலும் நாணயத்திலும் அப்படித்தான். இப்பேர்ப்பட்டவர்களை எதற்காகக் காங்கிரஸ் சங்கங்களிலிருந்து தள்ள வேண்டும்?

இன்னும் பார்க்கப் போனால் பொது உடைமைக்காரர்களுக்குக் காங்கிரஸ் வாதிகள் நன்றி செலுத்த வேண்டு

மென்றே சொல்லக்கூடும். ஆகஸ்ட் தீர்மானத்திற்குப் பிறகு, காங்கிரஸின் முக்கிய தலைவர்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்பட்ட சமயம், அமெரி துரையின் வஞ்சக ரேடியோப் பேச்சைக் கேட்டு ஏமாந்து நம் நாட்டில் சிலர் தந்தி யறுத்தல் முதலிய காரியங்களில் ஈடுபட்டபோது, "வேண்டாம்! இது காங்கிரஸ் திட்டம் அல்ல!" என்று எச்சரித்தவர்கள் பொது உடைமைக்காரர்கள்தான். அதனால் தேசம் இன்னும் எவ்வளவோ பெருந் துன்பங்களுக்கு ஆளாகாமல் தப்பியது.

அதற்குப் பிறகும், பொது உடைமைக்காரர்கள் நெடுகிலும் "(1) காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்யவேண்டும், (2) காங்கிரஸ்-லீக் சமரசம் ஏற்பட வேண்டும், (3) தேசிய சர்க்கார் அமைக்க வேண்டும்" என்னும் இந்த மூன்று விஷயங்களையே இடை விடாமல் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

எனவே, கம்யூனிஸ்டுகள் மீது, தீண்டாமைப் பாணத்தைப் பிரயோகிப்பதற்கு எவ்வித வெளிப்படையான காரணமும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

அப்படி நாம் அறிய முடியாத மர்மமான காரணங்கள் இருந்த போதிலும், அதற்கு இம்மாதிரி விலக்குத் தீர்மானம் செய்வது அவசியம் இல்லை. காங்கிரஸ் வாதிகள் சங்கம் கூடும்போது யாரை வேண்டுமோ சேர்த்துக் கொள்ளட்டும்; யாரை வேண்டுமோ தள்ளட்டும். தனிப்பட்ட முறையில், தனிப்பட்ட காரணங்களைக் கொண்டு இப்படிச் செய்தால் அவ்வளவு கெடுதல் கிடையாது. ஆனால், கம்யூனிஸ்டு கட்சி என்று பொதுப் படையாகக் குறிப்பிட்டு விலக்குவதில் இரண்டு பெருந் தீமைகள் இருக்கின்றன:

(1) ஏற்கெனவே, இந்தியாவிலும் வெளி நாட்டிலும் சிலர், "இந்தியக் காங்கிரஸ் என்பது முதலாளிகளின் ஸ்தாபனம்" என்று அவதூறு சொல்லி வருகிறார்கள். மேற்படி அர்த்தமற்ற, அனாவசியமான தீண்டாமைத் தீர்மானம் அவர்களுடைய அவதூறுக்குப் பலம் கொடுக்கும்.

(2) இந்த யுத்தத்திற்குப் பிறகு, நல்ல செல்வாக்குடன் இருக்கப் போகும் தேசங்களில் நிச்சயமாக ருஷியாவும் ஒன்று. ருஷியாவில் பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சி நடைபெறுகிறதென்பதும் பிரசித்தம். சமாதான மகாநாடு கூடும் போது, இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் நமக்கு மற்ற நாடுகளின் அனுதாபம் எவ்வளவு உண்டோ, அவ்வளவும் நல்லது. இம்மாதிரி தீர்மானங்களினால் ருஷியாவின் அனுதாபத்தை நாம் இழந்து விடுகிறவர்கள் ஆவோம்.

ருஷியாவையும் கம்யூனிஸ்டுகளையும் துவேஷித்தவர்களில் அமெரிக்கர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் மிஞ்சியவர்கள் இல்லை. அவர்களே இப்பொழுது ருஷியாவுடன் உறவு கொண்டாடுகிறார்கள். சீனாவில் சியாங்-காய்-ஷேக்கும் கம்யூனிஸ்டுகளும் ஒற்றுமைப்பட வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அந்த ஒற்றுமை யில்லாத படியால்தான் நமது அன்புக்குகந்த சீனா இந்தப் பரிதாப நிலையில் இருந்து வருவதாகவும் தெரிகிறது. அப்படியிருக்கும் போது, இந்தியாவில் நாம் காங்கிரஸுக்கும் கம்யூனிஸ்டு கட்சிக்கும் இல்லாத வேற்றுமையையும் பிளவையும் புதிதாக உண்டாக்கி விளம்பரப்படுத்துவது ராஜதந்திர சூன்யத்திற்கு அறிகுறியாகும்.

* * *

நியாயமாக, புதிதாய் அமைக்கப்படும் காங்கிரஸ் சங்கங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால்:

(1) மகாத்மா காந்தியின் தலைமையில் பூரண நம்பிக்கையைத் தெரியப்படுத்துவது;

(2) மகாத்மா சமீபத்தில் வெளியிட்டிருக்கும் நிர்மாணத் திட்ட வேலைகளைத் தீவிரமாக நடத்தக் கங்கணம் கட்டிக் கொள்வது;

(3) இன்னும் சிறையிலும் பாதுகாப்பிலும் இருக்கும் காங்கிரஸ் வாதிகளின் குடும்பங்களுக்கு உதவி புரிவது.

தேசப் பொது நன்மை மட்டும் நோக்கமாயிருந்தால், மேற்கண்ட மூன்று தீர்மானங்களே போதும். கேவலம் முனிஸிபாலிடி, ஜில்லா போர்டு தேர்தல்களும், மற்றும் அற்பமான பதவிகளும் நோக்கமாயிருந்தால்தான், அருவருப்பு அளிக்கும் தீண்டாமைத் தீர்மானங்களைக் காங்கிரஸ் சங்கங்கள் செய்ய வேண்டும்.

சிறந்த தேசத் தொண்டாகிய அமுதம் போன்ற பாலிலே மேற்படி தீண்டாமை விஷத்தைக் கலக்க வேண்டாமென்று காங்கிரஸ் வாதிகளையும் காங்கிரஸ் அபிமானிகளையும் நாம் பெரிதும் கேட்டுக் கொள்கிறோம்.

ஐந்து ரூபாய் பரிசு: **சென்ற இதழில் வெளியான "அவசியமில்லை" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஸ்ரீமதி ஜானு, பழைய மாம்பலம், சென்னை.**

வான சஞ்சாரம்

இரசத் தேனீ

முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் இளம் வித்வான்களில் டி. ஆர். ராதாகிருஷ்ணன் ஒருவர். வேணுகானம் அவர் கையில் சிறந்து விளங்குகிறது. 14உ. சென்னை நிலையத்தில் கேட்ட அவர் கச்சேரி இனிமையாயிருந்தது. ராகங்களில் விஸ்தார நிட்டமும் உருப்படிகளில் கச்சிதமும் தென்பட்டன. சங்கராபரணம் எல்லாவற்றிற்கும் மேன்மையாயிருந்தது.

15உ. திருச்சியில் கேட்ட சிவவடிவேலு பிள்ளையின் வயலின் கச்சேரி அனுபவிக்கத் தக்கதாயிருந்தது. கல்யாணி, தோடி, ரீதிகௌளை, ஸஹானா என்ற ராகங்களைச் சரளமாய் வழங்கினார். 'கந்தனவாரி' கிருதியில் கண்ட ஸ்வரம் விறுவிறுப்பாயிருந்தது.

16உ. திருச்சி நிலையத்தில் எம். கே. கனகாம்புஜம் கற்றவைகளைக் கனிசமாய்ப் பாடினார். ஆலாபனை செய்த வராளி, கல்யாணி, தோடி, ஷண்முகப்ரியா ராகங்களில் தோடியே சிறந்து விளங்கியது. 'சிவ சிவ என ராதா' கிருதியில் நிரவலும், 'எல்லை அருமைகளும்' உருப்படியில் ஸ்வரப்ரஸ்தாரமும் ஜோராயிருந்தன.

சென்னையில் நடந்த தேவகோட்டை நாராயணய்யங்காரின் வீணைக் கச்சேரி மிகவும் உயர்ந்த ரகம். சகா ராமராவிடமும் காரைக்குடி வீணை சகோதரர்களிடமும் சிக்ஷை பெற்றவர் என்றால் அவர் ஞானத்தையும் வழியையும் பற்றிக் கேட்க வேண்டுமா? சுருதி சுத்தம், பாட்டுடன் இழையும் மீட்டு, ராகங்களில் நிதானம், அழுத்தமும் அழகும் கொண்ட பாணி: உருப்படிகளில் மிகத் தெளிவு. வேறென்ன வேண்டும்? அடாணா, சங்கராபரணம் இரண்டும் நன்கு இலங்கின. தானத்தில் ராகபாவம் ததும்பியிருந்தது. 'பிரணவஸ்பதே' 'அக்ஷயலிங்க விபோ' என்ற பெரிய உருப்படிகளை ராகபாவம் பொழிய ஒழுங்காயும் கச்சிதமாயும் வாசித்தார்.

17உ. சென்னையிலும் திருச்சியிலும் அநுபவிக்கத் தகுந்த நாலு கச்சேரிகள் நடந்தது தான் விசேஷம். திருச்சியில் எஸ். பாலசுப்ரமணியம் பாட்டைக் கேட்டவர்கள் ஒரு ஸ்திரீதான் பாடுகிறாரோ என்று சந்தேகப்பட்டிருப்பார்கள். காம்போதி, கல்யாணி, சிம்மேந்திர மத்யமம் இவைகளோடு ரவிச் சந்திரிகா என்ற அபூர்வ ராகத்தையும் வெகு கலபமாய் வழங்கினார். 'கண்ணெடுத்தாகிலும்' உருப்படியின் கண்டஸ்வரம் குஷியாயிருந்தது.

அங்கு திருப்பூர் நடேச பிள்ளையின் நாதஸ்வர வாத்யத்திலிருந்து வந்த விஜயநாகரி, உசேனி, சாமா, ஷண்முகப்ரியா ராகங்கள் கர்ணாமிருதமாயிருந்தன.

சென்னையில் டி. அமிருதவல்லி கனிப்பும், இனிப்பும் சேர்ந்த குரலில் அடாணா, கல்யாணி, முகாரி, தோடி ராகங்களைச் சரளமாய்ப் பொழிந்தார். எல்லாம் தமிழ் உருப்படிகள். சாஹித்யத் தெளிவும் ராகபாவமும் போற்றத் தக்கவை.

டி. ஆர். சோமசுந்தர முதலியாருக்குச் சற்றுக் கன சரீரமாயினும் நல்ல உருப்படி. மாயாமாளவ கௌளை ராகம் மனம் கவர்ந்தது.

நமது வித்வான்களில் சிலர் கச்சேரிகள் வாய்த்தால் நமது யோகம்; இல்லாவிடில் துரதிர்ஷ்டம். கோட்டு வாத்யம் என். நாராயணய்யங்கார் அந்த ரகத்தைச் சேர்ந்தவர். 18உ. சென்னையில் கேட்ட அவர் கச்சேரி எதிர் பார்த்தபடி வாய்க்கவில்லை. தேவ காந்தாரி ஒன்றுதான் உண்மை நாராயணய்யங்காரைக் காட்டியது.

அன்று திருச்சியில் கேட்ட லால்குடி நீலமேகம் பிள்ளையின் வயலின் வாசிப்பு பாணியாயிருந்தது. கரஹரப்ரியா உருப்படியில் வெகு நேரம் ஸ்வரப்ரஸ்தாரத்தை வாரிக் கொட்டினார்.

சென்னையில் நாகர்கோவில் எஸ். ஹரிஹரன் ஆனந்தபைரவி, ஹம்சாநந்தி ராகங்களை வெகு விமரிசையாய்ப் பாடினார். 'ராம நன்னுப்ரோவ' கிருதியில் கண்ட நிரவல் ரொம்ப ஜோராயிருந்தது. அன்று அங்கு கேட்ட டி. என். விஜயலக்ஷ்மியும் இனிய சாரீரத்தில் சங்கராபரணம், கல்யாணி ராகங்களை நல்ல பாணியுடன் அநாயாசமாய்ப் பொழிந்தார்.

20உ. திருச்சியில் பழம் பெரும் வித்வான் மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர் வாசித்த வயலின் கச்சேரியே சென்ற வாரக் கச்சேரிகளுக்குச் சிகரமாயிருந்தது. அவர் வாத்ய நாதம் சற்று அடங்கியதாயினும் குளிர்ச்சியாயிருந்தது. ஸரஸ்வதி ராகம் தனிமணமாய் இருந்தது. நிதானமான பிடிகளுடன் பைரவி விஸ்தாரமாய் வெளிவந்தது. பல்லவி ராகமான கேதாரகௌளையில் தம் கைச் சரக்கு முழுவதையும் காட்டினார். அசாவேரி, காபி, அமீர் கல்யாணி கானடா ராகமாலிகையுடன் கச்சேரியை இனிது முடித்தார். வாசித்ததெல்லாம் சம்பிரதாய முறை. நவீன நாஸுக்கையோ, முடுக்கையோ அவரிடம் எதிர் பார்க்க வேண்டியதில்லை.



தேவகோட்டை நாராயணய்யங்கார்

தமிழ் மக்களின் நன்றி

மூப்பது வருஷத்துக்கு முன்னால் சென்னை மாகாணம் "இருளடைந்த மாகாணம்" என்று பெயர் பெற்றிருந்தது. அந்த நாளில் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் மற்ற மாகாணங்களுக்குப் பின் வாங்கியிருந்தது. "நான் தமிழன் அல்லது மதராஸி!" என்று சொல்லிக் கொள்வதற்கே அநேகம் பேர் வெட்கப்பட்டார்கள்.

அப்பேர்ப்பட்ட காலத்தில், ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியார்,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று பாடினார். அதோடு நிறுத்தி விட்டாரா? இல்லை!

"எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!"

என்றும் பெருமிதத்துடனே கூறினார்.

அன்று முதல், தமிழர்களுக்குத் தமிழ்ப் பாஷையிடம் அன்பு பெருகிற்று. தமிழ் நாட்டினிடம் பக்தி வளர்ந்தது. 'தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாய்' என்று கும்பிடவும் ஆரம்பித்தார்கள். "நான் தமிழ் நாட்டான்" என்று பெருமையுடன் மார் தட்டிக்கொண்டு கூறவும் தொடங்கினார்கள். அத்தகைய தேசிய மகா கவிக்கு நமது நன்றியைச் செலுத்த வேண்டாமா? நன்றி உணர்ச்சிக்குப் பெயர்போன தமிழர்கள் தங்களுக்கு இத்தகைய பெருபகாரம் செய்தவர் விஷயத்தில் நன்றி மறந்து விடுவார்களா?

ஒருநாளும் மாட்டார்கள் என்பது "பாரதி ஞாபகச் சின்ன நிதி"க்குப் பணம் சேர்ந்து வரும் பான்மையிலிருந்து தெரியவருகிறது.

காலாபுறமிருந்தும் சிறு தொகைகளும் பெருந் தொகைகளும் திமுதிமு வென்று வந்து கொண்டிருக்கின்றன.

இவற்றுள் இந்த வாரத்தில் விசேஷமாகக் குறிப்பிட வேண்டியது, எட்டயபுரம் மகா ராஜா அவர்களின் அரிய நன்கொடையாகும்.

எட்டயபுர ராஜ வம்சத்தார் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் பரம்பரையாக ஆதரித்தவர்கள். அந்த வம்சத்தில் இப்போது ராஜாவாக விளங்குகிறவர் வயதிலே இளையவர். ஆனால் அறிவிலும் ஆராய்ச்சியிலும் முதிர்ச்சி பெற்றவர். இவருடைய தமிழபிமானத்தைக் குறித்துப் "பாரதி பிறந்தார்!" என்னும் கட்டுரையில் எழுதப் பட்டிருக்கிறது.

பாரதியார் நிதிக்கு எட்டயபுரம் ராஜா அவர்கள் ரூ. 501 அனுப்பியிருக்கிறார்கள் என்னும் செய்தியை இங்கே குதூகலத்துடன் வெளியிடுகிறோம்.

அரண்மனை,
எட்டயபுரம்,
20—11—44.

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு.

எட்டயபுரம் மகாகவி ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி அவர்கள் ஞாபகார்த்தமாக ஒரு நிதி ஏற்படுத்தி மேற்படியார் ஞாபகம் அவர் பிறந்த இடமாகிய எட்டயபுரத்தில் என்றும் நிலைத்தோங்கும்படியான ஏற்பாடுகளைச் செய்யத் தாங்கள் முன் வந்ததைப் பற்றி மிகவும் பாராட்டுகிறேன். மேற்படி முயற்சியைத் தாங்கள் எடுத்துக் கொண்டது மிகவும் பொருத்தமானது என்பது என்னுடைய மனப்பூர்வமான அபிப்பிராயம். (சமீபத்தில் நடந்த) என் 30-வது பிறந்த நாள் கொண்டாட்டத்தை உத்தேசித்து மேற்படி நிதிக்கு ரூ. 501 நன்கொடையாக இத்துடன் செக் அனுப்பியிருக்கிறேன். இன்னும் என்னாலான உதவியை வேண்டும்போது செய்யச் சித்தமாக இருக்கிறேன்............

[signature]

நாரான நன்கொடையுடன் கூடிய மேற்படி கடிதத்துக்காகவும், மேலும் வேண்டிய உதவி செய்வதாக வாக்களித்திருப்பதற்காகவும் எனது மனமார்ந்த நன்றியை ராஜா அவர்களுக்குச் செலுத்துகிறேன். எட்டயபுரத்தில் ஞாபகச் சின்னத்தைத் தகுந்தபடி அமைப்பதற்கு அவர்களுடைய உதவி மேலும் மேலும் தேவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

* * *

ஆனால் நமது தேசிய மகா கவியைத் தமிழ் மக்கள் மட்டுந்தான் பாராட்டுகிறார்கள் என்று நினைக்க வேண்டாம்.

வெள்ளித் திரையில் புகழ்பெற்ற சித்தூர் ஸ்ரீ வி. நாகய்யா அவர்கள் சென்ற வாரத்தில் என்னிடம் ரூ. 51-க்குச் செக் கொடுத்தபோது, "இந்தக் காரியத்துக்கு உங்களிடம் நான் பணம் வாங்குவது நியாயமா?" என்று கேட்டேன். ஸ்ரீ நாகய்யாவுக்கு வந்ததே கோபம்! "அது எப்படி நீங்கள் கேட்கலாம்? எல்லைப்புறத்து ஜில்லாவாகிய சித்தூர்க்காரன்தானே நான்? காஞ்சிபுரம் நாயனாப் பிள்ளையிடமும் மகாராஜபுரம் விசுவநாதய்யரிடமும் சங்கீதம் கற்றுக்கொண்டவன்தானே? ஆந்திர நாட்டில் எனக்கு எவ்வளவு பாத்தியதை உண்டோ, அவ்வளவு தமிழ் நாட்டிலும் உண்டு. அப்படியே நான் பக்கா ஆந்திரனாயிருந்த போதிலும், பக்கத்து மாகாணத்துக் கவியைப் பாராட்டவும் மரியாதை செய்யவும் பாத்தியதை இல்லையா? அதிலும், நான் பாரதியாரின் பாடல்களைக் கேட்டு அநுபவித்திருப்பதனால்......!" என்று சரமாரியாகக் கேட்டு என்னைத் திக்குமுக்காடச் செய்து விட்டார். வாஸ்தவந்தான்; தியாகய்யாவின் மீது எப்படித் தமிழ் நாட்டுக்குப் பாத்தியதை உண்டோ அப்படி நாகய்யாவின் மீதும் உண்டு; தமிழர்கள் தியாகய்யாவைக் கொண்டாடுவதுபோல், ஆந்திரர்கள் பாரதியாரைக் கொண்டாடுவதும் முறைதான். ஆகவே, ஸ்ரீ நாகய்யாவின் ரூ. 51-யும் நிதியில் சேர்த்துக் கொண்டேன்.

இதெல்லாவற்றையும் பார்க்கும்போது, எட்டயபுரத்தில் பாரதியார் ஞாபகச் சின்னம் பிரமாதமாக அமையப் போகிறதென்றுதான் தோன்றுகிறது.

இந்த வாரத்து வசூல்

ராஜா ஜெகவீர ராம முத்துக் குமார வெங்கடேசுவர எட்டப்ப நாயக்கர் அய்யன், எட்டயபுரம்	ரூ. 501—0—0
பம்பாய்த் தமிழன்பர்கள் மாதுங்கா (ஸ்ரீ எச். சிவராம கிருஷ்ண ஐயர் மூலம்)	500—0—0
ஸ்ரீ சங்கரலிங்க ஐயர், மானேஜிங் டைரக்டர், இண்டோ கமர்ஷியல் பாங்க்	100—0—0
சித்தூர் வி. நாகையா, தியாகராஜநகர்	51—0—0
ஸ்ரீ வி.என். குமாரஸ்வாமி, தண்டையார்பேட்டை	50—0—0
ஸ்ரீமதி எஸ். எம். ஜானகி, ராணிகாட், ஐக்யமாகாணம்	31—0—0
அகிலபாரத சர்க்கா சங்கக் கிளை (மூலம்,) காஞ்சிபுரம்	30—4—0
கோவை 'இளைஞன்' காரியாலயத்தாரும் வாசகர்களும் (ஸ்ரீ சாரதி மூலம்)	26—0—0
ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணசாமி பாகவதர், தஞ்சாவூர்	25 0 0
ஸ்ரீ வீர சிதம்பரம், ஆசிரியர், 'நவயுவன்', சென்னை	25—0—0
ஸ்ரீ ஷண்முக சுந்தரம், அரவிலை, சிக்கில்	25—0—0
ஸ்ரீ ஆர். கே. மூர்த்தி, லாயிட்ஸ் ரோட், சென்னை	25—0—0
அகில பாரத சர்க்கா சங்கம் (மூலம்), வேதாரண்யம்	22—8—0
ஸ்ரீமதி லக்ஷ்மி முத்துசாமி, ஜி. டி. சென்னை	20—0—0
கொடுமுடி ஹாஸ்டல் மாணவர் சங்கம் (ஸ்ரீ கே. பி. முத்துஸ்வாமி மூலம்)	19—0—0
ஸ்ரீ என். சீனிவாஸய்யரும் குடும்பத்தாரும், ஸெகந்தராபாத்	15 2 0
ஸ்ரீ ஆர். லக்ஷ்மணன், திருநெல்வேலி	15 0 0
ஸ்ரீ எம். பத்மநாபன், மேட்டூர் கெமிகல்ஸ், மேட்டூர்	12—0—0
அகில பாரத சர்க்கா சங்கத் தொண்டர், வீரவநல்லூர்	11—12—0
ஸ்ரீ தேவதா அண்டுகோ சென்னை	11—0—0
ஸ்ரீ மு. ம. நாராயணன் செட்டியார், உலகம்பட்டி	10—0—0
ஸ்ரீமதி ஜயம்மாள் மாதவாச்சாரி, நாகப்பட்டணம்	10—0—0
ஸ்ரீ கே.கே.பி. வேல்சாமி, உசிலம்பட்டி	10—0—0
ஜனாப் டி. ஏ. காதர்சாயபு, ஜி. டி., சென்னை	10—0—0
ஸ்ரீ பி. சுப்பையா, எட்டயபுரம்	10—0—0
ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி வீரராகவன், கும்பகோணம்	10—0—0
டாக்டர் எஸ். ராஜகோபாலன், தியாகராய நகர்	10—0—0
ஸ்ரீ எம். ஆர். மணி ஐயர், ஏகாம்பரக் குப்பம், நகரி	10—0—0
ஸ்ரீ எஸ். துரைராஜ், திருநெல்வேலி	10 0 0
ஸ்ரீ எம். தியாகராஜ ஐயர், ஸெகந்தராபாத்	10—0—0
ஸ்ரீ டி. சீனிவாசன், ஸெகந்தராபாத்	10—0—0
சுவாமி சுத்தானந்த பாரதியார் வாசகசாலை, சௌகார் பேட்டை, சென்னை.	6—0—0

மூனூரி ஈ.மூனிசாமி ஐயர், பாரதியார் தமிழ் வளர்ச்சிச் சங்கம், பறங்கிப்பேட்டை 6—0—0

ரூ. 5—0—0 வீதம் நன்கொடை அனுப்பிய நேயர்கள்:

ஸ்ரீமதிகள் வேதா ஸ்ரீனிவாசன், கோபிச்செட்டிப்பாளையம்; ராஜலக்ஷ்மி அனந்தராமன், லாயிட்ஸ் ரோட், சென்னை; ஆர். துரைசாமி நாயுடு, எட்டயாபுரம்; ஏ. வி. சாலப்பன், வண்ணாரப்பேட்டை; எம். வீரபாகு மாணிக்கவாசகம், திருச்சி; ஆர். முருகையா, கர்க்கி; ச. கிருஷ்ண முதலியார், கடுவிற்பட்டி; ஏ. ஆர். கிருஷ்ண ஐயர், ஜி. டி. சென்னை; எச். ஆர். ராமனுஜன், பம்பாய்; டாக்டர் என். வி. சோமசுந்தரம், வேதாரண்யம்; வி. கே. ராமமூர்த்தி, தொட்டியம்; வி. எஸ். கோலப்பன், கலைமகள் ஏஜண்ட், திருவனந்தபுரம்; எஸ். பாலசுந்தரம், ஈரோடு; எஸ். டி. சம்பந்தம், வல்லம்படுகை; அபிமானி, திருச்சி; துறையூர் ராஜகோபால சர்மா, சங்கீத வித்வான், சென்னை; கே. ராமஸ்வாமி, திண்டுக்கல்; பன. எம். சேதுராமன், தூத்துக்குடி; ஆலே. நாராயணன், பம்பாய்; எஸ். கே. நட்சத்திரையம், தாராபுரம்; ஸ்ரீ கே. எஸ். கோபாலசாமி ஐயர், ஆனந்தா லாட்ஜ், தஞ்சாவூர்.

ரூ. 4—0—0 நன்கொடை: ஸ்ரீ கே. ராமராவ், கஸ்தூர்பா கழகம், தாம்பரம்; ஸ்ரீ ஏ. வி. எஸ். மணியன், ராகலானு, இலங்கை.

ரூ. 3—0—0 நன்கொடை: ஸ்ரீமான் எஸ். சுந்தரம் ஐயர், சங்கீத வித்வான், சென்னை; எம். ராமச்சந்திர ஐயர், சென்னை; இ. ஆர். வெங்கடராமன், சிட்டகாங்; மணி அரசு செந்தமிழ்க் கழகம், திருநெல்வேலி; வி. எம். சங்கரன், கடலூர்; டி. கே. சுப்பிரமண்யம், கல்கி ஏஜண்ட், தஞ்சாவூர்; மூ. சிங்காரம் செட்டியார், மதுரை.

ரூ. 2—0—0 நன்கொடை: ஸ்ரீ எஸ். ராமையர், திருவனந்தபுரம்; கே. கோபாலரத்னம், அனந்தபூர்; எஸ். ராஜகோபால ஐயர், கல்கி ஏஜெண்ட், கடலூர்; பி. கே. கிருஷ்ணமூர்த்தி, பின்ன வாசல்; கே. சேஷன், பூனா; பி. வி. ஸ்ரீனிவாஸன், தாம்பரம்; அபிமானி, வலையப்பட்டி; கே. முத்து கிருஷ்ணன், செட்டிமேடு; பி. ஆர். ராமலிங்கம், பய்யனூர்; கே. கிருஷ்ணன், கடையநல்லூர்; எஸ். டி. சுந்தரேசன், சிலுக்குவார் பட்டி; ஐ. சின்னுக் கண்ணு, சிலுக்குவார்பட்டி; ரா. சர்க்கரை, ஸ்ரீ வில்லிபுத்தூர்; க. ப. விசுவநாதன், செற்குப்பை; க. ப. அண்ணாமலைச் செட்டியார், செற்குப்பை; நா. ஷண்முகம், மதுரை, கே.பி. பெருமாள், பங்களூர்.

ரூ. 1—0—0 நன்கொடை:—எஸ். எம். பாஜு, ஜி. டி. சென்னை; கே. எஸ். எம். லிங்கராஜு, மேட்டுப்பாளையம்; ஆர். நாராயணஸ்வாமி பிள்ளை, போதனூர்: பாரதஇளைஞர் சங்கம், தர்மபுரி; வி. எஸ். மணி, தர்மபுரி; எஸ். காந்திமதி நாதபிள்ளை, போதனூர்; என். சங்கர பாண்டியன், செட்டிமேடு; ஜி. ஆனந்தன், ஹைதராபாத்; ஆர். தேவராஜன், பூலம்பாடி. திருவல்லிக்கேணி நேயர்கள்: எம். நடராஜன், கா. சிவசங்கரன், ஏ. தங்கவடிவேல், கா. கணேசன், ஆறுமுகம், கா. சின்னசாமி, தெ. ச. ராஜா, என். சண்முகம், சி. கு. பரமசிவன், செ. செ. அய்யாவு, மு. ஜெகதீசன், இ. சங்கரன், எம். எம். இஸ்மாயில், க. ச. ராஜகோபாலன், ஆர். சுப்ரமண்யன், ரா. வே. ரமணி, க. கிருஷ்ணன், ஆ. ராமனுதன், மு. செல்லையா, வேந்தன்பட்டி; எம். ராமசாமி செட்டியார், புதுப்பட்டி; மு. நாகமுத்துப் பிள்ளை, மதுரை; கா. வேலாயுதம் பிள்ளை, மதுரை; ராம. மா. செல்லையா பிள்ளை, மதுரை; பி. கே. நடராஜ ஐயர், மதுரை; கே. எஸ். டி. செல்லப்ப ஐயங்கார், போதனூர்; வி. கே. கிருஷ்ணமூர்த்தி, போதனூர்; ஸ்ரீ ராமலிங்கம், போதனூர்; வி. ராமன் முதுகுளத்தூர்; மாவாலி ராஜேந்திரம். ஸ்ரீவைகுண்டம்; பி. வி. சிவராமன் வத்தலக்குண்டு; வி.கமலம், வத்தலக்குண்டு.

ஸ்ரீமான்கள் வி. எஸ். சரவணன், எழும்பூர், ரூ. 2—3—0; கே. ஆர். எஸ். காசியப்பன், காசியபுரம் 1—4—0; ஆர். முனியப்பன், முனிஸிபல் ஹைஸ்கூல், திண்டுக்கல் 1—2—0; ஓர் அபிமானி, திருவல்லிக்கேணி, 0—4—0

குளூர்ப்பேட்டை "கல்கி" ஏஜெண்டு மூலம் வரவு	10—0—0
திருநெல்வேலி "கல்கி" ஏஜெண்டு மூலம் வரவு	35—0—0
ஹைதராபாத் "கல்கி" ஏஜெண்டு மூலம் வரவு	56—0—0
மதுரை "கல்கி" ஏஜெண்டு மூலம் வரவு	47—0—0

(கடைசியில் கண்ட நான்கு தொகைகளுக்கும் விவரம் அடுத்த இதழில் வெளியாகும்.)

ஏற்கெனவே வசூல் ரூ. 2122—8—9

ஆக மொத்தம் வசூல் ரூ. 4115—15—9

சிவகாமியின் சபதம்



அத்தியாயம் 34

வரவேற்பு

வாத்திய கோஷத்தையும் ஆரவாரத்தையும் கேட்டு ஆயனரும் அத்தையும் சிவகாமி — மாமல்லர் இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஜனக் கூட்டம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்தில் கூட்டத்திலிருந்து ஒரு தனி உருவம் வெளிப்பட்டு முன்னதாக விரைந்து வந்தது. அந்த உருவத்தைப் பற்றி எவ்வித சந்தேகமும் ஏற்பட நியாயமில்லை. குண்டோதரனுடைய உருவந்தான்.

ஜனக்கூட்டத்தையும் முன்னதாக வந்த குண்டோதரனையும் பார்த்ததும் குமார சக்கரவர்த்திக்குப் பலமான கோபம் உண்டாயிற்று. 'ஆஹா! இந்த முட்டாள் என்ன காரியம் செய்தான்? 'குமார சக்கரவர்த்தி வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டார்; இங்கே வந்து ஒதுங்கியிருக்கிறார்!' என்று ஊரிலே சொல்லியிருக்கிறான். இவ்விடம் தங்கும் சொற்ப நேரத்தைச் சிவகாமியுடன் பேசிக் கொண்டு கழிக்கலாம் என்று நினைத்தால், அதற்கு இடமில்லாமல் செய்து விட்டானே? சிவகாமிக்குச் சொல்ல வேண்டியது, கேட்க வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறதே? அதெல்லாம் முடியாமல் போய்விடுமே? கிராம வாசிகளின் உபசாரத்துக்கு உட்பட்டாக வேண்டுமே? சைனியமின்றி, பரிவாரமின்றித் தான் வந்திருப்பது பற்றியும், ஆயனர் - சிவகாமி தன்னுடன் இருப்பது பற்றியும் அவர்கள் என்ன நினைப்பார்கள்? — ஆ! இந்த மூடன் குண்டோதரன் எவ்வளவு சங்கடமான நிலையில் தன்னைக் கொண்டு வந்து வைத்து விட்டான்!

ஆயினும், அவனிடம் தற்போது கோபம் கொள்வதில் பயனில்லை. நடந்த தவறு நடந்து விட்டது! எப்படியோ நிலைமையைச் சமாளித்துக் கொள்ள வேண்டும்......

இப்படிச் சிந்தனை செய்து கொண்டு சற்றுப் பின்னாலேயே மாமல்லர் ஒதுங்கி நின்றபோது, நெருங்கி வந்த குண்டோதரன் தம்மிடம் வராமல் ஆயனரிடம் நின்று அவர் காதோடு ஏதோ சொல்வதைப் பார்த்தார். பிறகு ஆயனர் சிவகாமியின் காதோடு ஏதோ சொன்னார். இருவரும் மாமல்லர் இருந்த திசையை நோக்கிப் புன்னகை புரிந்தார்கள்.

ஜனக் கூட்டம் இதற்குள் அருகில் வந்து விட்டது. கூட்டத்தின் தலைவர்களாகத் தோன்றிய இருவர், பூரண கும்பத்துடனும், புஷ்பம், தாம்பூலம் வைத்திருந்த தட்டுடனும் முன்னால் வந்தார்கள். குண்டோதரன் அவர்களுக்கு ஆயனரைச் சுட்டிக் காட்டினான். ஆயனரிடம் பூரண கும்பமும்,

கல்கி

சிவகாமியிடம் புஷ்பத் தட்டும் அளிக்கப்பட்டன.

பின்னர் கிராமத் தலைவர்களில் ஒருவர் கூறினார்:—

"உலகத்தில் எப்பேர்ப்பட்ட தீமையிலும் நன்மை ஒன்று உண்டு என்பார்கள். அதுபோல், திருப்பாற்கடல் ஏரி உடைப்பு எடுத்ததினால், எங்கள் கிராமம் பாக்கியம் செய்ததாயிற்று. சிற்ப சக்கரவர்த்தி ஆயனரையும், பரத சாஸ்திர ராணி சிவகாமி தேவியையும் வரவேற்கும் மகத்தான அதிர்ஷ்டம் எங்களுக்கு வாய்த்தது. வரவேண்டும்! சில காலம் இந்தப் புண்ணியம் செய்த கிராமத்தில் தங்கியிருக்க வேண்டும். உங்களுக்கும் உங்கள் சீடர்களுக்கும் எங்களால் முடிந்த சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறோம். எத்தனை நாள் முடியுமோ அத்தனை நாள் எங்கள் விருந்தினர்களாய்த் தங்கி இருக்க வேண்டும்!"

இவ்விதம் கிராமத் தலைவர் கூறி முடித்ததும், ஆயனர், "மகா ஜனங்களே! உங்களுடைய அன்புக்கு நானும் என் குமாரியும் என் சீடர்களும் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்! வெள்ளம் வடிகிற வரையில் உங்களுடைய விருந்தாளிகளாக நாங்கள் இருந்துதான் தீர வேண்டும்!" என்றார்.

பிறகு, எல்லாரும் கிராமம் இருந்த திசையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

எல்லாருக்கும் பின்னால் தங்கியிருந்த மாமல்லரோ ஆச்சரியக் கடலில் மூழ்கியிருந்தார். அவர் எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறாக எல்லாம் நடந்தது. சிவகாமி அவ்வப்போது கடைக் கண்ணால் பார்த்துப் புன்னகை செய்ததைத் தவிர, மற்றப்படி அவரைக் கவனிப்பாரையே காணோம்.

அவருடைய வியப்பிலே மகிழ்ச்சியும் கலந்திருந்தது என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா? "குண்டோதரனை முட்டாள் என்று கருதியது எவ்வளவு தவறு? அவனுடைய புத்திக் கூர்மையே கூர்மை!" என்று அவர் எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் போதே, "பிரபு! ஏன் நிற்கிறீர்கள்? போகலாம் வாருங்கள்!" என்று குண்டோதரன் அவர் பின்னாலிருந்து காதோடு சொன்னான்.

"என்னை அவர்கள் அழைக்கவில்லையே, குண்டோதரா! எப்படிப் போவது?" என்றார் மாமல்லர்.

"ஏன் அழைக்கவில்லை? 'உங்களுடைய சீடர்களுக்கும் வேண்டிய சௌகரியம் செய்து கொடுக்கிறோம்!' என்று சொன்னார்களே? காதில் விழவில்லையா? நீங்களும் நானும் ஆயனரின் சீடப் பிள்ளைகள்!" என்றான் குண்டோதரன்.

"சத்ருக்னரின் ஆட்கள் எல்லாம் உன்னைப் போலவே கெட்டிக்காரர்களாய் இருப்பார்களா, குண்டோதரா! அப்படியானால், ஆயிரம் புலிகேசிகள் படையெடுத்து வந்தாலும் நாம் ஜயித்து விடலாம்!" என்றார் மாமல்லர்.

அவரும் குண்டோதரனும், ஜனக் கூட்டத்துக்குச் சற்றுப் பின்னால் தங்கிச் சென்றார்கள்.

மாமல்லர் அப்படி ரொம்பவும் பின் தங்கி விடவில்லையென்பதையும், சிவகாமியின் கடைக் கண் பார்வையைத் தெரிந்து கொள்ளக் கூடிய தூரத்திலேயே போனார் என்பதையும் உண்மையை முன்னிட்டு நாம் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

* * *

கிராமத்துக்குக் கிட்டத் தட்டப் போனபோது ஜனக்கூட்டம் இன்னும் அதிகமாயிற்று. ஊரே திரண்டு வந்து விட்டதுபோல் தோன்றியது. ஊருக்குள்ளே ஒவ்வொரு வீட்டு வாசலிலும் விதவிதமான வர்ணக் கோலங்கள் போட்டு அலங்கரித்திருந்தார்கள். ஊர்வலத்தை ஆங்காங்கு நிறுத்தி, பெண்மணிகள் சிவகாமிக்கு ஆலாத்தி எடுத்தார்கள். கடைசியில், கிராமத்தின் கீழ்ப்புறத்திலிருந்த சிவாலயத்துக்கு அனைவரும் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆலயம் சின்னதுதான்; ஆனால் அழகாயும் சுத்தமாயும் இருந்தது. செங்கல் சுண்ணாம்பினால் கட்டப்பட்ட வெளி மதிலைத் தாண்டி உள்ளே போனதும், விசாலமான பிராகாரம்

காணப்பட்டது. பிராகாரம் ஒரு புல், பூண்டு இல்லாமல் வெகு சுத்தமாயிருந்தது.

பலி பீடம், துவஜஸ்தம்பம், நந்தி மேடை ஆகியவற்றைத் தாண்டிச் சென்றதும், அடியார்கள் நின்று தரிசனம் செய்வதற்குரிய அர்த்த மண்டபம் இருந்தது. இதன் கூரை ஓட்டினால் வேயப் பட்டிருந்தது. அர்த்த மண்டபத்துக்கு அப்பால் கர்ப்பக் கிரஹம். இதன் மேலே, அப்போது புதிதாகத் தமிழகத்தில் வழக்கத்துக்கு வந்து கொண்டிருந்த தூங்கானை மாடம் அழகாக விளங்கிற்று.

கோவிலுக்குள் நுழையும் போதே சாம்பிராணி, சந்தனம் இவற்றின் ஸுகந்தமும், பன்னீர், பாரிஜாதம், செண்பகம், தாமரை முதலிய திவ்ய புஷ்பங்களின் நறுமணமும், நெய் விளக்கின் புகை, உடைத்த தேங்காய், உரித்த வாழைப்பழம், நாரத்தம் பழ ரசம், பிழிந்த கரும்பின் ரசம் ஆகியவற்றின் ஸுவாசனையும் கலந்து வந்து, ஏதோ ஒரு தூய்மையான தனி உலகத்துக்குள் வந்தது போன்ற உணர்ச்சியை உண்டாக்கின.

ஆயனரும் சிவகாமியும் ஆயனரின் சீடர்களும் அர்த்த மண்டபத்துக்குள் வந்ததும் சுவாமிக்குத் தீபாராதனை நடந்தது. பின்னர் குருக்கள் அபிஷேக தீர்த்தமும் விபூதிப் பிரஸாதமும் கொடுத்தார். அதே மாதிரி அம்பிகையின் சந்நிதியிலும் தீபாராதனை நடந்து குங்கும புஷ்பப் பிரஸாதங்கள் அளிக்கப்பட்டன.

எல்லாம் ஆனபிறகு, அவர்களை வரவேற்ற கிராமத் தலைவர், "ஆயனரே! தங்களுடைய குமாரியின் நடன வித்தைத் திறமையைக் குறித்து நாங்கள் ரொம்பவும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஏதோ எதிர்பாராத எங்கள் பாக்கிய வசத்தினால் நீங்கள் இந்த கிராமத்துக்கு வரும்படி நேர்ந்தது. உங்களுக்கு இன்றைக்குத் தொந்தரவு கொடுக்க மனம் இல்லை. நாளைய தினம் தங்கள் குமாரி இந்தச் சந்நிதியில் நடனம் ஆடி எங்களை மகிழ்விக்க வேண்டும் என்பது இங்கே கூடியிருக்கும் இந்த ஊர் வாசிகளின் பிரார்த்தனை!" என்றார்.

இந்தத் திடீர்த் தாக்குதல் ஆயனரைத் தூக்கிவாரிப் போட்டது. அவர் மறுமொழி என்ன சொல்வதென்று தெரியாதவராய், சிவகாமியை நோக்கினார். கிராமத் தலைவரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமிக்கும், அவருடைய கடைசி வாக்கியம் 'சுருக்' என்றது. அவளுடைய முகத்தைப் பார்த்ததும் ஆயனருக்கு மனக் கலக்கம் அதிகமாயிற்று. அவர்கள் நின்று கொண்டிருந்த அர்த்த மண்டபத்தில் மாமல்லர் எங்கே நிற்கிறார் என்பதைச் சிவகாமி ஏற்கெனவே தெரிந்து கொண்டிருந்தாள். இது வரையில் வெகு ஜாக்கிரதையாக அந்தப் பக்கமே பார்க்காமலிருந்தாள். இப்போது அவளுடைய கண்கள் பளிச்சென்று மாமல்லருடைய முகத்தை ஏறிட்டு நோக்கின. சிவகாமியின் கண்களில் தோன்றிய கேள்விக்கு, மாமல்லரின் முக மலர்ச்சியும் அவருடைய கண்களில் தோன்றிய குதூகலமும் மறுமொழி தந்தன. இவ்வளவும் ஒரு கணத்திலே நடந்து விட்டது. மறு கணத்தில் சிவகாமி ஆயனரை நோக்கி, "ஆகட்டும், அப்பா!" என்று மெல்லிய குரலில் கூறினாள்.

"ஆயனரே! தங்கள் அருமைக் குமாரியின் மறுமொழி எங்கள் காதிலும் விழுந்தது. மிகவும் சந்தோஷம்!" என்றார் கிராமாதிகாரி. இதற்குள்ளே, மறுநாள் நடனம் ஆடச் சிவகாமி சம்மதித்து விட்டாள் என்ற செய்தி பரவி, அர்த்த மண்டபத்திலும் வெளிப் பிராகாரத்திலும் நின்று கொண்டிருந்த ஜனங்களுக்குள் கலகலப்பு ஏற்பட்டு, விரைவில் அது ஆரவாரமாக மாறியது.

இந்தக் கலகலப்புக்கும் ஆரவாரத்துக்கும் இடையே, ஆயனர் கிராமத் தலைவரைப் பார்த்துக் கூறினார்:—

"ஐயா! சிவகாமியின் நடனப் பயிற்சி நின்று எட்டு மாதமாகிறது. ஆனாலும் பாதகமில்லை. நீங்கள் காட்டும் அன்பானது குழந்தையின் மனத்தை ரொம்பவும் கவர்ந்திருக்கிறது. ஆகையினால், நாளைக்கு உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கச் சம்மதிக்கிறாள். ஆனால் சிவகாமியின் நடனக் கலையைப் பற்றி நீங்கள் இவ்வளவு தூரம்

தெரிந்து கொண்டிருப்பது எனக்கு வியப்பாயிருக்கிறது. உங்களுக்கு எவ்விதம் தெரிந்ததோ? ஒருவேளை என் சிஷ்யன் குண்டோதரனுடைய வேலையோ இது?" என்று கூறி ஆயனர் குண்டோதரனை நோக்கினார். குண்டோதரனோ தலை குனிந்த வண்ணமிருந்தான்.

அப்போது, கிராமத் தலைவர் கூறினார்:—"இல்லை, ஐயா, இல்லை! உங்களுடைய சிஷ்யன் நீங்களும் உங்கள் குமாரியும் வந்திருப்பதாக மட்டுந்தான் கூறினான். தங்கள் குமாரியைப் பற்றி ஏற்கனவே எங்களுக்கு நாவுக்கரசர் பெருமான் தெரிவித்திருந்தார்..."

"ஆஹா! நாவுக்கரசர் இங்கே வந்திருந்தாரா? உங்க



னுடைய பாக்கியந்தான் என்ன?" என்று ஆயனர் வியந்து கூறினார்.

"நாங்கள் பாக்கியசாலிகள் தான். ஆறு மாதத்துக்கு முன்னால் நாவுக்கரசர் பெருமான் இந்தப் புண்ணியம் செய்த கிராமத்துக்கு வந்தார். அவருடைய திருக்கரத்தில் உழவாரப் படை பிடித்து இந்த ஆலயத்தின் பிராகாரத்தைச் சுத்தம் செய்தார். நாங்களும் அந்தத் திருப்பணியில் ஈடுபட்டோம். அன்றிரவு இந்தச் சந்நிதியில் நாவுக்கரசர் பெருமானின் சீடர்கள் அமுதொழுகும் தமிழ்ப் பதிகங்களைப் பாடினார்கள். அவற்றில்,

முன்னம் அவனுடைய
நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணம் கேட்டாள்



என்னும் பதிகத்தைப் பாடியபோது, நாவுக்கரசர் பெருமானின் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வடிந்தது!......"

இவ்விதம் கிராமத் தலைவர் கூறி வருகையில், ஆயனர், சிவகாமி, மாமல்லர் ஆகிய மூன்று பேருக்கும் ஏககாலத்தில் ரோமாஞ்சலி உண்டாயிற்று. கிராமத் தலைவர் மேலும் கூறினார்:—

"பதிகம் முடிந்த பிறகு பெருமான் எங்களுக்குச் சிவகாமி தேவியின் நடனத்தைப் பற்றிக் கூறினார். தாங்கள் தங்கள் குமாரியுடன் காஞ்சியில் அப் பெருமானுடைய மடத்துக்கு வந்திருந்ததையும், அப்போது சிவகாமி இந்தப் பதிகத்துக்கு அபிநயம் பிடித்து மூர்ச்சித்ததையும் பற்றித் தெரிவித்தார். நேரில் இவ்வளவு விரைவில் உங்களையே வரவேற்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்குமென்று அப்போது நாங்கள் கனவிலும் கருதவில்லை."

"வாகீசப் பெருந்தகைக்கு எங்களுடைய ஞாபகம் இருந்தது நாங்கள் செய்த புண்ணியம். அவரைத் தரிசிக்கக் கொடுத்து வைத்திருந்த நீங்களும் பாக்கியசாலிகள் தான்!" என்றார் ஆயனர்.

"நாவுக்கரசர் பெருமான் வந்து போன பிறகு, இந்த ஆலயத்தைப் புதுப்பித்து ஒழுங்காகப் பூஜை நடக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அவருடைய திருப் பெயரால் ஒரு மடாலயமும் கட்டியிருக்கிறோம். அந்த மடாலயத்தில் முதன் முதலாகத் தாங்கள் தான் தங்கப் போகிறீர்கள். இதுவும் எங்கள் புண்ணியந்தான்!" என்றார் கிராமத் தலைவர்.

அத்தியாயம் 35

நந்தி மேடை

அன்றிரவு இரண்டாம் ஜாமத்தின் மத்தியில் நாவுக்கரசர் மடாலயத்தின் வாசல் திண்ணையில், மாமல்லரும் குண்டோதரனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

சாயங்காலமே மேகங்கள் எல்லாம் கலைந்து வானம் துல்லியமாயிருந்தது. சரத்கால சந்திரன் பொழிந்த தாவள்யமான நிலவு அந்தச் சாதாரண கிராமத்தைக் கந்தர்வ லோகமாகச் செய்து கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில், கிராமக் கோயிலின் தூங்கானை மாடத்துத் தங்க ஸ்தூபி தகதகவென்று பிரகாசித்தது. அதற்கப்பால் தெரிந்த தென்னை மரங்களின் உச்சியில் பச்சை மட்டைகளின் மீது நிலாமதியின் கிரணங்கள், ரசவாத வித்தை செய்து கொண்டிருந்தன. தென்னை மட்டைகள் இளங் காற்றில் இலேசாக அசையும்போது, பச்சை ஓலைகள் பளிச்சென்று வெள்ளி ஓலைகளாக மாறுவதும், மீண்டும் அவை பச்சை நிறம் பெறுவதும் ஏதோ ஒரு இந்திரஜாலக் காட்சியாகவே தோன்றியது.

"பிரபு! குபேர சம்பத்து வாய்ந்த அரண்மனை உப்பரிகையில் ஸப்ரகூட மஞ்சத்தில் படுத்துறங்க வேண்டிய தாங்கள், இந்த ஆண்டி மடத்துத் திண்ணையில் கோரைப் பாயில் படுத்து உறங்குவது என்னும் எண்ணத்தையே என்னால் சகிக்க முடியவில்லை! தாங்கள் உண்மையிலே படுத்துக் கொள்ளும் போது எப்படிச் சகிப்பேன்?" என்றான் குண்டோதரன்.

"குண்டோதரா! இத்தனை நேரமும் ஆயனரோடு விவாதம் செய்து அவரை உள்ளே படுத்துக் கொள்ளப் போகச் செய்வது பெரும் கஷ்டமாய்ப் போய்விட்டது! நீயும் அதே பாட்டைப் பாட ஆரம்பித்து விட்டாயா?" என்றார் மாமல்லர்.

குண்டோதரன் ஏதோ சொல்ல ஆரம்பித்தான். அதற்கிடங் கொடாமல் மாமல்லர் மறுபடியும் கூறினார்:—

"என் தந்தை அப்படி என்னைப் பஞ்சணை மெத்தையிலேயே எப்போதும் படுக்க வைத்து வளர்க்கவில்லை. குண்டோதரா! பஞ்சணை மெத்தையில் பரப்பிய முல்லைப் புஷ்பங்களின் மீது படுத்தும் எனக்கு வழக்கம் உண்டு; கடுக்காட்டிலே மரத்தின்

வேரைத் தலையணையாய்க் கொண்டு தரையில் படுத்தும் எனக்குப் பழக்கம் உண்டு. இந்த மடத்துத் திண்ணை வழ வழ வென்று தேய்த்து எவ்வளவு மிருதுவாயிருக்கிறது? இதில் படுத்துக் கொள்ளக் கொடுத்து வைக்க வேண்டுமே?'' என்றார் மாமல்லர்.

''பிரபு! தாங்கள் பரிகாஸம் செய்கிறீர்கள். எனக்கோ வேதனையாயிருக்கிறது. இந்தக் கஷ்டம் தங்களுக்கு என்னால் வந்தது தானே என்பதை எண்ணும் போது என் மனம் பதைக்கிறது. நான் மட்டும் ஒரு வார்த்தை இந்த ஊர் வாசிகளிடம் தாங்கள் இன்னார் என்பது பற்றிச் சொல்லியிருந்தால் ...... இப்போது கூட ஏன் உண்மையைச் சொல்லக் கூடாது என்று தோன்றுகிறது ...''

''குண்டோதரா! பிசகான காரியம் செய்து விட்டுப் பிறகு வருத்தப்படுகிறவர்களை நான் கண்டதுண்டு. நல்ல காரியம் — புத்திசாலித்தனமான காரியம் — செய்ததற்காக வருத்தப்படுகிறவர்களை நான் பார்த்ததில்லை. இப்போது உன்னைத்தான் பார்க்கிறேன். இந்தக் கிராம வாசிகளிடம் நான் இன்னான் என்று சொல்லாததில், எனக்கு எவ்வளவு சந்தோஷந் தரும் காரியத்தைச் செய்திருக்கிறாய், தெரியுமா? உண்மையில், நான் குமார சக்கரவர்த்தி என்பது தெரியாதபடி ஜனங்களுடன் கலந்து பழகும் சந்தர்ப்பம் கிடைக்காதா என்று எவ்வளவோ ஆவல் கொண்டிருந்தேன். அந்த ஆவல் இப்போது உன்னால் நிறைவேறுகிறது. ஆஹா! சிவகாமியின் நடனக் கலையின் புகழ் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறதென்பதை இன்று தெரிந்து கொண்டதில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?...''

''பிரபு! சிவகாமி தேவியின் நடனக் கலைப் புகழ் மட்டும் இங்கே பரவியிருக்கவில்லை. புள்ளலூர்ச் சண்டையின் புகழும் இந்த கிராமம் வரையில் வந்து எட்டியிருக்கிறது!''

''நிஜமாகவா, குண்டோதரா!''

''ஆம், பிரபு! அந்தச் சண்டையிலே குமார சக்கரவர்த்தி நிகழ்த்திய மகத்தான வீர ஸாகஸச் செயல்களைப் பற்றியும் இங்கேயெல்லாம் தெரிந்திருக்கிறது. அதையெல்லாம் பற்றிச் சவிஸ்தாரமாகச் சொல்ல வேண்டுமென்று கிராமவாசிகள் என்னைப் பிடுங்கி எடுத்து விட்டார்கள். இராத்திரி சாவகாசமாகச் சொல்வதாய் வாக்களித்திருக்கிறேன். இப்போது கோயில் பிராகாரத்திலே அவர்கள் கூடியிருப்பார்கள். நீங்களும் வருகிறீர்களா?'' என்று குண்டோதரன் கேட்டான்.

மாமல்லர் உற்சாகத்துடன் ''அவசியம் வருகிறேன்; ஆனால் நீ ஏதாவது விஷமம் செய்து என்னைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது!'' என்றார்.

* * *


கோயில் பிரகாரத்தில் நந்தி மேடையின் படிக்கட்டில் குண்டோதரனும் மாமல்லரும் உட்கார்ந்திருந்தார்கள். நந்தி மேடை, பலிபீடம் இவற்றைச் சுற்றிலும் பிராகாரத்தில் செங்கல் - சுண்ணாம்பினால் தளவரிசை போட்டிருந்தது. அந்தச் சுத்தமான தளத்தில் கிராம வாசிகள் பலர் உட்கார்ந்திருந்தார்கள்.

புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி அவர்களிடம் குண்டோதரன் சண்டப் பிரசண்டமாக வர்ணித்தான். அந்தச் சண்டையிலே முக்கியமாகக் குமார சக்கரவர்த்தி மாமல்லர் காட்டிய வீர ஸாகஸங்களைப்பற்றி உற்சாகமாக விவரித்தான்.

''மாமல்லர் எப்படிப் போர் செய்தார் தெரியுமா? இந்தக் கணம் பார்த்தால் இங்கே இருப்பார்; மறு கணம் பார்த்தால் அதோ அந்த மதில் சுவருக்கு அப்பால் இருப்பார். அந்த ஒரு கணத்தில் அவர் பாய்ந்து சென்ற வழியிலே இருநூறு தலைகள் உருண்டு கிடக்கும்; இரத்த வெள்ளம் ஓடிக் கொண்டிருக்கும். அந்தப் பெரிய போர்க்களத்திலே மாமல்லர் எங்கே போரிட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை எந்த நேரத்திலும் கண்டு பிடித்து விடலாம். மகாவிஷ்ணுவின் சக்ராயுதத்தைப்போல் எங்கே ஒரு ஜொலிக்கும் வாள் அதிவேகமாகச் சுழன்று எதிரிகளின் தலைகளை வெட்டிக் குவித்துக் கொண்டிருக்கிறதோ, அங்கே மாமல்லர் இருக்கிறார் என்று

தெரிந்து கொள்ளலாம். அப்படி மின்னல் வேகத்தில் வாளைச் சுழற்றிப் பகைவர்களை ஹதா ஹதம் செய்யக் கூடிய வீராதி வீரர் வேறு யார்? பல்லவர் படையைக் காட்டிலும் கங்கர் படை எவ்வளவோ பெரியது! அதனால் என்ன? மாமல்லருடைய வாளிலே அன்றைக்கு யமனே வந்து உட்கார்ந்திருந்தான். அவர் சக்ராகாரமாகச் சுழன்று வாளை வீசிய போது, ஒன்று பத்து நூறு ஆயிரம் என்று எதிரிகள் உயிரற்று விழுந்தார்கள்!......"

"ஆஹா! அபிமன்யு செய்த யுத்தம் மாதிரி அல்லவா இருக்கிறது?" என்று கூட்டத்தி லிருந்தவர்களில் ஒருவர் கூறினார். அந்த ஊர்க்கோயிலிலும் சிலகாலமாக மகாபாரதம் வாசிக்கப்பட்டு வந்தது. அதனால், எல்லாரும் அருச்சுனன் — அபிமன்யு நினைவாகவே இருந்தார்கள்!



குண்டோதரன் கூறினான்: "ஆம், மாமல்லர் அன்று அபிமன்யு மாதிரிதான் போர் புரிந்தார். ஆனால் ஒரு வித்தியாசம். அபிமன்யு போர்க்களத்தில் மாண்டு போனான். புள்ளலூர்ச் சண்டையிலோ மாமல்லரின் வாளுக்கு முன்னால் நிற்க முடியாமல் எதிரிகள் புறமுதுகிட்டு ஓடத் தொடங்கினார்கள். எல்லாருக்கும் முன்னால் ஓட்டம் பிடித்தவன் கங்க நாட்டு அரசன் துர்விநீதன் தான்!"

"துர்விநீதன் எந்தப் பக்கம் ஓடினானோ?" என்று ஒரு கிராமவாசி கேட்டான்.

"அது தெரியாதா உங்களுக்கு? ஆமாம், எப்படித் தெரியும்? அதற்குள்ளேதான் இந்தப் பாழும் வெள்ளம் வந்து விட்டதே! துர்விநீதன் தெற்கு நோக்கி ஓடிவந்ததாகத்தான் கேள்வி. தென் பெண்ணை நதி வரையில் அவனைப் பின் தொடர்ந்து மாமல்லரும் தளபதி பரஞ்சோதியும் வந்ததாகக் கூடக் கேள்வி" என்று சொல்லி வந்த குண்டோதரன், மாமல்லர் பக்கம் திரும்பிப் பார்த்து, "ஏன், ஐயா, என் கையைக் கிள்ளுகிறீர்?" என்றான்.

மாமல்லரின் கண்களில் கோபக் குறி காணப்பட்டது.

இதற்குள் கூட்டத்தில் ஒருவர், "ஆமாம்; நீ இவ்வளவு பேச்சுப் பேசுகிறாயே; உன் பக்கத்தி லிருக்கும் பையன் ஏன் மௌனம் சாதிக்கிறான்?" என்று கேட்டார்.

"ஆயனரின் சீடனுக்குப் போர்க்களத்தில் என்ன வேலை?" என்று இன்னொரு சந்தேகப் பிராணி கேட்டார்.

"நல்ல கேள்விதான்; உங்களிடம் உண்மையைச் சொல்லாமல் முடியாது போலிருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே குண்டோதரன் எழுந்து, மாமல்லரிடமிருந்து சற்று அப்பால் போய் நின்றான்.

"இதோ இருக்கிறாரே, என் பக்கத்தில், இவர் ...... இவர்தான் .... ஏன் ஐயா, இப்படி என்னை உறுத்துப் பார்க்கிறீர்?...... இவர்தான் உண்மையில் ஆயனருடைய உத்தம சிஷ்யர். நான் பல்லவ சைனியத்தைச் சேர்ந்தவன். துர்விநீதனைத் தொடர்ந்து வந்த மாமல்லருடன் நானும் வந்தேன். வழியில் என் குதிரையின் கால் ஒடிந்தபடியால் பின் தங்கி விட்டேன். பிறகு வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு இவர்களுடைய தெப்பத்தில் ஏறி உயிர் தப்பினேன்!" என்றான் குண்டோதரன்.

உடனே, கூட்டத்தி லிருந்தவர்கள் ஒருவரை யொருவர் விலாவிலே விரலால் சீண்டியும், வேறுவிதமாகக் கவனத்தை இழுத்தும், காதோடு இரகசியம் பேசிக் கொண்டார்கள். "குண்டோதரன் ஆயனரின் சிஷ்யனாக இருக்க முடியாது" என்று அவர்களில் பலர் முன்னாடியே ஊகித்ததாகச் சொல்லிக் கொண்டார்கள்.

"மாமல்லரும் அவருடைய படைகளும்கூட ஒரு வேளை இந்த வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கலாமோ?" என்று ஒருவர் கூறினார்.

"அதை நினைத்தால்தான் எனக்கு ரொம்பவும் கவலையா யிருக்கிறது!" என்றான் குண்டோதரன்.

"ஒரு வேளை இங்கேயே அவர்களும் வந்து ஒதுங்கினாலும் ஒதுங்கலாம்" என்று ஒருவர் சொன்னார்.

"ஆமாம்; ஒதுங்கினாலும் ஒதுங்கலாம்!" என்றான் குண்டோதரன்.


PERRY & COMPANY
SUPERIOR
SWEET BISCUITS
NICE
SUN
PERRY'S NICE BISCUITS
MARIE
PERRY'S DINNER
BABY

கண்ணன் பசி

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பாண்டவர்களின் வனவாச காலத்தில் துரியோதனன் ஒரு பெரிய யாகம் செய்து சிறப்பாக முடித்தான். முதலில் ராஜசூய யாகமே செய்யலாம் என்று ஆரம்பித்தான். ஆனால் பிராமணர்கள் "யுதிஷ்டிரனும் திருதராஷ்டிரனும் உயிருடன் இருக்கும்போது நீ ராஜசூயம் செய்ய இயலாது. வைஷ்ணவம் என்கிற சிறந்த யாகம் ஒன்று உண்டு. ராஜசூயத்திற்குப் பதிலாக அதைச் செய்யலாம்" என்றார்கள்.

அவ்வாறே செய்தான். யாகம் முடிந்த பின் நகரத்தில் சிலர் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். "இது என்ன யாகம்? யுதிஷ்டிரன் செய்வித்த ராஜசூயத்தின் பதினாறில் ஒரு அம்சத்துக்கு ஈடாகாது" என்றார்கள். ஆனால் துரியோதனனுடைய நண்பர்கள் அவனைப் புகழ்ந்து அவன் செய்த யாகத்தின் சிறப்பை எடுத்துப் பேசி, அது யயாதி, மாந்தாதா, பரதன் முதலானோர் செய்த யாகத்துக்குச் சமானமாகும் என்றார்கள். துரியோதனன் இந்தப் புகழ்ச் சொற்களைக் கேட்டுச் சந்தோஷமடைந்தான்.

அரண்மனையை அண்டிப் பிழைத்த மற்ற ஸ்துதிக்காரர்களும் துரியோதனனை ஸ்தோத்திரம் செய்து அவன் மேல் பொரியும் சந்தனத் தூளும் வாரி இறைத்தார்கள். அச்சமயத்தில் கர்ணன் எழுந்து துரியோதனனைப் பார்த்து, "சீக்கிரம் யுத்தத்தில் பாண்டவர்கள் தோல்வியடைந்து கொல்லப்படுவார்கள். பிறகு நீ ராஜசூய யாகமும் செய்வாய். அருச்சுனனை நான் வதம் செய்வேன். அதுவரையில் நான் என் கால்களைத் தண்ணீர் விட்டு அலம்ப மாட்டேன். மாமிசம் உண்ண மாட்டேன். மதுவைத் தீண்ட மாட்டேன். எவன் என்ன யாசித்தாலும் இல்லை என்று சொல்ல மாட்டேன்" என்று சபையில் பிரதிஜ்ஞை செய்தான்.

இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த திருதராஷ்டிர புத்திரர்கள் பேராரவாரம் செய்தார்கள். மகாரதனான கர்ணனுடைய சபதத்தைக் கேட்டதும் பாண்டவர்களுடைய கதி முடிந்தது என்றே அவர்கள் நிச்சயம் செய்து கொண்டார்கள்.



• • •

கர்ணன் அருச்சுனனைக் கொல்வேன் என்று பிரதிஜ்ஞை செய்ததைப் பற்றி வனத்திலிருந்த பாண்டவர்களுக்குச் சாரர்கள் போய்ச் சொன்னார்கள். இந்தப் பேச்சைக் கேட்ட தருமபுத்திரன் துயரத்தில் ஆழ்ந்தான். நெடுநேரம் தரையைப் பார்த்த வண்ணமே இருந்தான். "கர்ணன் தெய்விகக் கவசம் படைத்தவன். அற்புதமான பராக்கிரமசாலி. காலமோ நமக்கு விரோதமாக இருக்கிறது" என்று எண்ணிக் கவலைப்பட்டான்.

ஒரு நாள் காலையில் யுதிஷ்டிரன் தூக்கத்தின் முடிவில் ஒரு கனவு கண்டான். அநேகமாகக் கனவுகள் தூக்கத்தின் முதலிலும் தூக்கத்தின் முடிவிலுமே வரும். துவைத வனத்திலிருந்த துஷ்ட மிருகங்கள் வந்து யுதிஷ்டிரனிடம் முறையிட்டதாகக் கனவு கண்டான் "எங்களை வேட்டை ஆடிப் பெரும்பாலும் கொன்று தீர்த்து விட்டீர்கள். நாங்கள் அடியோடு நாசமாகாமலிருக்க வேண்டும். தயவு செய்து நீங்கள் வேறு இடம் சென்று வனவாசம் செய்யுங்கள். நாங்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைந்து விட்டோம். மிச்சமிருக்கிற நாங்கள் சிலரே எங்கள் குலத்துக்கு வித்தாக இருக்கிறோம். உம்முடைய அருளால் நாம் விருத்தி அடையக் கடவோம். உமக்கு மங்களம். எங்கள் மீது தயை செய்யக் கடவீர்" என்று கண்ணீரும் கம்பலையுமாக மிருகங்கள் சொல்லின. இந்த முறையீடு யுதிஷ்டிரனை மிகவும் வாட்டிற்று. சகோதரர்களுக்கு விஷயத்தைச் சொல்லி, அவர்களும் உடன்பட, எல்லாரும் வேறு வனம் சென்றார்கள்.

காட்டையும் காட்டு மிருகங்களையும் அழித்து விடலாகாது என்பது நம்முடைய முன்னோருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

• • •

ஒரு நாள் துருவாச ரிஷி பதினாயிரம் சிஷ்யர்களுடன் துரியோதனனிடம் வந்தார். ரிஷியின் சாபத்துக்குப் பயந்து மிகவும் கவனமாக நேரில் தானே எல்லாக் காரியங்களையும் வகித்து, அதிதி பூஜையை வெற்றிகரமாகவே முடித்தான். ரிஷியும் திருப்தி அடைந்து உனக்கு என்ன வரம் வேணும் என்று கேட்டார்.

அதிகக் கோப சுபாவமுள்ள அந்த முனிவரைத் திருப்தி செய்தது, தான் மறுபடியும் பிறந்த மாதிரி என்று துரியோதனன் மகிழ்ந்தான். என்ன வரம் கேட்கலாம் என்று ஆலோசித்தான். பாப சுபாவம் படைத்த அந்த ராஜகுமாரன் கேட்ட வரமாவது:—

"சுவாமி, சிஷ்யர்களோடு எனக்கு அதிதியாக வந்ததைப் போலவே, வனத்தி லிருக்கிற எங்கள் சகோதரர்களான பாண்டவர்களிடமும் போய் அதிதியாக இருக்க வேண்டும். மகாராஜனும் எங்கள் குலத்தில் மிக்க சிறப்புப் படைத்தவருமான யுதிஷ்டிரரிடம் தாங்கள் செல்ல வேண்டும். என்னிடத்தில் அனுக்கிரகம் வைத்து,



அவருக்கு அதிதியாகக் கடவீர். ராஜபுத்திரி பாஞ்சாலி பாண்டவர்களுக்கும் அவர்களுடைய பரிவாரத்திலுள்ள எல்லாருக்கும் போஜனம் செய்வித்துக் களைப்பாறிக் கொண்டு சுகமாக உட்கார்ந்திருக்கும் பொழுது தேவரீர் அவர்களிடம் செல்ல வேண்டும் என்பது என் வேண்டுகோள்."

ஜனங்களைப் பரீட்சை செய்வதில் எப்போதும் பிரியம் கொண்ட துருவாசரும், "அப்படியே" என்றார்.

துரியோதனன் இவ்வாறு கேட்டுக் கொண்டதன் நோக்கம், அதிதி பூஜையைத் திருப்தியான முறையில் செய்யச் சக்தியில்லாமல் பாண்டவர்கள் முனிவருடைய கோபத்துக்கு இரையாகிச் சாபத்தை அடைவார்கள் என்கிற கெட்ட எண்ணம். முனிவரிடம் வரம் பெற்று ஏதாவது தான் நன்மை அடைவதற்குப் பதிலாகத் தனக்கு வேண்டாதவர்களுக்குத் தீமை விளைவிப்பதையே பெரிதாகத் துரியோதனன் எண்ணினான். இதுவே தீயவர்களுடைய சுபாவம்.

துரியோதனன் கேட்டுக் கொண்டபடியே துருவாசர் சிஷ்யர்களுடன் வனத்திலிருந்த யுதிஷ்டிரனிடம் சென்றார். தம்பிமார்களுடன் தருமபுத்திரனும் முனிவரை எதிர் கொண்டு நமஸ்கரித்து உபசரித்தார்கள். பிறகு, "ஆற்றில் குளித்துவிட்டு வருகிறோம். சாப்பாடு தயாராக இருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு முனிவரும் சீடர்களும் ஸ்நானத்துக்குச் சென்றார்கள்.

• • •

வனவாச ஆரம்பத்தில் யுதிஷ்டிரன் செய்த தவத்தினால் சூரிய பகவான்

பிரத்தியட்சமாகி ஒரு அட்சய பாத்திரத்தைப் பாண்டவர்களுக்குத் தந்தான். "இதைப் பெற்றுக்கொள். பன்னிரண்டு வருஷம் இதன் மூலம் உனக்கு அன்னம் நான் தருவேன். திரௌபதி இந்தப் பாத்திரத்தைக் கொண்டு எவ்வளவு பேருக்கு அன்னம் அளிக்க விரும்புகிறாளோ, அதுவரையில் அன்னம் வளரும். அனைவருக்கும் உணவு அளித்துவிட்டுத் திரௌபதி புசித்தபின் உணவு மறைந்து விடும்." — இவ்வாறு சூரிய பகவான் வரம் கொடுத்திருந்தான்.

இதன்படி தினமும் பிராமணர்களும் அதிதிகளும் புசிப்பார்கள். பிறகு தம்பிகள் உண்டபின் தரும புத்திரன் போஜனம் செய்வான். அதன்பின் கடைசியாகத் திரௌபதி உண்பாள். அவள் சாப்பிட்டவுடன் அட்சய பாத்திரத்தின் வேகம் நின்றுவிடும். துருவாசர் வந்த சமயம் எல்லாரும் போஜனம் முடித்து விட்டுத் திரௌபதியும் சாப்பிட்டு முடிந்திருந்த படியால், அட்சய பாத்திரத்தின் சக்தி அன்று தீர்ந்து போயிருந்த சமயம். ஆகையால் முனிவரும் சிஷ்யர்களும் குளித்துவிட்டு வருவார்களே, என்ன செய்வது என்று பெருங் கவலையுடன் ஒரு வழியும் தோன்றாமல் பகவானைத் துதித்தாள். "பிரபுவே! சரணமடைந்தவர்களைக் காப்பவனே! கதியற்றவர்களுக்குக் கதியைக் கொடுப்பவனே! என்னைக் கரையேற்ற வேண்டும்!" என்று இறைஞ்சினாள்.

உடனே திரௌபதியின் சங்கடத்தைத் தீர்க்க பகவான் வாசுதேவன் வனத்தில் சமையல் கட்டிலிருந்த திரௌபதியண்டை நேராகச் சென்றான். "மிக்கப் பசியாக வந்திருக்கிறேன். சீக்கிரம் அன்னம் கொண்டு வா! பிறகு எல்லாக் காரியமும்!" என்றான்.

திரௌபதி, "ஐயோ! இதென்ன பரீட்சை? கண்ணனே! நான் போஜனம் செய்துவிட்டேன். சூரியனால் கொடுக்கப்பட்ட பாத்திரத்தின் சக்தி இன்று முடிந்து விட்டது. துருவாசர் இச்சமயம் வந்திருக்கிறார். நான் என்ன செய்வேன்? முனிவரும் சீடர்களும் குளித்து விட்டு வந்து விடுவார்கள். நீரும் இப்போது வந்தீர். பசி என்கிறீர்!" என்று சொல்லித் தத்தளித்தாள்.

"நான் பசியால் வருந்துகிறேன். இது பரிகாசத்திற்குச் சமயமல்ல. பாத்திரத்தைக் காட்டு, பார்க்கலாம்" என்றான் கண்ணன். திரௌபதி எடுத்துக் காட்டினாள். அதன் விளிம்பில் கொஞ்சம் கீரையும் ஒரு சோற்றுப் பருக்கையும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதைக் கண்ணன் கீறி எடுத்து, "இது விசுவ ரூபனாகிய ஹரிக்கு உணவாகி அவன் பசி தீர்ந்து, பிரீதி அடைவானாக!" என்று சொல்லிச் சோற்றுப் பருக்கையையும் கீரையையும் வாயில் போட்டுக் கொண்டான்.

திரௌபதி வெட்கமும் கவலையும் கொண்டு, "ஐயோ, நான் பாத்திரத்தை நன்றாக அலம்பாமல் அதில் ஒட்டிக் கொண்டிருந்த சோற்றுப் பருக்கையை எடுத்து வாசுதேவன் உண்டானே!" என்று எண்ணி வருத்தப்பட்டாள். கண்ணன் வெளியே போய்ப் பீமசேனனைப் பார்த்து, "சீக்கிரம் ஆற்றுக்குச் சென்று முனிவர்களைப் போஜனத்துக்கு அழைத்து வா" என்று சொல்லி அனுப்பினான்.

பீமசேனன் விரைந்து சென்று ஆற்றிலிருந்த துருவாசர் முதலிய ரிஷிகள் இருந்த இடத்துக்குப் போனான். அவர்கள் அனைவரும் போஜனம் செய்து திருப்தி அடைந்தவர்கள்போல் ஏப்பம் விட்டுக்கொண்டிருந்தார்கள்! "தரும புத்திரனை அன்னம் தயார் செய்யச் சொல்லி வந்தோமே, எங்களுக்கு வயிறு நிறைந்து பொறுக்க முடியாமலிருக்கிறதே!" என்று சீடர்கள் துருவாசருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பிறகு துருவாசரும் பீமசேனனிடம், "நாங்கள் சாப்பிட்டாயிற்று. எங்களுடைய தவறை மன்னிக்க வேண்டும் என்று தருமபுத்திரனுக்குச் சொல்" என்று கேட்டுக்கொண்டு அனைவரும் மறைந்தார்கள்.

அகில விசுவரூபமும் கண்ணனுக்குள் அடங்கியிருந்தபடியால், அவன் உண்ட ஒரு சோற்றுப் பருக்கை ரிஷிகளுக்கெல்லாம் பசியாற்றி விட்டது.



பெரியவாள் கதை:

ஞான தீரன்

சுவாமி சுத்தானந்த பாரதி

சாந்தானந்தரின் உபதேசங்கள் ராஜமையருக்கு அமுதபானமா யிருந்தது; அவற்றை யெல்லாந் திரட்டி அழகான நடையில் வெளியிட அன்பர் அவரை வேண்டினர். அதே சமயம் விவேகானந்தர் வேதாந்த திக்விஜயம் செய்து, சென்னைக்கு வந்தார். இங்கே தமிழர் அவரைக் குதூகலமாக வரவேற்றனர். விவேகானந்தர் "எங்கே ராஜம்?" என்றார். "இதோ" என்று ராஜமையர் சுவாமிகளை வணங்கி நின்றார்; விவேகானந்தர் ஐயருடன் தனியே பேசினார். ஐயர் ஆங்கில இதழ் நடத்தி அதில் வேதாந்த உண்மைகளை வெளியிடும் கருத்தைத் தெரிவித்தார். "அதுவே உமது பணி; பிரபுத்த பாரதம் (விழித்த இந்தியா) என்ற பெயருடன் பத்திரிகை நடத்தும்; எளிய நடை, இனிய சொல்லோட்டம், தெளிந்த பொருள், ஆழ்ந்த கருத்து, அனுபவ உதாரணங்கள், கதைப் போக்கு — இவையே இக்காலப் பத்திரிகைகளுக்கு வெற்றி தரும். தங்கள் எழுத்தில் இந்த லட்சணங்கள் மிகுதி; ஆதலால் நாட்டும் பேனாவை! அத்வைத வேதாந்தத்தை எல்லாச் சமயங்களுக்கும் சமரஸ நிலையமாக்கும்" என்று சொல்லிச் சுவாமிகள் ஆசிர்வதித்தார்.

இராஜமையர் உடனே உத்யோகத்தை விட்டார்; சாந்தானந்தர் திருவடியில் அமர்ந்தார்; கீதை, பிரம்ம சூத்திரம், உபநிஷத் மூன்றையும் பாடம் கேட்டார். சுவாமிகளின் பிரசங்கங்களைக் குறிப்பெடுத்தார். அழகான ஆங்கிலத்தில் திட்ப நுட்பமாக எழுதினார். மஹாத்மாக்களின் வாக்குகளையும் வரலாறுகளையும் வசீகரமாக எழுதினார். வேதாந்தக் கதைகளும் புனைந்தார். பல புனை பெயர்களில் பிரபுத்த பாரதத்தின் பக்கங்களை நிரப்பினார். அந்த நடையழகும் பொருளழகும் அருளழகும் படிப்போரை வசீகரித்தன. முதல் மாதமே பத்திரிகைக்கு 1500 சந்தாதாரர்கள்; மறுமாதம் 4500; ஒரே மாதத்தில் பிரபுத்த பாரதம் ராஜமையர் பெயர் நாடெங்கும் பரவி விட்டது.

ஆனல் வீடும் உடலும் அவரைச் சோதித்தன. ராஜமையரின் வேதாந்தம் தகப்பனாருக்கு ஒரு பைத்தியமாகத் தோன்றியது; குடும்பத்தில் மனவேறுபாடும் கலகமும் வளர்த்தன; ராஜமையர் தமது மனைவியைத் திருப்தி செய்யவே பற்றுதலா யிருப்பது போல நடித்து வந்தார்; அவர் சித்தமெல்லாம் சிவமயம். கதவை மூடிக்கொண்டு நடராஜ உருவின் முன் நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டால், உலகமே இல்லைதான்! இரவில் தூக்கமில்லை; பேனா ஓடிக்கொண்டே இருக்கும். உடம்பில் பலமில்லை. நீரால் உடம்பு ஊதிப்போவது; கண் அவிந்தது; உயிர் ஊசலாடியது. குரு சாந்தானந்தரும் பிரபுக்களும் வந்து பார்த்து விசனித்தனர். ராஜமையர் புன்னகை பூத்தார். "குருவே, ஊனக்கண் போயிற்று; ஞானக் கண் திறந்தது; புறக் காதும் போய் விட்டால் அபசத்தங்களைக் கேளாமல் உள்ளே சுப சத்தம் கேட்பேன். குருவே, ஆத்மப் பறவை சந்தோஷமாகக் கூட்டை விட்டுப் பறந்து செல்கிறது. ஓம் தத்ஸத்" என்றார் ஞானதீரர்.

அவர் அமைதியாக இறந்த காட்சி ஓர் அற்புதம். (18-5-1898) இரண்டு நாள் கழித்து பிரபுத்த பாரதத்தில் வெளியான "வேதாந்தம் — ராஜாதி ராஜன்"—என்னும் கட்டுரைக்காக அவர்மீது ராஜத்துரோகக் குற்றம் சாட்டினார்கள். அரசாங்கம் பிடிவாரண்டு அனுப்பியது. போலீஸார் வந்தனர்.

"எங்கே ராஜமையர்?"

"சிவலோகத்தி லிருக்கிறார்!"

"அவருக்கு வாரண்டு இருக்கிறது."

"அனுப்பும் எமலோகத்துக்கு! எமராஜன் முத்திரை வைத்து சிவலோகத்திற்கு அனுப்புவான்."

தேகம் படுந்நாளுஞ்
　　சிந்தந் தெளிந்தகசி
தேகநான் என்றே,
　　நினைந்திடுவான் — யோகியாம்
தீரன்சாந் தானந்த
　　சீடன் பிரபுத்த
பாரத ராஜத்தைப் பார்!

மௌ. வி :—ஆகாகான் மாளிகையில் அவர் உண்ணாவிரதம் இருந்த சமயம் டாக்டர் கில்டர் போன்ற பிரபல வைத்தியர்கள் என்ன கூறினார்கள்? "காந்திஜி ரொம்ப பலஹீனமாயிருக்கிறார். அவருக்குப் பூர்ண ஓய்வு தேவை. அவர் யாருடனும் பேசக்கூடாது. மௌனமாயிருக்க வேண்டும். அப்போதுதான் சொஸ்தமடைய முடியும்" என்று கூறியிருக்கிறார்கள். ஆகையால் என்னால் அவருக்கு நன்மைதான் ஏற்படுகிறது.

உ. வி :—ஓஹோ? ரொம்ப ரொம்பத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாயே? அதற்காக இப்போது என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?

மௌ. வி :—உன்னை காந்திஜியின் சமீபம்கூட நாடவேண்டாம் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

உ. வி :—நான் என்ன செய்வது? காந்திஜி ஒரே பிடிவாதமாயிருக்கிறாரே? இப்போது நாடெங்கும் ஏற்பட்டுள்ள குழப்பத்திலிருந்தும் உலகெங்கும் வியாபித்துள்ள பலாத்காரச் செயல்களிலிருந்தும் ஒரு வழி காண்பதற்காகவே மகாத்மாஜி உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்கிறார். உண்ணாவிரதம் வேண்டாமென்று யார் யாரோ சொல்லியும் கூட அவர் கேட்பதாயில்லையே? நான் சொன்னால் மட்டும் எப்படிக் கேட்கப் போகிறார்?

மௌ. வி :— அப்படியானால் எதற்கும் நாம் இருவருமே மகாத்மாஜியை எழுப்பிக் கேட்டுக் கொள்ளலாமே?

உ. வி :—வேண்டாம்; நாம் சொன்னால் அவர் ஒருநாளும் கேட்கமாட்டார். ஒரே ஒருவருடைய சொற்படிதான் அவர் நடப்பார். அவருடைய கட்டளைக்குத்தான் இணங்குவார். எனவே காந்திஜியைக் கேட்பதால் ஒரு பிரயோசனமுமில்லை. ஏனென்றால் உண்ணாவிரதம் ஆரம்பிப்பதா இல்லையா என்ற விஷயம் அவருக்கே தெரியாது. ஆகையால் நாம் அந்த ஒருவரையே கேட்டு விடலாம்.

மௌ. வி :—அது யார் அந்த ஒருவர்?

உ. வி :—இதோ இருக்கிறாரே இந்த மகாத்மாஜியின் அந்தராத்மா, இவரேதான்.

[ஸ்ரீமான் உண்ணாவிரதமும் இருவனர் மௌன விரதமும் சேர்ந்து அந்தராத்மாவை நெருங்குகிறார்கள்.]

மௌன விரதம், உண்ணாவிரதம் :— அந்தராத்மாவே! தயவு செய்து எங்கள் மகாத்மாஜியை உண்ணாவிரதம் இருக்க வேண்டாமென்று சொல்லுங்களேன்.

[இருவரும் அந்தராத்மாவின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிக்கிறார்கள்.]

அந்தராத்மா :—அதைப்பற்றி நான் உங்களிடம் ஒன்றும் சொல்ல முடியாது. நான் காந்திஜி ஒருவரிடம்தான் பேசுவேன். அவரிடம் நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதை முன்கூட்டி உங்களிடம் தெரிவிக்கவும் முடியாது. அவர் என்ன செய்யவேண்டும் என்பதை நான் அவரிடமே அறிவிப்பேன். காந்திஜியும் என் கட்டளைப்படி நடந்து கொள்வார்.

உ. விரதம், மௌ. விரதம் :—அந்தராத்மாவே! தாங்கள் எங்களிடம் ஒன்றுமே சொல்ல வேண்டாம். காந்திஜியிடமே சொல்லுங்கள் போதும். ஆனால் அவரிடம் நல்ல வாக்காகச் சொல்லுங்கள். எங்கள் ஏக தலைவரான மகாத்மாஜிக்கு உயிர்ப் பிச்சை கொடுத்து இந்திய மக்களின் வயிற்றில் பாலை வார்த்துங்கள். அதைத்தான் நாங்கள் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். போய் வருகிறோம். நமஸ்காரம்.


[இருவரும் பிரிகின்றனர். ஆசிரமத்தில் நிசப்தம் நிலவுகிறது.]

வியாபார தந்திரம்!



குடை வியாபாரி (மழைக்காக ஒதுங்கிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து) :— குடை வாங்குகிறவர்கள் இப்பொழுதே வாங்கிக் கொள்ளலாம்! தட்டியைக் கீழே விட்டுவிடப் போகிறேன்!

ஆறுமணி வண்டி



வி.எஸ்.ஆர்

பாபுவும் அம்முலுவும் பள்ளிக்கூடம் விட்டதும் ரயிலடிக்கு வந்தார்கள். ஆறு மணி வண்டி வருவதற்கு இன்னும் அரை மணி நேரம் இருந்தது. இருவரும் பிளாட் பாரத்தில் இருந்த ஒரு பழைய விசுப் பலகையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

நகரிலுள்ள பள்ளிக்கூடத்திற்கும் அவர்கள் வீட்டிற்கும் ஆறு மைல் தூரம் இருந்தது. தினமும் பள்ளிக்கூடம் விட்டதும் அவர்கள் ஆறு மணி வண்டியிலேறி அடுத்த ஸ்டேஷனில் வந்து இறங்கி வீட்டுக்குப் போவார்கள்.

இன்று அவர்கள் ஸ்டேஷனில் வெகு நாழிகை காத்திருந்தும் வண்டி வரவில்லை. மணி ஆறரை ஆகிவிட்டது. மழை வேறு தூற்றலாகப் போட்டுக் கொண்டிருந்தது. "இன்று ஏன் இன்னும் வண்டி வரவில்லை? ஸ்டேஷன் மாஸ்டர் மாமாவைக் கேளேன்" என்றாள் அம்முலு.

"அந்த முசுடை நான் கேட்க மாட்டேன்! அம்முலு! எனக்கு ஒரு யோசனை தோணுகிறது. அதோ, தனியாக ஒரு இரண்டாம் வகுப்பு வண்டி நிற்கிறதல்லவா. ரயில் வரும் வரையில் அதிலே ஏறி உட்கார்ந்து கொண்டிருப்போம். ரொம்ப நாளாக நீ இரண்டாம் வகுப்பு வண்டியில் ஏற வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறாயே!" என்றான் பாபு.

"ஐயோ! நான் வர மாட்டேன்! எனக்குப் பயமாயிருக்கிறது!"

"பயந்தாங் கொள்ளி! நீ வரா விட்டால் போ!" என்று பாபு வண்டியில் ஏறிக்கொள்ள ஓடினான். அம்முலுவும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

சத்தம் போடாமல் குழந்தைகள் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். அம்முலுவுக்குப் பயம் தாங்கவில்லை. மெத்தை ஸீட்டில் படுத்துக் கொண்டு கண்ணை இறுக மூடிக் கொண்டாள். பாபுவுக்கும் தூக்கம் வருவதுபோலிருந்ததால் அவனும் கண்ணை மூடிக் கொண்டான். சாயங்காலம் விளையாடின களைப்பில், சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தைகள் இருவரும் தூங்கிப் போனார்கள்.

பாபு கண்ணை விழித்துப் பார்த்த போது, விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. அவன் சுற்று முற்றும் பார்த்தான்!

"ஐயோ, அம்முலு! எழுந்திரேன்! வண்டி வேகமாக ஓடிக் கொண்டிருக்குடீ! இதோ பார்!" என்று பாபு கத்தினான்.

அம்முலு எழுந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்; அண்ணா சொன்னது நிஜந்தான்!



"அண்ணா! நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? தெரியவில்லையே!" என்றாள் அம்முலு.

"பசிக்கிறாப் போலிருக்கே" என்றான் பாபு.

"நான் அப்பொழுதே இந்த வண்டியில் ஏறவேண்டாமென்று சொன்னேனே, கேட்டாயா?" என்று சொல்லிக் கொண்டே அம்முலு 'ஹோ' வென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

"அழுமூஞ்சி!" என்றான் பாபு.

இந்தச் சமயத்தில் பாபு எதையோ பார்த்துவிட்டு, "அதோ பார்!" என்றான். அப்பொழுது டிக்கெட் பரிசோதகர் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

"என்ன செய்கிறது! டிக்கெட் நம்மிடம் இல்லையே!" என்றாள் அம்முலு அழுகைக்கு மத்தியில்.

"வண்டியிலிருந்து கீழே குதித்து விடலாம்" என்று அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தான் பாபு.

வண்டி நின்றது. இவர்கள் கீழே இறங்குவதற்குள் கையில் விளக்குடன் பலர் ஓடி வந்தார்கள். அவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டார்கள். எல்லோரும் பாபுவையும், அம்முலுவையும் சூழ்ந்து கொண்டார்கள். "நீதானே சங்கிலியைப் பிடித்து இழுத்தாய்?" என்று ரயில்வே கார்ட் பாபுவைக் கேட்டார். "இல்லை" என்று கத்தினான் பாபு. அம்முலு விம்மி விம்மி அழ ஆரம்பித்துவிட்டாள். "இவன் இழுத்ததை நான் பார்த்தேன்!" என்றார் பரிசோதகர். பாபு அவரை அலட்சியமாகப் பார்த்தான்.

கார்டு ஓடி வந்து பாபுவைக் கட்டிக் கொண்டார். "பலே சபாஷ்! நீ மகா கெட்டிக்காரப் பையன்!" என்றார். இதே சமயத்தில் ஒரு அம்மாள் ஓடி வந்து, "குழந்தை! நீதான் என் சொத்தைக் காப்பாற்றினாய்!" என்று இரு குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு ஆனந்தப் பட்டாள். பாபுவுக்கும் அம்முலுவுக்கும் ஒன்றுமே புரியவில்லை.

இந்தச் சமயத்தில் கார்டு பாபுவைப் பார்த்து, "அப்பா வண்டியை நிறுத்தும்படி பகவான்தான் உனக்குப் புத்தியைக் கொடுத்திருக்க வேண்டும். சற்றுத் தூரத்திலுள்ள ஒரு பாலத்தை வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விட்டதாம். வண்டியை நீ நிறுத்தியிருக்காவிட்டால் எவ்வளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும்? அதுமட்டுமா? ஓடிக் கொண்டிருந்த ரயிலில் ஒரு திருடன் இந்த அம்மாள் நகைகளைத் திருடப் போனான். அந்தச் சமயத்தில் வண்டியை நிறுத்தியதால், அவன் பயந்து கொண்டு ஓடி விட்டான். நீ செய்த உதவி சாமானியமல்ல!" என்றார்.

பாபுவையும் அம்முலுவையும் அன்றிரவே வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். மறுநாள் பத்திரிகையில் அவன் பெயர் வந்தது. ரயில்வே அதிகாரி குழந்தைகளின் சாமர்த்தியத்திற்காக ஒரு வெள்ளிக் கோப்பையைப் பரிசளித்தார். பெற்றோர்களுக்கு ரொம்பவும் ஆனந்தமாயிருந்தது. ஆனால், இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, பாபுவும் அம்முலுவும் இரண்டாம் வகுப்பு ரயில் வண்டியில் ஏறுவதே கிடையாது.



காலக்ஷேபம்

கெட்டிக்காரர்!

வீட்டுக்காரர்:—எங்கள் வீட்டில் குடியிருப்பவர் மிகவும் கெட்டிக்காரர். ஏதாவது கண்டு பிடிப்பதில் மகா புலி!

விருந்தாளி:—அப்படி அவர் என்ன கண்டு பிடிக்கிறார்?

வீட்டுக்காரர்:—ஒவ்வொரு மாதமும் குடிக் கூலி கொடுக்காமலிருப்பதற்குப் புதிது புதிதாய்க் காரணங்கள் கண்டுபிடிக்கிறார்!

—பி. கே. கிருஷ்ணமூர்த்தி.

★

சிறந்த யோசனை

முதல் சிப்பாய் (இரண்டாவது சிப்பாயிடம்):—அண்ணே! நான் ஏன் மிலிட்டரியிலே சேர்ந்தேன் தெரியுமா? சண்டை என்றால் எனக்கு ரொம்பவும் இஷ்டம்; மேலும் எனக்குக் கலியாணமும் ஆகவில்லை. எனவே குஷியாக மிலிட்டரியில் சேர்ந்தேன். நீ ஏன் அண்ணே சேர்ந்தே?

இரண்டாவது சிப்பாய்:—அதை ஏன் கேட்கிறாய்? எப்பொழுதும் நான் சமாதானத்தை விரும்புகிறவன். ஆனால் எனக்குக் கலியாணம் ஆகிவிட்டது. என்ன செய்வது? கொஞ்சம் யோசனை பண்ணி மிலிட்டரியிலேயே சேர்ந்து விட்டேன்!

டி. கே. ராமஸ்வாமி.

★

என்ன பலன்?

நடராஜு:—நாணு! ஞாபக மறதிக்காக, மருந்து சாப்பிடச் சொல்லி, டாக்டர் ஏதோ மாத்திரை கொடுத்தாரே. ஏதாவது பலன் உண்டா?

நாணு:—அதுவா, நான் மருந்தைச் சாப்பிட மறந்து போய்விட்டேன்!

—எஸ். ஸ்ரீநிவாசன்.

★

ரொம்ப சரி!

வியாபாரி:—இந்தப் போர்வையை நான் இருநூறு ரூபாய் என்று சொல்லவில்லை; நூறு ரூபாய் என்று சொல்லவில்லை; எண்பது, எழுபது, அறுபது, ஐம்பது என்றும் சொல்லவில்லை. ஒரே விலை இருபது ரூபாய்தான்!

வாங்க வந்தவர்:—நான் இரண்டு ரூபாய்க்கும் கேட்கவில்லை; நாலு ரூபாய்க்கும் கேட்கவில்லை; ஆறு, எட்டு, பத்து என்றும் கேட்கவில்லை; பதினைந்து ரூபாய்க்குக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன்! —பாப்பா.

கண்ட பலன்

மனைவி:—நான் சிரமப்பட்டுச் சமையல் செய்து போட்டுக் கொண்டே இருக்க வேண்டியதுதான்; அதனால் கண்ட பலன் ஒன்று மில்லை.

கணவன்:—இல்லாமலென்ன? அஜீர்ணம் தான் பலன்! —பி. என். சாரதி.

★

என்னத்தைச் செய்ய?

ஆசிரியர் (ஏ. ஆர். பி. மாணவனைப் பார்த்து):—உமது அருகில் ஒரு குண்டு விழுகிறது; அது வெடிக்காமலிருக்கிறது; அப்பொழுது நீர் என்ன செய்வீர்?

ஏ. ஆர். பி.:—என்னத்தைச் செய்ய? அந்த குண்டு வெடிப்பதற்குள் எடுப்பேன் ஓட்டம்!

—எஸ். ஆறுமுகம்.

★

ஜோஸ்யம் பலித்தது

ஜோஸ்யர்:—உங்களிடம் ஒரு பெரிய சக்தி இருக்கிறது. உங்களைத் தேடி வருபவர்கள் எல்லாம் திறந்த வாய் மூடாமல் இருப்பார்கள்.

ஜோஸ்யம் கேட்பவர்:—வாஸ்தவம்; நான் பல் வைத்தியன். —கூ. ரா. பீக்க.

★

ஆச்சரியமில்லை

"என் தகப்பனார் 130-ல் காலமானார்."

"அப்படியா? ரொம்ப ஆச்சரியமாயிருக்கிறதே! அவ்வளவு வயசு வரை இருந்தாரா? நீ கொடுத்து வைத்தவன்தான்."

"இல்லை! இல்லை! இறக்கும்போது அவருக்கு வயது ஐம்பதுதான். 130-ம் நம்பர் வீட்டில் காலமானார் என்று சொன்னேன்!"

—எம். எஸ். சிவராஜன்.


★

என்ன இல்லை?

குமாஸ்தா:—பார்த்தீர்களா, உங்கள் கேஸ் ஜயிக்க வேண்டுமென்பதற்காக வக்கீல், அவசரத்தில் தலையில்கூட ஒன்றுமில்லாமல் கோர்ட்டுக்குக் கிளம்பிவிட்டார்!

கட்சிக்காரர்:—அடாடா! தலையில் ஒன்றுமில்லாமல் போனால், என் கேஸை எப்படி ஜயித்துக் கொடுக்கப் போகிறார்?

குமாஸ்தா:—தலையில் ஒன்றுமில்லை என்றால் தலைப்பாகை யில்லாமல் வந்து விட்டார் என்று சொன்னேன்! —எம். எஸ். எஸ்.



வறுமையா, பொறுமையா?

வேதுஸ்ரீ

லக்ஷ்மி அன்று வருத்தமும் ஏக்கமும் உள்ளவளாயிருந்தது முதல் தடவையில்லை. கொஞ்ச நாட்களாகவே அடிக்கடி ஏதோ யோசனையிலாழ்ந்தவள் போல் அவள் வியாகூல முற்றிருப்பது வழக்கமாய்ப் போய்விட்டது. சாந்த ஸ்வரூபிணியாயிருந்த லக்ஷ்மி சென்ற நாலைந்து வருஷங்களுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிட்டாள். கோபமும் பொறுமையின்மையும் அதிகரிக்கத் தொடங்கின. இதற்கெல்லாம் முக்கிய காரணம் வறுமைதான். டாக்டர் ராமச்சந்திரனுக்குக் கொஞ்ச நாட்களாகவே வருமானம் குறைய ஆரம்பித்து இப்போது மிகச் சொற்பமே வந்தது. ஆனால் செலவு மட்டும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. மூத்த பிள்ளை உயர்தரப் படிப்புப் படித்துக் கொண்டிருந்தான். குடும்பமோ பெரிது. லக்ஷ்மியின் நகைகளை ஒவ்வொன்றாக விற்று, மேலே கடனும் வாங்கிக் காலக்ஷேபம் நடந்து கொண்டிருந்தது.

ஸ்வபாவத்திலேயே பொறுமைசாலியான லக்ஷ்மி, முதலில் கஷ்டங்களையெல்லாம் தைரியத்தோடும் புன்சிரிப்புடனும் பொறுத்துக் கொண்டாள். சமையற்காரனை நிறுத்திய போது சந்தோஷத்துடன்தான் சமையல் செய்ய ஆரம்பித்தாள். ராமச்சந்திரன் எவ்வளவோ ஆக்ஷேபித்தும் கேளாமல், "வேலைக்காரி வைத்துக் கொண்டால் கட்டி வராது" என்று கூறித் தானே வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்த போது, அவருக்கே சற்று ஆச்சரியமாயிருந்தது.

"ஏதோ பூஜாபலத்தால் நமக்கு நல்ல மனைவி வாய்த்தாள்" என்று எண்ணி மனமகிழ்ந்தார். அப்படியானால், அவள் உள்ளம் ஏன் இப்போது மாறுபட்டு விட்டது?

பரிசுக் கதை 6

கஷ்டப்பட்டு வாழ்க்கையில் வெறுப்புத் தட்டியதனாலா? இல்லை. எளிதில் மனச் சலிப்பு உண்டாகாத ஸ்வபாவமுடைய லக்ஷ்மிக்கு இம் மனநிலை ஏற்பட்டதற்கு வேறொரு காரணமும் உண்டு. இரண்டு வருஷங்களுக்கு முன் அவள் தன் தங்கை ஸரஸ்வதியின் வீட்டுக்குப் போய், சில நாட்கள் தங்கிவிட்டு வந்தாள். அதற்குப் பின் அவளிடம் மாறுதல் சற்று வேகமாகவே காணப்பட்டது.

ஸரஸ்வதி எழெட்டு வருஷங்களாகத்தான் குடும்பம் நடத்துகிறாள். அவளுக்குக் கல்யாண மாகும்போது, தகப்பனார் காலமாகி விட்டார். விதவைத் தாயார், பந்துக்களின் உதவியால் சொற்ப சீர் செய்து ஸரஸ்வதியை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு இரண்டாந்தாரமாகக் கல்யாணம் செய்து கொடுத்தாள். அப்போது ஒருவருக்கும் அவ்வளவாகத் திருப்தியில்லை. "ஏதோ, இந்த மட்டில் கல்யாணம் ஆயிற்றே!" என்று திருப்தி யடைந்தார்கள். ஆனால் இப்போது ஸரஸ்வதி எல்லோருக்கும் சிறப்பாய் விளங்கினாள். வீட்டில் கைகட்டி எப்போதும் நாலு ஆட்கள், சமையற்காரன், குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள வேலைக்காரி, ரேடியோ, மோட்டார் வண்டி ஸகிதமாய் முழங்கினாள்.

லக்ஷ்மி அவள் வீட்டுக்குப் போயிருந்த போது, தன் வைரத்தோட்டை விற்றுச் சில நாட்களே ஆகியிருந்தது. காதில் ஒரு வெள்ளைக் கல் தோடுதான் அணிந்திருந்தாள். ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. பிள்ளையின் படிப்புக்காகத்தானே விற்றாள்? அதற்காக வருந்துவானேன்! ஆனால் அங்கே போய் இரண்டொரு நாட்களுக்குள்



னாகவே அவள் மனதில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. "கொடுத்து வைத்தவர்கள் அனுபவிக்கிறார்கள்!" என்று அடிக்கடி தனக்குள் முணுமுணுப்பாள். உடனே "ஓ! நம் தங்கைதானே? அவளாவது சௌக்கியமாயிருக்கட்டும்" என்று சொல்லிக் கொள்வாள்.

ஒரு நாள் சரஸ்வதி லக்ஷ்மியிடம் ஓடி வந்து, "அக்கா! உன்னிடம் சொன்னேனல்லவா? வைரத்தோடும், ஜடைபில்லையும் 'ஆர்டர்' செய்திருந்தேன் என்று. இதோ, தோடு வந்துவிட்டது" என்று கூறி, ஒரு ஜோடி கண்ணைப் பறிக்கும் தோடுகளைக் காண்பித்தாள். லக்ஷ்மியின் முகம் விகாரமடைந்தது. தோட்டைத் தன் கையில்கூட வாங்கிக் கொள்ளாமல் அப்படியே பார்த்துவிட்டு "பேஷாயிருக்கிறது!" என்று ஒரு மாதிரியாகச் சொன்னாள். வேறொன்றும் பேசவில்லை. சரஸ்வதிக்குத் தன் பெருமை முழுதும் சொல்லிக் கொள்ள முடியவில்லையே என்று சற்று ஏமாற்றமாய்த்தானிருந்தது. "என்ன விலை? ரொம்ப பூரிப்பாயிருக்கிறதே!" என்று ஏதாவது லக்ஷ்மி சொல்லுவாள்; அதைப் பயன்படுத்திக் கொண்டு தன் பிரதாபத்தையும், அகமுடையான் சாமர்த்தியத்தையும் எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் கிடைக்குமென்று எதிர்பார்த்தாள் சரஸ்வதி. ஆனால் லக்ஷ்மியின் நடத்தை அவளுக்குச் சற்று ஆச்சரியமாய்த்தானிருந்தது.

தன் ஊருக்குத் திரும்பிப் போய்ப் பல நாட்கள் ஆனபிறகு கூட, லக்ஷ்மிக்கு மேற்படி சம்பவத்தை நினைக்கும் போதெல்லாம் விவரிக்க முடியாத ஒரு உணர்ச்சி தோன்றும். ஏனென்று கேட்டால், அவளுக்கே தெரியாது!

அன்று அவள் மனவாட்ட முற்றிருந்ததற்கு இச்சம்பவம் காரணமல்ல. எத்தனை கஷ்டங்கள் அனுபவித்தாலும், எவ்வளவோ தியாகங்கள் செய்தாலும் குடும்ப சம்ரக்ஷணை சுலபமாக நடக்கவில்லையே என்றுதான் அவள் ஏங்கியிருந்தாள். அப்படியிருக்கையில், வெளியே போயிருந்த ராமசந்திரன் திரும்பி வந்தார். வரும்போதே ஏதோ ஒரு பாட்டை முனகிக் கொண்டே வந்தார். முன் தலை வழுக்கையான போதிலும் குஷிப் பேர்வழி. சற்று வேதாந்த சித்தமுடையவர். கஷ்டங்களைப் பொருட்படுத்தாதவர். "என்ன லக்ஷ்மி, ஏன் ஒரு மாதிரி யிருக்கிறாய்?" என்று கேட்டார்.

"மாதிரியென்ன? ஒன்றுமில்லை!" என்றாள் லக்ஷ்மி.

"பரவாயில்லை, சொல்லேன்."

"நம் நிலைமை இப்படியாய் விட்டதே என்றுதான்."

"நம்மால் திருத்தமுடியாத விஷயத்தைப் பற்றி வருந்தி என்ன பயன்?"

"அப்படியிருக்க முடிகிறதா? ஐந்நூறு, அறுநூறு என்று வரும்படி வந்த நாளிலெல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தால் இப்போது ஏன் இப்படி அவதிப்பட வேண்டும்?"

"படவேண்டுமென்று தலையில் எழுதியிருந்தால் சேர்த்து வைத்த பணமும் போய்விடும். நான் என்ன செய்வேன்? எனக்கு அனுபவம் அதிகரித்துக் கொண்டு வர வர

வரும்படி குறைந்து வருகிறது. இதுவும் ஒரு விசேஷந்தானே? கஷ்டம் வந்தால் பட்டுத்தானே தீரவேண்டும்?"

"சுகப்படுகிறவர்கள் சுகமாய்த்தா னிருக்கிறார்கள். நேற்றுக் கல்யாணம் செய்து கொண்டவர்க ளெல்லாம் நகையும் நட்டுமாக மூழ்குகிறார்கள். நமக்கென்ன வென்றால் இருந்த ஒன்றிரண்டும் போய்விட்டது."

ராமச்சந்திரனுக்குச் சற்றுத் தூக்கி வாரிப் போட்டது. சமாளித்துக் கொண்டு சொன்னார்:—"பிறருடன் ஏன் ஒப்பிட்டுக் கொள்கிறாய்? நம்மைவிட ஏழை ஸ்திதியி லிருப்பவர்களைப் பார்த்து மனத்தைத் தேற்றிக் கொள்ளக் கூடாதா? குழந்தைகளின் நலத்துக்காக நாம் எதையும் செய்ய வேண்டாமா? அது நம் கடமை யல்லவா?...... ஆமாம்; திடீரென்று உனக்கு ஏன் நகைப் பைத்தியம் பிடித்து விட்டது?"

"எல்லாம் வேண்டாமென்று வெறுத்துச் சந்நியாசியாகிவிட முடிகிறதா? நமக்காக வேண்டா விட்டாலும் நான்கு பேர் நம்மைக் கண்ணியமாக மதிப்பதற்காகவாவது நகை நட்டு வேண்டாமா? அந்த வைரத்தோடு போனதிலிருந்து எனக்கு வெளியில் தலை காட்டவே வெட்கமா யிருக்கிறது."

"என்ன லக்ஷ்மி! 'பணம் காசு பெரிதா, கௌரவம் பெரிதா?' என்று தர்க்கிக்கும் நீயா இப்படிப் பேசுகிறாய்? போகட்டும்; அப்படியே உனக்கு நகைகள் வேண்டுமென்றாலும், என்ன பிரமாதம்? இதோ பார், அடுத்த வருஷம் நம் கோபு பாஸ் பண்ணி விடட்டும். உடனே நூறு ரூபாய்க்குக் குறையாமல் எங்கும் வேலை கிடைக்கும். என்ஜினீரிங் படிப்புக்கு இப்போது ரொம்பக் கௌரவம். நாங்களிருவரும் சேர்ந்து சம்பாதித்தால் உனக்கு நகைகள் செய்வதுதானா பிரமாதம்?" என்று கூறிப் பூரிப்புடன் சிரித்தார். தன் மகன் சம்பாதிக்கப் போகிறானென்று நினைக்கும்போதே அவருக்கு அவ்வளவு ஆனந்தம்!

"ஆமாம்; இனிமேல் கோபு பாஸ் பண்ணி, வேலை கிடைத்துப் பணம் சேர்த்து நான் நகைகள் செய்துகொள்ளப் போகிறேனாக்கும்! அதற்குள் என் தலை நரைத்து விடும். நமக்குத்தான் குடும்பத்தை நடத்தவே எவ்வளவு பணம் வந்தாலும் போத வில்லையே?"

"நான் என்ன செய்யட்டும்? எனக்கென்று ஏதாவது செலவு செய்து கொள்கிறேனா? இவ்வளவு கஷ்டத்திலும் போன மாதம் இருபத்தைந்து ரூபாய்க்கு ஒரு பில் புடவை வாங்கிக் கொடுக்க வில்லையா? என்ன செய்யலாம்?"

இது வறுமையின் குணாதிசயங்களில் ஒன்று. கையில் பணமில்லாத போது சிறு விஷயங்களையும் கூடப் பெரிதாக எண்ணிச் சொல்லிக் காட்டுவோம்.

"எனக்கு ஒன்று தோன்றுகிறது. நீங்கள் என்ன சொல்லுவீர்களோ?" என்றாள் லக்ஷ்மி.

"என்ன? சொல்லேன்."

"டாக்டர்களுக் கெல்லாம் ராணுவத்தில் கமிஷன் கொடுக்கிறார்களாமே! நீங்களும் மனுப் போட்டால் என்ன?"



"பேஷ்! அதற்குள் போய் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டுவந்து விட்டாயா?"

"ஆஹா! கண்ணாடி இருப்பதே தெரியாமல் எவ்வளவு அழகாய்த் துடைத்திருக்கிறாய்! இதுவும் நல்லது!"

"அடபாவி! கண்ணாடியை உடைத்து விட்டாயா?"

"எனக்கு ஆக்ஷேபனை யில்லை. முன்பே நான் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோது நீதானே, 'நன்று யிருக்கிறது உங்கள் யோசனை! மிலிடரியில் சேர்ந்து சம்பாதித்துத்தான் நம் தரித்திரம் விடியப் போகிறதா, என்ன' என்று சொன்னாய்?"

"சொன்னேன். ஆனால் இப்போது நமக்குத் தெரிந்தவர்கள் அநேகர் போயிருக்கிறார்கள். இந்தியாவுக்குள்ளேயே மாற்றலாகும்படி சில வேலைகள் இருக்கிறதாம். அதற்கு நீங்கள் போனாலென்ன?"

"தாராளமாய்ப் போகலாம். பயந்து பயந்து வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தால் எப்படி உருப்படுகிறது? குழந்தைகளுக்கு ஏதாவது செய்ய வேண்டாமா? இந்த யுத்த காலத்தில் கமிஷன் எடுத்துக் கொண்டால் யுத்தம் முடிந்த பிறகு பெரிய வேலை கிடைக்கலாம்."

"சரி, அப்படியானால் ஒரு மனு எழுதிப் போட்டு வையுங்களேன். எப்படியாவது நம் தரித்திரம் தொலையட்டும்."

* * *

லக்ஷ்மிக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை. மனத்துக்குள் ஏதோ போராட்டம் நடந்து கொண்டிருந்தது. தான் ஏதோ குற்றம் செய்து விட்டதாகத் தோன்றியது.

"என்ன குற்றம்? குடும்பத்தின் நன்மைக்காகத்தானே அவரைப் போகச் சொல்லுகிறேன்?" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். ஆனால் அது உண்மையல்லவென்று அவளுக்கே தோன்றியது. பின் எது உண்மை? வேறொன்று மில்லையா? அப்படியானால் இந்தச் சமாதானம் அவள் மனதுக்கே ஏன் திருப்தி யளிக்கவில்லை?

மனத்துக்குள் போராட்ட மிருந்தாலும் வெளிக்கு ஒன்றும் காட்டிக் கொள்ளாமல் நாலைந்து நாட்கள் யந்திரம்போல் வேலை செய்து வந்தாள் லக்ஷ்மி. ஒரு நாள் மனதைத் திடப்படுத்திக் கொண்டு டாக்டர் அறைக்குள் சென்று, 'அந்தக் கமிஷனுக்கு மனுப் போட்டாய்விட்டதா?' என்று கேட்டாள்.

"இல்லை, ஏன்?"

"இல்லை......இல்லை......"

"ஏன், வேண்டா மென்று சொல்ல வந்தாயா?"

"ஆமாம்; ஹுஹும், இல்லை. ஞாபகப் படுத்தத்தான் வந்தேன்" என்று கூறிவிட்டு அவள் வெளியே போய் விட்டாள்.

3

டாக்டர் ராமச் சந்திரனுக்குக் கமிஷன் கிடைத்தது. விகத்தாபாத்தில் வேலைக்குச்

சேரும்படி உத்தரவு வந்தது. அவர் ரயிலில் முதல் வகுப்பில் ஏறிய போது லக்ஷ்மிக்கு இருந்த பெருமைக்கு ஓர் அளவில்லை.



லக்ஷ்மி மயிலாப்பூரில் தன் தம்பி வீட்டருகில் ஒரு வீடு எடுத்துக் கொண்டு குழந்தைகள் படிப்பைக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டியதென்று ஏற்பாடாயிற்று. ராமச்சந்திரன் தன் லக்ஷ்யத்தை மறக்காமல் கூடுமானவரை மிச்சப்படுத்தி மாதம் மூந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் அனுப்பி வந்தார். கொஞ்சம் கொஞ்சமாக லக்ஷ்மியின் 'அந்தஸ்து' உயர ஆரம்பித்தது. முதன் முதலாக, 'கில்ட்' வளையல்களை விட்டெறிந்து விட்டு தங்க வளையல்கள் வாங்கிப் போட்டுக் கொண்டாள். நாகரிகமான 'பேட்'டுகள் போட்ட புது மோஸ்தர் பட்டுப் புடவைகள் வாங்கி உடுத்திக் கொண்டாள். பெண் பத்மாவுக்கு விதம் விதமான 'கவுன்'கள் போட்டுக் 'கான்வெண்'டுக்கு அனுப்பினாள். பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஒரு சங்கீத பூஷணம் நியமிக்கப்பட்டார். சோபாக்கள் போட்ட வாசலறையில் ஒரு ரேடியோ எப்போதும் அலறிக் கொண்டேயிருந்தது. சுருக்கச் சொன்னால் எல்லாவிதத்திலும் லக்ஷ்மி முன்னே இருந்ததற்கு முற்றிலும் மாறாக இருந்தாள்.

ஆனால் இப்போது அவளுக்கு வேறொரு விதக் கிலேசம் ஏற்பட்டது. "அவர் என்ன கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறாரோ? நான் மட்டும் இங்கு சுகவாசம் செய்கிறேனே, இது நியாயமா?" என்று அடிக்கடி சொல்லிக் கொள்வாள். "கொஞ்ச நாட்கள் தானே? அவரும் சீக்கிரம் திரும்பி வந்து விடுவார்!" என்று தன்னையே சமாதானம் செய்து கொள்வாள். "அவர் ஒரு வேளை திரும்பி வராவிட்டால்......!" இதை நினைக்கும்போதே நெஞ்சு 'திக்'கென்று அடித்துக் கொள்ளும். ஆயினும் மனத்தை ஒருவாறு சாந்தப்படுத்திக் கொள்வாள். அவளை இதைவிட அதிகமாகத் துன்புறுத்தியது வேறொரு பிரச்னை. அது, "அவரை நான் உண்மையில் குடும்பத்தின் நலத்துக்காக ராணுவத்தில் சேரச் சொன்னேனா, அல்லது என்னுடைய சுயநலத்துக்காகவா?" என்பதுதான்.

'குடும்பத்துக்காக' என்று வாய் சொன்னாலும் உள்ளம், 'உனக்காகத்தான்; சமூகம் உன்னைக் கண்ணியமாக மதிக்க வேண்டுமென்பதற்காகவே நீ அவரை ஒரு கருவியாக உபயோகித்தாய்' என்று சொல்லும். அவள் எவ்வளவுக்கெவ்வளவு இதை மறக்க முயற்சித்தாளோ, அவ்வளவுக் கவ்வளவு அதுவே முன்னால் நிற்கும். எப்போதாவது லேசாகத் தோன்றும் இவ்வுணர்ச்சி நாளுக்கு நாள் பலமாக வேரூன்றி விட்டது. வெள்ளப் பெருக்கைத் தடுக்க முடியுமா?

ராமச்சந்திரன் தவறாமல் பணம் அனுப்பி வந்தார். மாதந்தோறும் கடிதம் வரும். அதில் தான் சௌக்கியமாயிருப்பதாகவும், குழந்தைகளைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருப்பதாகவும் எழுதியிருப்பார். ஒரு நாள் அவரிடமிருந்து வந்த கடிதத்தில் கீழ்க்கண்டபடி எழுதியிருந்தது:

கல்கத்தா.

அருமை லக்ஷ்மிக்கு,

ஆசீர்வாதம். எனக்கு இவ்வூருக்கு மாற்றலாகிப் பத்து நாட்களாகின்றன. 'காப்டன்' பதவி கிடைத்திருக்கிறது. சம்பளம், படி எல்லாம் சேர்ந்து ரூ. 900 கிடைக்கும். உங்களுக்கெல்லாம் சந்தோஷமாயிருக்கும். ஆனால் இன்னும் ஒரு வாரத்தில் சிங்கப்பூருக்குப் போகச் சொல்லி நேற்று உத்தரவாகியிருக்கிறது. போகு முன்

அங்கு வந்து விட்டுப் போகச் சாவகாச மில்லை. இன்று ரூ. 500 அனுப்பி யிருக்கிறேன்.

இப்படிக்கு,
ராமச்சந்திரன்."

லக்ஷ்மிக்குத் தலை சுழன்றது. "இந்தியா வுக்கு வெளியே அனுப்ப மாட்டார்களென்று நினைத்தேனே? இப்போது என்ன செய் வது? அதுதான் போகட்டும். இவர் என் பணத்தை மட்டும் அனுப்பினார்? நான்கு நாட்களாவது வந்து பார்த்து விட்டுப் போகக்கூடாதோ? விவரமாகக் கடிதம்கூட எழுத வில்லையே?" என்று ஏதேதோ எண்ணினாள்.

மன வியாகூலம் அதிகரித்தது. தினமும் தவறாமல் கடவுளைப் பூஜை செய்து கணவன் சௌக்கியமாய்த் திரும்பி வர வேண்டுமென்று பிரார்த்தித்தாள். என்ன செய்தும் மன நிம்மதி ஏற்பட வில்லை. முகத்தில் சோபை குறைந்து கொண்டே வந்தது. "பாவி! நான்தானே அவரை அனுப்பினேன்? கஞ்சியோ, கூழோ குடித்துக் கொண்டு கவலையற்று ஊரிலேயே குடும்பத்துடன் இருந்திருக்க லாகாதா?" என்று தன்னை நொந்து கொள் வாள். "கடவுள் கருணாநிதி. என்னை மோசம் செய்யமாட்டார்" என்று தனக் குள் சொல்லிக் கொள்வாள்.

* * *

எவ்வளவு மன வேதனை இருந்த போதி லும் சில விஷயங்களில் ஸ்திரீகள் தீவிரமாக நடப்பார்கள். அதே மாதிரி லக்ஷ்மியும் தான் நாலு பேருக்கு மதிக்கத் தக்கவளாக ஆகும் விஷயத்தில் மட்டும் மனத் தளர்ச்சி யடையாமலிருந்தாள். கடையில் தான் கோரியவைரத் தோட்டுக்கு ஆர்டர் கொடுக் கும்போது அவள் முகத்தில் புன்முறுவல் காணப்பட்டது.

ஒரு நாள் திடீரென்று ஒரு தந்தி வந்தது. நடுங்கிக் கொண்டே பிரித்தாள் லக்ஷ்மி. அதில் பின்வருமாறு எழுதி யிருந்தது:

"காப்டன் ராமச்சந்திரன், ஐ. எம். எஸ். இருக்குப் போர்முனையில் எதிரி யின் துப்பாக்கிக்கு இரையானார் என் பதை சர்க்கார் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறார்கள். அவ ருடைய ராஜவிசுவாசம் பாராட் டத் தக்கது."

இதைப் படித்து முடித்ததும் வாசலில் "அம்மா!" என்று கூப்பிடும் சத்தம் கேட்டது. "தோடு தயாரா யிடுத்துங்க!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார் பத்தர்!





மீளாத சிறை வாசம்

பகீரதன்

★

பள்ளிக்கூடத்தில் சாம்பமூர்த்திதான் முதல் மாணவன். படிப்பில் மட்டும் அல்ல; எல்லாவற்றிலும் அவன்தான் முதல் மாணவன். வருஷந்தோறும் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் அவனுக்குத்தான் முதல் பரிசு. தன் பிள்ளைக்குக் கிடைக்கும் பரிசுகளையெல்லாம் அவன் தந்தையான காசிநாத முதலியார் தன் நண்பர்களுக்கெல்லாம் காட்டிப் பெருமை அடைவார்.

பள்ளிக்கூடத்தில் நடக்கும் நாடகத்தில் மிக முக்கிய பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு திறமையோடு நடிப்பான் சாம்பமூர்த்தி. நன்றாகப் பாடுவான். நாடகம் முடிந்ததும் எல்லாரும் காசிநாதனைத்தான் புகழுவார்கள். “உமது பையன் ரொம்பக் கெட்டிக்காரன். புத்திசாலி” என்று சொல்லுவதைக் கேட்டு மகிழ்ச்சி அடையாத தகப்பனும் இருக்க முடியுமா?

இப்படி எல்லா விதத்திலும் முன்னணியில் இருந்துவந்த சாம்பமூர்த்தி, மாணவர்கள் வேலை நிறுத்தத்திலும் முன்னணியில் நின்றுவந்தான். மற்ற விஷயங்களில் முதல் மாணவனாக நின்றதற்குப் பரிசுகளும் நற்சாட்சிப் பத்திரங்களும் கிடைத்துவந்த சாம்பமூர்த்திக்கு வேலை நிறுத்தத்தில் முதல் மாணவனாக இருந்ததற்காகப் பள்ளிக்கூடத்திலிருந்தே வெளியேறும்படி நேர்ந்தது.

மறுபடியும் சாம்பமூர்த்தியைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காகக் காசிநாத முதலியார் பட்ட கஷ்டமெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகவே முடிந்தது.

எந்தப் பள்ளிக்கூடத்திலும் தன்னைச் சேர்த்துக் கொள்ளாததைப் பற்றிச் சாம்பமூர்த்தி கவலைப்படவேயில்லை. ஏனெனில், அவன் தன் வாழ்க்கையைத் தேசத்துக்கு அர்ப்பணம் செய்து விடுவதென்று நிர்மானித்திருந்தான். குமாஸ்தா வேலைக்கு மனுப்போட வேண்டுமென்றால் தானே அந்தப் பள்ளிப் படிப்பு வேண்டும்?

மாணவர்களுக்குத் தலைவனாக வாழ்ந்து வந்த சாம்பமூர்த்தி, வாலிபனானதும் ஜனங்களுக்குத் தலைவனாக மாறிவிட்டான். அதன் காரணமாக அவன் இருந்த ஜில்லா போர்டுக்குத் தலைவனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டான். பொழுது விடிந்து பொழுது போனால் பொதுக் கூட்டத்தில் பேசுவதும், கிராமப் புனருத்தாரண வேலைகளில் கலந்து கொள்ளுவதுமாக இரவு பகல் ஓயாது, பொது நலத்துக்காக உழைத்து வந்ததின் பலனை அவன் அதி சீக்கிரத்தில் அடைந்து விட்டான்.

அரசாங்கத்தார் அவனைப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்து விட்டனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், சாம்பமூர்த்திக்கும் தேசத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணந்தான்; சர்க்காருக்கும் தேசத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணந்தான்!

தன் மகன் கைது செய்யப்பட்ட செய்தியைக் கேட்ட காசிநாதனுக்கு மூச்சே நின்றுவிடும்போலிருந்தது. “தேச சேவையாவது மண்ணாங்கட்டியாவது? இருப்பதை வைத்துக்கொண்டு சுகமாகக் காலந்தள்ளாது இப்படிக் கஷ்டப்படுகிறானே!” என்று ஏங்கினார் முதலியார். அவர் கண்ணீர் வடிப்பதைக் கண்டு யாரும் கலங்கவில்லை. அதற்கு நேர்மாறாக, சாம்பமூர்த்தியைப் புகழ ஆரம்பித்து விட்டார்கள். அவனுக்குப் பூமாலையுடன், புகழ்மாலையும் ‘ஜே!’ கோஷமும் போட்டுச் சிறைக்கு அனுப்பி வைத்தார்கள். அதைப் பார்த்த முதலியாருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. “என்ன

ஜனங்கள்! என் மகன் சிறைக்குப் போவதைப் பார்த்து இப்படிச் சந்தோஷப்படுகிறார்களே!" என்று வருந்தினார்.

★

"டக், டக்" என்ற சத்தத்தைக் கேட்டு ஆவலோடு ஓடிவந்த அனுராதா, "யாரது?" என்று கேட்டாள்.

"இந்தச் சமயத்தில் யார் வருவார்களாம்?"

குரலிலிருந்து கதவைத் தட்டுகிறவர் தன் கணவர் என்பதை அறிந்துகொண்ட அனுராதா, இந்தச் சமயத்தில் "ஒரே ஒருவர் தான் வரமுடியும்!" என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தாள்.

"அவர் என்னைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார் காசிநாத முதலியார்.

காசிநாதன் அந்த ஊரில் ஒரு பிரபல ஜவுளி வியாபாரி. அவருக்குத் தன் மகன் சிறை சென்ற பிறகு மனநிம்மதியே இல்லை. அதனாலேயே மனம் நொந்து இருக்கும் தன் மனைவி அனுராதாவாவது சந்தோஷமாக இருக்கட்டும் என்று எவ்வளவோ சந்தோஷமாக இருப்பவன் போல் நடித்துக்கொண்டு வந்தான். அனுராதாவும் தன் கணவனாவது சந்தோஷமாக இருக்கட்டுமென்று அடிக்கடி ஆசை வார்த்தைகளைச் சொல்லி அவரை ஆனந்தப்படுத்திக் கொண்டிருந்தாள்.

இன்று அவர் உண்மையிலேயே சந்தோஷமாக இருக்கும்படி நேர்ந்து விட்டது. அன்று சிறையிலிருந்த சாம்பமூர்த்தியிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அந்தக் கடிதத்தைக் கொண்டுவந்து அனுராதா கொடுத்தாள். அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது இதுதான்:

அருமை அப்பாவுக்கும் அன்புள்ள அம்மாவுக்கும் நமஸ்காரம்.

அப்பா! என்னைப் பெற்றதற்காக நீங்கள் மட்டும் சந்தோஷமடைவதை நான் விரும்பவில்லை; தேசமே சந்தோஷப்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். அதற்காக நீங்கள் வருத்தப்படுவதற்கு ஒரு காரணமும் இல்லை. வாழ்க்கை, போராட்டம் நிறைந்தது. உலகில் ஒவ்வொரு மனிதனும் அவனவன் மனைவி மக்களின் நலத்திற்கென்றே வாழ்க்கைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறான். அத்துடன் பொது மக்களின் நலத்திற்கும் சிறிதாவது பாடுபட வேண்டுமென்பது என் கொள்கை. இந்தக் கொள்கையை என் வாழ்நாளில் நான் எந்தக் காரணத்தைக் கொண்டும் கைவிட முடியாது. நான் ஒன்று கேட்கட்டுமா அப்பா? மீளப் போகும் சிறைக்குச் சென்றதற்கு இப்படி வருந்துகிறீர்களே, எல்லோருக்கும் மீளாத சிறை ஒன்று இருக்கிறதே, அதற்குச் சென்று விட்டாலோ? — அப்பொழுது அடையப்போகும் ஆறுதலை இப்பொழுதும் ஏன் அடையக் கூடாது?

அப்பா! நான் இப்படியெல்லாம் எழுதியதற்குப் பலன் நீங்கள் சிறிதாவது ஆறுதலடைந்தால் போதும் என்பதற்காகத்தான். நான் இன்னும் இரண்டு வாரத்தில் விடுதலையாகி விடுவேன்; ஆனால் தேதி சரியாகத் தெரியவில்லை. கவலை வேண்டாம்.

சாம்பமூர்த்தி.

இந்தக் கடிதத்தை அனுராதாவும் காசிநாதனும் ஆயிரம் முறையாவது படித்திருப்பார்கள். இரண்டு வருஷங்கள் கழித்து வரும் தன் மகனைப் பார்க்க எந்தத் தாய் தகப்பன்மார்களுக்குத்தான் ஆவலாக இருக்காது?

விடுதலையாகி வரப்போகும் தன் பிள்ளையைப் பற்றி நினைத்துக் கொண்டே இரண்டு பேரும் மெய்ம்மறந்து இருந்தார்கள். இப்படி எத்தனை நாழி இருந்தார்களோ தெரியவில்லை. "சார், தந்தி!" என்ற சத்தம்கேட்டு ஆவலோடு வாசலுக்கு ஓடினார் முதலியார்.

அந்தத் தந்தியில், "தங்கள் மகன் திடீரென்று இறந்து விட்டதற்காக வருந்துகிறோம்" என்று இருந்தது.


தன்னையும் மீறி அருகிலிருந்த தந்திச் சேவகனைப் பிடித்துக்கொண்டு "ஹா!" என்று அலறி விட்டார் முதலியார். விஷயம் தெரியாத அனுராதா, "என்ன? என்ன?" என்று கேட்டாள்.


தந்தியை அவளிடம் கொடுத்து விட்டு அப்படியே உட்கார்ந்து விட்டார். அதைப் பார்த்த அனுராதா சுவரில் மோதிக் கொண்டு கதற ஆரம்பித்து விட்டாள்.


★

சாம்பமூர்த்தி மறைந்து எத்தனையோ வருடங்களாகி விட்டன. ஆனால், "மீளப் போகும் சிறைக்குச் சென்றதற்கு இப்படி வருந்துகிறீர்களே, மீளாத சிறைக்குச் சென்றுவிட்டாலோ?" என்ற அந்தத் தியாக மூர்த்தியின் கேள்வி மட்டும் சாம்பமூர்த்தியின் பெற்றோர்களின் மனத்தில் ஓயாமல் எதிரொலி செய்து கொண்டே இருக்கிறது.

கண்கூடாகக் காண்பதையே நம்புகிறோம்.







விலைவாசிகள் இறங்குவதனால் எதிர் காலத்தை முன்விட்டுச் சேமித்து வைப்பதே புத்திசாலித் தனம் என்று தெளிவாகிறது.

சென்ற வருஷம் ஒருவரும் பணத்தைச் சேமிக்காதிருந்தால், கண்டிப்பான விலைக் கட்டுப்பாட்டு விதிகளை அரசாங்கத்தார் பிறப்பிக்காதிருந்தால், விற்பனைக்கு வரும் பொருட்களை ஏராளமாக உற்பத்தி செய்யாதிருந்தால், சென்ற வருஷம் இருந்ததைப் போலவேதான் இன்றும் தங்கு தடையின்றி விலைகள் உயர்ந்திருக்கும்.

ஆனால், தனிப்பட்டவர்கள் சேமிப்பின் பயனாகவும், அரசாங்கத்தாரின் கட்டுப்பாடுகளின் பயனாகவும் விலைவாசிகள் இறங்கிவிட்டன. முட்டாள்தனமாக, நகைகள், சொத்துக்கள், பண்டங்கள், சாமான்கள் ஆகியவற்றை வாங்கியவர்கள், அவற்றின் மதிப்பு தம் கண் முன்னே குறைவதைக் காண்கிறார்கள்.

இதோடு நின்றுவிடவில்லை. விலைவாசிகள் இன்னும் குறையும். புத்திசாலிகளாயிருங்கள். விலைவாசிகளின் வீழ்ச்சி உங்களுக்கு தீங்கிழைக்கும்படி விடாதீர்கள்.

கீழ்க்கண்டவை முன்போலவே இப்போதும் மிகச்சிறந்த முதலீடுகளாகும். விலைகள் ஒவ்வொரு தடவை குறையும்போதெல்லாம், இந்த முதலீடுகளின் மதிப்பு உயருகிறது— **கூட்டுறவு சங்கங்கள், இன்ஷூரன்ஸ், சேமநிதி, தபாலாபீஸ் சேமநிதி, அரசாங்கக் கடன் பத்திரங்கள், தேசீய சேவிங்ஸ் சேர்டிபிகேட்டுகள்.**

இப்போது பொருட்களை வாங்காதீர்கள். யுத்தம் முடிந்த பின், யுத்தகாலக் கட்டுப்பாட்டுச் சாமான்கள், புதிய வீடு, சைகிள், மோட்டார் கார் முதலியவற்றை வாங்குவதற்கு, யுத்தம் முடிந்த பிறகு ஏராளமான சந்தர்ப்பங்கள் உண்டு. இப்போது பணத்தைச் சேமித்து அப்போது பணத்தைச் செலவு செய்யுங்கள்.

உங்களால் இயன்றவரை மிச்சப் படுத்துங்கள்.

மிச்சப் படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.

தேசியப் போர்முனையார் விடுக்கும் தேசிய வேண்டுகோள்

AAA 1114 TM



ராம்சிங்

கே. சந்தானம்

★

1938-ல் மகாதேவன் எம். ஏ. பாஸ் செய்துவிட்டு சரஸ்வதி தேவியிடம் விடை பெற்று லக்ஷ்மியின் மாளிகை வாயிலில் விண்ணப்பம் செய்துகொண்டான். முதல் வகுப்பு குமாஸ்தாப் பரீக்ஷையில் தேறி, மத்திய அரசாங்கத்தின் சாதல்வார் இலாகாவில் ரூ 150-ல் வேலையில் அமர்ந்தான். தனலக்ஷ்மியோடு கிரகலக்ஷ்மியும் தானே வருவாள் அல்லவா? காலேஜ் புரொபஸர் ராமசாஸ்திரிய்யர் பெண் ஜானகி பி. ஏ. மகாதேவன் அதிர்ஷ்டத்தின் அவதாரமானாள். ஆனால் எல்லாவற்றையும் காட்டிலும் ராம்சிங் வேலைக்காரனாகக் கிடைத்ததே பெரிய அதிர்ஷ்டம். எட்டு ரூபாய் தான் சம்பளம். ஆனால் வீட்டு வேலை சகலமும் செய்து விடுவான். காலையில் நாலு மணிக்கு எழுந்து வீடு சுத்தம் செய்து, சமையல் பண்ணி, ஐயாவுக்கு ஆபீஸ் உடை எடுத்துக் கொடுத்து, வேஷ்டி, புடவை தோய்த்து, இரவில் இவர்கள் படுக்கும் வரையில் சளைக்காமல் வேலை செய்தான். முதலில் கடைக் கணக்கு, வண்ணான் கணக்கு, பாத்திரங்கள் இவற்றை யெல்லாம் ஜானகி கவனித்து வந்தாள். ஆனால் ராம்சிங்கைப் போன்ற நல்ல வேலைக்காரன் இருக்கையில் இது வீண் பிரயாசையாகத் தோன்றிற்று. ஆறு மாதத்திற்குள் வீட்டு விஷயங்கள் எல்லாம் அவனிடமே ஒப்படைக்கப்பட்டன. தன் காலத்தை என்ன செய்வது என்று தெரியாமல் ஜானகி பிரைவேட்டாக எம். ஏ. பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கினாள். ஆனால் தாம்பத்தியப் பரீட்சை குறுக்கிட்டு இத் திட்டத்தை ரத்து செய்து விட்டது. அடுத்த மூன்று வருஷத்திற்குள் சந்திராவும், கண்ணனும் தோன்றி ஜானகிக்குப் போதிய வேலை கொடுத்து வந்தனர். உண்மையில், ராம்சிங்கின் தலையில்தான் இப் பாரமும் சுமந்தது. வீட்டு வேலையும் செய்து, குழந்தைகளையும் அவன் எப்படிக் கவனித்துக் கொண்டானோ கடவுளுக்குத் தான் வெளிச்சம். ஜானகி தவறாமல் கிளப்புக்கும் பார்டிகளுக்கும் போய் வந்தாள். யுத்தம் தொடங்கியதும், எல்லா இலாகாக்களும் பெருகின. வேலையில் அமர்ந்து மூன்று வருஷத்திற்குள் மகாதேவன் மாதம் ரூ. 600 சம்பளத்தில் சூப்பிரண்டெண்டானான். தினந்தோறும் நக்குமுன் ஜானகியும் ஹிட்லரை மனமார வாழ்த்தினாள்.



“ராம்சிங், சமையலாய் விட்டதா?”

“அடே ராம்சிங், சந்திரா குளிப்பதற்கு வென்னீர் எடுத்து வைக்கவில்லையா?”

“ராம்சிங், இன்னும் பூட்ஸ் துடைக்க வில்லையா?”

“அடே ராம்சிங், காய்கறிக் காரன் வாசலில் வந்து நிற்கிறான், பார்!”

இப்படியே நான் முழுதும் ராம்சிங்கை எல்லோரும் உத்தரவிடுவதும், பொறுமையாக ராம்சிங் பணி செய்வதும் இந்தக் குடும்பத்தின் சம்பிரதாயமாயிற்று. மகாதேவன் சம்பளம் ரூ. 600 ஆனதும், அவனும் ஜானகியும் தீர்க்க யோசனை செய்து ராம்சிங்கின் சம்பளத்தை ரூ. 12 ஆக்கினார்கள். தங்களுடைய தாரான சிந்தனையைப் பற்றிப் பெருமை கொண்டார்கள்.



1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி இக்குடும்பத்தின் ஜாதகத்தில் சனிபகவான் உச்சத்தில் வந்து சேர்ந்தான். அன்று ராம்சிங் வேலையெல்லாம் முடித்து விட்டு, இரவு 10 மணிக்கு ஜானகியிடம் வந்து,

"நான் சண்டையில் சேர்ந்துவிட்டேன், நாளைக்காலையே போகிறேன். ஆசீர்வாதம் செய்ய வேண்டும்" என்றான்.

ஜானகி பிரமித்து விட்டாள். வேகமாகத் தன் புருஷனிடம் வந்து சொன்னாள்:

"பார்த்தீர்களா, ராம்சிங் செய்த காரியத்தை! சண்டையில் சேர்ந்துவிட்டானாம்!"

"ஏன் சேரக்கூடாது? அவனுடைய பாக்கி சம்பளத்தையும், ரூ. 10 இனாமும் கொடுத்துப் போகச்சொல்லு" என்றான் மகாதேவன்.

"உங்களுக்கென்ன? நாளை முதல் நம் வீடு என்ன ஆகும்?" என்று கோபித்தாள் தர்மபத்தினி.

"நாம் அவனை விலக்கு வாங்கிவிட்டோமா? வேறு வேலைக்காரனை வைத்துக் கொள்ளுவோம். இல்லாவிட்டாலும், மற்றவர்களைப்போல் வீட்டை சமாளித்துக் கொள்ள உனக்கு சக்தியில்லையா?" என்று சிரித்தான் மகாதேவன். ஒன்றும் பதில் சொல்லாமல் ராம்சிங்கின் கணக்கைத் தீர்த்து அவனுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டாள்.

ராம்சிங் போன பிறகு என்ன முயற்சி செய்தும், ஜானகிக்கு வேறு வேலைக்காரன் கிடைக்க வில்லை. ஒரு சிறிய குடும்பத்தில், இவ்வளவு வேலை இருக்குமென்று ஜானகி கனவிலும் நினைத்ததில்லை. எந்தக் காரியத்தை எந்தக் கிரமத்தில் செய்வது என்றும் புரியவில்லை. வழக்கம்போல் மகாதேவன் தன் அறையில் உட்கார்ந்து, ராம் சிங்கைப் போல் தானும் பணிவிடை செய்ய வேண்டுமென்று காத்திருப்பதைக் கண்ட ஜானகிக்கு ஆத்திரத்தை அடக்க முடியவில்லை.

'அழுகிற குழந்தையைக் கவனித்தால் குறைந்து போகுமோ' என்பாள். மகாதேவன் முணுமுணுத்துக் கொண்டு போய்க் கண்ணாடித் தூக்கிக் கொள்ளுவான்.

'இன்றைக்குப் பால் திரிந்து விட்டது; கடையில் போய்க் கொஞ்சம் தயிர் வாங்கிக் கொண்டு வாருங்கள்' என்பாள். குப்பிரண்டெண்டு மகாதேவன் தலைகுனிந்து பாத்திரத்தை எடுத்துக்கொண்டுபோய்த் தயிர் வாங்கி வருவான். இருவரும் பரஸ்பரம் முகத்தைப் பார்த்துப் பேசுவது நின்று போயிற்று. அந்த ஒரு மாத காலம் எப்படிச் சமாளித்தாளோ, அதைப் பிற்காலத்தில் நினைத்தால் ஜானகி திகிலடைவாள். குழந்தைகளை அழைத்துக்கொண்டு தன் தாய் வீட்டுக்குப் போய் விட்டாள்.

ஜானகி சென்னைக்கு வந்து சேர்ந்து மூன்று மாதங்களுக்குப் பின் இரண்டு கடிதங்கள் வந்தன. ஒன்று அவள் புருஷனிடமிருந்து வந்தது. அக் கடிதத்தில்:

என் பிரியமுள்ள ஜானகிக்கு,

எனக்குக் குண்டூசி கண்ட்ரோலர் வேலையாகி யிருக்கிறது. சம்பளம் மாதம் ரூ. 1200. உனக்குச் சந்தோஷமாகுமென்று நம்புகிறேன். ஆனால் அதன் வரலாறு ஒரு சிறு கதை.

நீ போனது முதல் பரமேஸ்வரய்யர் ஹோட்டலில் சாப்பிட ஆரம்பித்தேன். சாப்பாடு ஒத்துக் கொள்ளாமல் மூன்று நாள் படுக்கையிலிருந்து டாக்டருக்கு ரூ. 50 கொடுத்தேன். வேறு ஹோட்டலில் சாப்பிட ஆரம்பித்தேன். இங்கேயும் சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லை. இரண்டு மாதம் லீவு எடுத்துக் கொள்ளலாமென்று நினைத்துச் சென்ற சனிக்கிழமை சாயங்காலம் காரியதரிசி தாரா சந்து வீட்டிற்குப் போனேன். அவர் வீட்டில் இல்லை. மாலை 7 மணியிருக்கும்; வாசலில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். சில நிமிஷங்களுக்

TEXTILE CONTROL

வியாபாரிகளுக்கு எச்சரிக்கை


1944-ம் வருஷம் நவம்பர் 4-ம் தேதி வெளியான இந்திய சர்க்கார் நெ. T. B. (1) 29/44 அறிக்கையின் பிரகாரம், 1943-ம் வருஷத்திய பஞ்சு, துணி நூல் கட்டுப்பாடு உத்தரவின் 14-ம் பிரிவு திருத்தி யமைக்கப் பட்டிருக்கிறது. இதன்படி, 1944-ம் வருஷம் டிஸம்பர் 31-ம் தேதிக்குப் பிறகு, 1943-ம் வருஷம் ஆகஸ்ட் முதல் தேதிக்கு முன் இந்தியாவில் தயாராகி 'பாக்' செய்யப்பட்ட நூலையோ, துணிகளையோ, 1943 - ஜூலை 31 தேதிக்குப் பின்னும், 1944 ஜனவரி முதல் தேதிக்கு முன்னும் பாக் செய்யப் பட்ட 'டெக்ஸ் மார்க்' துணிகளையோ நூலையோ எந்த வியாபாரியும், வாங்குவதோ, விற்பதோ, விற்பனை செய்யாமல் வைத்திருப்பதோ குற்றமாகும்.

எந்த விதமான துணிகளையும் நூலையும் இந்தியாவில் உற்பத்தியானதா யிருந்தாலும் சரி, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதா யிருந்தாலும் சரி, சரக்கின் மேல் குறிப்பிட்டிருக்கும் தேதியிலிருந்து 12 மாதங்களுக்குள் விற்றுத் தீர்ந்தாக வேண்டும். குறிப்பிட்ட தேதிக்கு ஆறு மாதத்திற்கு மேல் சரக்குகள் உள்ள பேல்களைத் திறக்காமல் வைத்திருக்கக் கூடாது. பேல்களிலுள்ள மேல் பாகம், சட்டம் முதலியன நீக்கப்பட்டு விட்டால் பேல்களைத் திறக்கவில்லை என்று அத் திருத்தத்தின்படி முடிவு செய்யப்படும்.

தன் சக்திக்கு மீறிய காரணங்களினால் சரக்குகள் விற்க முடியாமற் போயிற்று — என்று ருஜுப்படுத்த முடிந்தாலொழிய எந்த வியாபாரியும் டெக்ஸ்டைல் கமிஷனர் குறிப்பிட்ட கால வரையறைக்குமேல் சரக்குகளை வைத்துக் கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள். அவ் உத்தரவை மீறுகிறவர்கள் தங்கள் வியாபார லைசென்ஸை இழப்பதல்லாமல், பிராஸிக்யூட் செய்யப்படுவார்கள். எந்த சாமான்களை வைத்துக்கொண்டு குற்றம் செய்கிறார்களோ, அந்த சாமான்கள் பறிமுதல் செய்யப்படும்.

எம். கே. வெல்லோடி,
டெக்ஸ்டைல் கமிஷனர்
கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா

நேஷனல் இரண்டு வார சேவிங்ஸ் இயக்கம்



மிச்சப்படுத்தும் வழி

டிசம்பர் மாதம் 1ந்தேதி முதல் 15ந்தேதி வரையுள்ள இரண்டு வாரங்களில் கோடிக்கணக்கானவர்கள், பணத்தை மிச்சப்படுத்தி அதை புத்திசாலித்தனமாக சர்க்கார் பாதுகாப்புகளில் முதலீடுசெய்து தங்களது பிற்காலத்திற்குத் திட்டங்களை வகுத்துக்கொள்ளுவார்கள்

உங்கள் முன்னேற்றத்திற்கும், யுத்தத்திற்குப் பிறகு உங்கள் மக்களுக்கான திட்டங்களுக்குப் வழிகோலினீர்களா?

அதை ஆரம்பிப்பதற்கு இரண்டு வார சேமிப்பு இயக்க காலம் தான் தகுந்த காலம்.

பார்த்துமாத்திரத்தில்
விளங்கக்கூடிய
சர்க்காரின் பாதுகாப்புகள்.

நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்.

சிகள் 5000 ரூ. வரையிலும் வாங்கலாம். 3 வருஷங்களுக்குப் பிறகு ரொக்கமாக மாற்றலாம்.

12 வருஷங்களுக்குப் பிறகு ஒவ்வொரு ரூ. 10 க்கும் ரூ. 15 பெறுவீர்கள். இது 3½ சதா வட்டிக்கு சமானமாகும்.

வருமான வரி கிடையாது.

சர்க்காரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகள், சேவிங்ஸ் பீரோ, தபாலாபீஸ்களில் கிடைக்கும்.

விக்டரி லோன்.

இவ்வளவு தொகைக்குத்தான் வாங்கலாம் என்ற நிர்ணயம் கிடையாது.

1957ல் மொத்த தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

3 சதா வட்டி கொடுக்கிறது.

வேண்டுமானால் எப்பொழுதாயினும் விற்கலாம். இம்பீரியல் பாங்கின் கிளைகளிலும், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலும், சர்க்கார் கஜானாவிலும் சப் டிரஷரிகளிலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

இப்பொழுதுதான் மிச்சப்படுத்த ஏற்ற சமயம்

இந்திய சர்க்கார் நிதி இலாகா வெளியிட்டது.

TM AAA 1249

கெல்லாம் ஒரு கார் வந்தது. ஒரு நவநாகரிகப் பெண்மணி வந்து இறங்கினள். எழுந்து நின்றேன். என்னை வீட்டிலிருக்கும் வேலைக்காரன் என்று நினைத்துத் தாராசந்த் எங்கே என்று கேட்டாள். அவளுடைய பெயரை அறிய விரும்பி, விஸிடிங் கார்டு கேட்டேன். 'குலாப் ராணி' என்ற பெயர் கொண்ட கார்டு கொடுத்தாள். உன்னை போய்ப் பார்த்து வருவதாகப் பாவனை செய்து வந்தேன். அந்தச் சமயத்தில் தாராசந்த் வந்து சேர்ந்தார். என்னையும் அம்மாதையும் கண்டு அவர் மனதில் கலக்கமுண்டானதற்கு அறிகுறி முகத்தில் தோன்றிற்று. அசட்டுச் சிரிப்புடன் என்னை வரவேற்று விசாரித்தார். என் சமாசாரத்தைச் சொன்னேன். அடுத்த நாள் ஆபீஸில் வந்து பார்க்கச் சொன்னார். அப்பொழுது தனக்கு என் பேரில் இருந்த நன்மதிப்பைத் தெரிவித்து, குண்டூசி வியாபாரத்தை அடக்கியாளப் புதிய ஏற்பாடு செய்யப் போவதாகவும், என்னை கண்டிரோலராகச் செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் சொன்னார்.

நீ சமையல் நன்றாகக் கற்றுக் கொண்டிருப்பாய் என்று நம்புகிறேன். சந்திராவுக்கும் கண்ணனுக்கும் எனது அன்பு.

இரண்டாவது கடிதம் ஜானகியின் ஆருயிர்த் தோழி கமலாவிடமிருந்து:

பிரிய சகி,

ஒரு வாரமாக இந்தக் கடிதம் எழுதலாமா வேண்டாமா வென்று என் மனம் ஊசலாடிக்கொண்டிருந்தது. முடிவில் எழுத வேண்டியது என் நட்பின் கடமை யென்று தீர்மானித்து எழுதுகிறேன்.

உன் புருஷருக்குக் குண்டூசி கண்டிரோலர் வேலை ஆனது முதல் மிகவும் சந்தோஷமில்லாத சில செய்திகளும் காதில் விழுகின்றன. பாரிஸ் ஹோட்டல் உனக்குத் தெரியும். அதில் பான கோஷ்டியில் அவர் பங்கு எடுத்துக் கொள்ளுகிறாராம். அவருக்கு ஒரு வங்காளப் பெண் டைப்பிஸ்டாம். ஆனந்தமயி என்ற பெயராம்! அடிக்கடி அவர்கள் இருவரும் சினிமாவுக்குப் போவதாகச் சொல்லுகிறார்கள். மொத்தத்தில் நீ சீக்கிரம் வந்து விடுவது நலமென்று தோன்றுகிறது.

ஜானகி திகிலடைந்து அடுத்த நாளே டில்லிக்குப் புறப்பட்டாள். சந்திராவை அம்மாவிடம் விட்டு விட்டு, கண்ணனுடனும் சமையற்கார சிவராமனுடனும் தன் வீடு வந்து சேர்ந்தாள்.

செடிகளை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கொண்டு போனால் அவற்றின் சுபாவம் மாறுவதைக் கண்டிருக்கிறோம். மனிதர்களும் அவ்வாறுவதுண்டு. டில்லிக்கு வந்து ஒரு மாதம் சிவராமன் நல்ல பிள்ளையாகத்தானிருந்தான். ஆனால் அதற்குள் அவனுக்குப் பல தோழர்கள் கிடைத்து விட்டார்கள். அவன் போக்கும் மாறிவிட்டது. ஜானகி இதை உணர்ந்தாள். ஆனால் அவன் போய்விட்டால் என்ன செய்வது என்று சும்மா இருந்தாள். ஒரு நாள் கண்ணனைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு, மகாதேவனும் ஜானகியும் வெளியில் போய் வந்தார்கள். குழந்தை அவர்களைப் பார்த்ததும் ஓடிவந்து 'சிவராமன் அடித்தான்' என்று விம்மி விம்மி அழ ஆரம்பித்தது. ஜானகிக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை.

"அடே, தடியா! உனக்கென்ன கேடு வந்தது?" என்றாள்.

"அதிகப் பேச்செல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள்" என்று சாவிக் கொத்தை வீசி எறிந்து விட்டு வேகமாய்ப் போய் விட்டான்.



அப்பா:—டே ராமு! நானும் அம்மாவும் நீ படிக்காததற்காக உன்னை உதைக்கிறது என்று தீர்மானம் பண்ணியிருக்கிறோம்.

ராமு:—இந்த ஒரு விஷயத்திலாவது இரண்டு பேரும் ஒத்துப் போனீர்களே, அதுவரை எனக்குச் சந்தோஷந்தான்.

—பக்தவத்ஸலம்.

மறுபடியும் வேலைக்காரனில்லாமல் தானே குடும்பத்தை நடத்தும்படியாயிற்று. பல்லைக் கடித்துக் கொண்டு வேலை செய்திருப்பாள். ஆனால் மாலை வேளைகளில் தன் புருஷன் யாருடன் எங்கே போகிறானோ வென்று சந்தேகம். வாய் திறந்து கேட்பதற்கும் பயம். இந்தக் கவலையில் அவள் நாளுக்கு நாள் மெலிந்து வந்தாள்.

1943-ம் வருஷம் ஆகஸ்டு 14-ம் தேதி மாலை 6-மணிக்கு ஜானகி வீட்டு வாசலில் உட்கார்ந்

திருந்தான். திடீரென்று ஒரு சிப்பாய் அவன் முன் வந்து நின்றான். பருத்துக் கொழுத்திருந்தான். ஒரு கண் ஏதோ போலிருந்தது. ஜானகி திடுக்கிட்டெழுந்தாள்.

"என்ன அம்மா, என்னை அடையாளம் புரியவில்லையா?" என்றான் சிப்பாய். ஜானகி உற்றுப் பார்த்தாள். அவள் முகத்தில் தானாகவே முறுவல் பூத்தது.

"அடே, ராம் சிங்! எப்படி ஆய்விட்டாய்? அடையாளமே தெரியவில்லை" என்றாள்.

ராம் :—ஐயா, குழந்தைகள் எல்லாரும் சௌக்கியமா?

ஜானகி :—சௌக்கியம். உன் கதையைச் சொல்லு.

ராம் :—அதிகமொன்றுமில்லை. மூன்று மாதம் பழகிவிட்டு, அஸ்ஸாம் போனேன். முதல் நாளே குண்டு பட்டு ஒரு கண் போய் விட்டது. இரண்டுமாதம் ஆஸ்பத்திரியிலிருந்து ஊருக்கு அனுப்பினார்கள். அங்கே கலியாணம் செய்து கொண்டேன். உங்களைப் பார்த்துப் போக வந்தேன்.

கல்யாண சமாசாரம் கேட்டு ஜானகிக்குக் கவலை உண்டாயிற்று.

ஜானகி :—மிகவும் சந்தோஷம். அப்படியானால் திரும்பவும் வேலைக்கு வரமாட்டாய்?

ராம் :—அப்படியொன்றுமில்லை, அம்மா! உங்களுக்கு வேண்டுமானால், திரும்பியும் வேலைக்கு வருகிறேன்.

ஜானகி :—பிழைத்தேன் அப்பா, நீ இல்லாமல் நான் பட்ட கஷ்டத்திற்குக் கணக்கில்லை.

ராம் :—எனக்கும் உங்களிடம் வேலை செய்ய சந்தோஷம், அம்மா. ஆனால் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

ஜானகி :—மனதை விட்டு தாராளமாகச் சொல்லு, ராம் சிங்!

ராம் :—மாதம் முப்பது ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும்.

ஜானகி :—சரி, கொடுக்கிறேன்.

ராம் :—ஆறு மாதத்திற்கு ஒரு மாதம் சம்பளத்துடன் லீவு கொடுக்க வேண்டும்.

(ஜானகி யோசித்தாள்.)

ராம் :—இல்லாவிட்டால், என் வீட்டுக்காரி வேலை எடுத்துக் கொள்ள அனுமதிக்க மாட்டாள்.

ஜானகி:—வருஷத்தில் இரண்டு மாதம் சர்க்கார்கூட லீவு கொடுப்பதில்லை. சரி கொடுக்கிறேன்; அவ்வளவுதானே?

ராம் :—இன்னும் ஒரே ஒரு விஷயம். என் குடும்பத்திற்கு வேண்டிய துணி கொடுக்க வேண்டும். வருஷத்திற்குச் சுமார் நூறு ரூபாய் ஆகலாம்.

ஜானகியின் கண்களில் நீர் ததும்பலாயிற்று. இவ்வளவு நிபந்தனைகளையும் தான் ஒப்புக் கொண்டாலும், மகாதேவன் ஒப்புக் கொள்ளுவானா? ஆனால், ராம் சிங் போய் விட்டாலோ? அவளுடைய துக்கத்தைக் கண்டு, ராம் சிங்குக்குத் தயவு வந்தது.

"யுத்த காலம், அம்மா! யார் வேண்டுமானாலும் வேலை கொடுப்பார்கள். ஆனால், உங்களிடம் வேண்டுமென்று வந்தேன்" என்றான்.

"சரி உன்னிஷ்டப்படியே கொடுக்கிறேன்" என்று ஜானகி சொல்லி, உடனே அவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டாள். அவள் குடும்பத்தை அதுகாறும் பிடித்து வந்த சனி தசையும் அன்றே தீர்ந்தது.

கஷ்டம் எது?

ஒருவர் :—நன்றாகச் சமைக்கத் தெரிந்தும் சமைக்க மாட்டேன் என்று சொல்லுகிற பெண்ணோடு குடித்தனம் பண்ணுவது மிகவும் கஷ்டம்.

இன்னொருவர் :—சமைக்கத் தெரியாமலிருந்தும், சமைக்கத்தான் சமைப்பேன் என்று சொல்லுகிற பெண்ணோடு குடித்தனம் பண்ணுவது அதைவிடக் கஷ்டம். —மூர்த்தி.



ஹோமியோபதி

வைத்தியத்தை ஆங்கிலத்திலோ, தமிழிலோ தங்கள் வீட்டிலிருந்தே படித்து டாக்டர் ஆகலாம். முழு விபரங்கள் அடங்கிய தமிழ் அல்லது ஆங்கிலப் பிரசுரத்துக்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

•

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்,

கும்பகோணம், தென் இந்தியா

காந்தி மலர் - 2

பெண்களுக்கு

பெண்களைப் பற்றியும், சமூகத்தில் பெண்கள் செய்ய வேண்டிய கடமை, சேவை முக்கியத்துவம் பற்றியும் காந்திஜி பேசியவை எழுதியவை இதில் அடங்கி யிருக்கின்றன. தமக்கே யுரிய நயமான முறையில் பெண்கள் சம்பந்தமான பிரச்னையைக் காந்திஜி இந்தப் புத்தகத்தில் நன்கு விளக்கி இருக்கிறார்.

"To the Women" என்ற ஆங்கில நூலுக்குச் சரியான தமிழ் மொழி பெயர்ப்பு.

விலை ரூ. 6.

புதுமைப் பதிப்பகம்

லிமிடெட்.

காரைக்குடி

பற்கள் ஆடுகின்றனவா?

ஆனால் அவைகளுக்கு

"தைமோஸின்"

சிகிச்சை அளியுங்கள்.

ப்ரோச் பல் வைத்தியர் Dr. C. M. தேசாய், L. D. S. அவர்களின் மருந்து முறைப்படி தயாரித்தது. டூத் பிரஷ் அல்லது விரலினால் சில துளிகள் உபயோகித்தால் போதும். மாயமாக பற்களின் காவியை அகற்றி, சொத்தை விழுவதைத் தடுத்து, பற்களை ஆரோக்யமாயும் வெண்மையாயும் செய்து, பயோரியா, ஈறு சம்பந்தமான வியாதிகள், வாய் வேக்காடு மற்றும், தொண்டை உபாதைகள் இவற்றைத் தடுக்கும்.

2 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2.

தபால் பாக்கிங் சார்ஜ் தனி.

டென்டல் இன்ஸ்டிடியூட்

ஸேவ ஆஸ்ரமம், ப்ரோச்.

ஏஜண்டுகள் :

T. M. தாகூர் & கோ.

1-10, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, ஜி.டி. மதராஸ்.

ராஜாஜி மலர் - 2

கட்டுரைகள்

பேசுந் தமிழ், தமிழ் எழுத்துக்கள், காதலும் கலியாணமும், வசன நடை, பண்பாடு, சின்ன விஷயங்கள், சிறு கதைகள் ஆகிய தலைப்புகளில், 23 கட்டுரைகள் அடங்கியது.

ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய இந்தப் புத்தகத்தை எளிய நடையில் தலைவர் ராஜாஜி எழுதியுள்ள இந்தப் புத்தகத்தை ஒவ்வொரு தமிழரும் படிக்க வேண்டியது அவசியம்.

விலை ரூ. 4-8-0

புதுமைப் பதிப்பகம்

லிமிடெட்.

காரைக்குடி.


பிரயாணக் கதை
1
எனக்கு
லீவு கிடைக்காது. வேலை
யோ தலைக்குமேல்
இருக்கிறது மேலும்
மதுரைக்குப்போக
ரூ. 25/- ஆகும்
கிட்டு
வீண் பிரயாணம் செய்யாதீர்கள்



நான் சர்வாதிகாரியானால்!

நாடோடி

★

அது என்னமோ தெரியவில்லை, நான் சர்வாதிகாரியானால் என்ன பண்ணுவேன் என்பதைத் தெரிந்து கொள்ள, என் பள்ளிக்கூடத்து நாட்களிலிருந்தே எல்லாரும் வெகு ஆவலாக இருந்து வருகிறார்கள்.

நான் எட்டாவது வகுப்புக்கு வரும் வரை, எந்த வாத்தியாரும் எந்த விஷயத்தைப் பற்றியும் என் மேன்மையான அபிப்பிராயத்தையோ, அல்லது என் உயர்ந்த யோசனையையோ கேட்டதில்லை. ஏழாவது வகுப்பு முடிய ஏரேழு உபாத்தியாயர்களை நான் பார்த்திருக்கிறேன். (ஒரு வகுப்புக்கு ஒரு வகுப்பு வாத்தியார் வீதம் ஏழு வகுப்புகளுக்கு ஏழு வாத்தியார்கள்தானே, ஏரேழு எப்படி ஆகும் என்று கேட்டு என் மானத்தை வாங்காதீர்கள். வகுப்புக்கு இரண்டு வருஷம், ஒவ்வொரு வருஷமும் ஒரு பள்ளிக்கூடம் என்று வைத்தால் ஏரேழு உபாத்தியாயர்கள் ஆகவில்லையா?)

இந்த ஏரேழு உபாத்தியாயர்களும் தங்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே யோசனை செய்து முடிவுக்கு வந்தார்கள் என்று நினைக்கிறேன்.

ஏனெனில், ''ஏன் பாடம் படிக்கவில்லை?'' ''ஏன் பள்ளிக்கூடத்துக்கு நாழிகழித்து வந்தாய்?'' ''பக்கத்துப் பையனோடு ஏன் சண்டை போட்டாய்?'' ஆகிய இவற்றைத் தவிர இந்த வாத்தியார்கள் எங்களை வேறு ஒன்றும் கேட்பதில்லை.

ஆனால் எட்டாவது வகுப்பு உபாத்தியாயருக்கு அப்படியில்லை. எத்தனையோ விஷயங்களைப் பற்றி அவருக்கு ஒரு திட்டமான அபிப்பிராயமோ, யோசனையோ இருந்ததாகத் தெரியவில்லை. உதாரணமாக கிராம வாழ்க்கை சிறந்ததா, நகர வாழ்க்கை சிறந்ததா என்கிற விஷயத்தைப் பற்றி அவருக்குத் தாமாகவே யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வரத் தெரியவில்லை. மாணவர்களாகிய எங்களைக் கேட்காமல் முடியாதுபோல் பட்டது. இருந்தாலும் நேரிடையாக எங்களைக் கேட்கலாமா? அவமானமாக இருக்காதா? அதற்காக அவர் ஒரு யுக்தி செய்தார். 'மாணவர் விவாத சங்கம்' என்று ஒரு சங்கம் ஏற்படுத்தி அதில் எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கச் சொன்னார்.

உபாத்தியாயர்கள் இத்தனை ஆவலாக நம் உதவியைக் கோரும்போது மாட்டேன் என்று சொல்லலாமா? அதற்காக என் மாமாவைக் கேட்டு எது சிறந்தது என்பதைப் பற்றி ஒரு வியாசம் எழுதித் தரச் சொன்னேன். அவர் எழுதிக் கொடுத்ததை அப்படியே நெட்டுருப் பண்ணி மாணவர் விவாத சங்கத்தில் தடங்கலன்றி ஒப்பித்து விட்டேன்.



ஆனால் எட்டாவது வகுப்பு உபாத்தியாயர் என்னை இத்துடன் விட்டுவிடவில்லை. இன்னும் கொஞ்சம் நாள் கழித்து, ''எது பலம் வாய்ந்தது, பேனாவா, கத்தியா?'' என்று கேட்டார்.

இது விஷயத்தையும் என் மாமாவைக் கொண்டே எழுதித் தரச் சொல்லி நெட்டுருப் பண்ணி ஒப்பித்

தேன். ஆனால் உபாத்தியாயர் இத்தோடு விட்டாரா? இல்லை. திரும்பவும் இன்னொரு விஷயத்தைப் பற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்டார்.

இப்படியாகத்தானே "தூக்குத் தண்டனை வேண்டுமா, வேண்டாமா?" "பால்ய விவாகம் நல்லதா, கெடுதலா?" "வக்கீல் வேலை உயர்ந்ததா, வைத்தியர் வேலை உயர்ந்ததா?" "குடுமி நல்லதா, கிராப்பு நல்லதா?" "பெண்கள் படிக்கலாமா, கூடாதா?" "புலால் உணவு அவசியமா, இல்லையா?" என்பது போன்ற எத்தனையோ விஷயங்களைப் பற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொண்டே வந்தார். நானும் என் மாமாவின் அபிப்பிராயத்தை என் அபிப்பிராயம்போல் நெட்டுருப் பண்ணி ஒப்பித்துக் கொண்டே வந்தேன்.

ஆனால் நெட்டுருப்பண்ணும் சங்கடம் சகிக்க முடியவில்லை. இதனால் இந்த எட்டாவது வகுப்பு எப்பத் தொலையும் என்றுகூடத் தோன்ற ஆரம்பித்து விட்டது. இந்தச் சங்கடத்திலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொண்டுதான் மறு காரியம் என்று என் பள்ளிக்கூடத்துப் பாடங்களை வெகு மும்முரமாகப் படித்தேன். எப்படியோ, செத்தேன், பிழைத்தேன் என்று முதல் வருஷத்திலேயே பரீட்சையில் தேறி, ஒன்பதாவது வகுப்புக்கு வந்தேன்.

ஆனால் காசிக்குப் போயும் கர்மம் தீரவில்லை என்பதுபோல் ஒன்பதாம் வகுப்பு உபாத்தியாயரும் என்னையே யோசனை கேட்க ஆரம்பித்து விட்டார்!

இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், எட்டாவது வகுப்பு உபாத்தியாயருக்கு ஏற்பட்ட அதே சந்தேகம்தான் இவருக்கும் தோன்றி விட்டது!

ஆனால் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்ல அஞ்சவில்லை. வாத்தியார் எதிர் பார்த்தது எல்லாம் நான் யாரையாவது கேட்டு, எழுதி நெட்டுருப் பண்ணி ஒப்பிவிக்க வேண்டும் என்பதுதானே?

ஆனால் என் விஷயத்தில் ஒரு தர்ம சங்கடம் ஏற்பட்டு விட்டது. மாமா வேலை மாற்றலாகி வேறு ஊருக்குப் போய் விட்ட படியால் எங்கள் அத்திம்பேரைக் கொண்டு எழுதச் சொல்ல நேர்ந்தது. அவர் எங்கள் மாமா எழுதிக் கொடுத்த அபிப்பிராயங்கள் எல்லாவற்றுக்கும் மாறுதலான அபிப்பிராயம் எழுதிக் கொடுத்து விட்டார். கிராம வாழ்க்கைதான் சிறந்தது என்று எட்டாவது வகுப்பில் சொன்ன நான் நகர வாழ்க்கைதான் சிறந்தது என்று ஒன்பதாவது வகுப்பில் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டி வந்தது. தூக்குத் தண்டனை அவசியம் என்று முதல் வருஷத்தில் தீர்ப்புச் சொன்ன நான் அடுத்த வருஷமே, திருவாங்கூர் சமஸ்தானத்தில் சமீபத்தில் செய்திருப்பது போல், தூக்குத் தண்டனை வேண்டாம் என்று அதை ரத்துச் செய்ய நேர்ந்தது!

நான் ஒன்பதாவது வகுப்பில் இப்படிப் பேசியதை யெல்லாம் எட்டாவது வகுப்பு வாத்தியாரும் கேட்டுக் கொண்டிருந்தார். நான் பேசியதைக் கேட்டு அவ்வப்பொழுது சிரிக்கவும் செய்தார். நான் மிகவும் நன்றாகப் பேசினேன் என்று சிரித்தாரா, அல்லது முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறேனே என்று சிரித்தாரா என்பது அவருக்குத்தான் வெளிச்சம்!

ஆனால் ஒன்பதாவது வகுப்போடேயாவது இந்தத் தொல்லை என்னை விட்டதா? இல்லை. பத்தாவது வகுப்புக்கும் என்னைத் தொடர்ந்து வந்தது. அந்த வாத்தியாருக்கும் இதே சந்தேகங்கள். இந்தத் தடவை இவற்றை எழுதிக் கொடுக்க மாமாவும் இல்லை, அத்திம்பேரும் இல்லை. நானேதான் கக்கே, பிக்கே என்று எழுதி ஒப்பித்து அவமானப்பட நேர்ந்தது.

கடைசியில் பத்தாவது வகுப்பு முடிந்து காலேஜில் சேர்ந்தேன். அங்கேயும் இதே தொல்லைதான். ஆனால் இங்கே ஒரே ஒரு கேள்வியைத்தான் திரும்பத் திரும்ப என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் சர்வாதிகாரி



வாடிக்கைக்காரர்:— நான்கு நாட்களுக்கு முன்னர் கொடுத்தீர்களே, அந்த பழம் இன்னும் இருக்கிறதா?
கடைக்காரர்:— வேண்டியது இருக்கிறது. எத்தனை டஜன் வேண்டும்?
வாடிக்கைக்காரர்:— இல்லை. அது ஆன பிற்பாடு வருகிறேன். —எம். கே.

யானால் என்ன பண்ணுவேன் என்பது தான் அக்கேள்வி. இக் கேள்விக்கு நான் அப்பொழுது சொன்ன பதில்களை இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் சிரிப்பு வருகிறது.

நான் சொன்ன பதில்கள் வருஷத்துக்கு வருஷம் மாறிக் கொண்டே வந்தன.

முதல் வருஷம், இந்தமாதிரி மாணவர் சங்கம் என்று ஒன்று வைத்து, மாணவர்களின் கழுத்தை அறுக்கும் இந்த வழக்கத்தின் மீது எனக்கு இருந்த கோபம் சொல்லி முடியாது. ஆகவே, "நான் சர்வாதிகாரியானால் இந்த மாணவர் சங்கங்களை ஒழித்து விடுவேன்" என்று சொன்னேன்.

இரண்டாவது வருஷம் பரீட்சைக்கு வெகு மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தேன். ஆனால், பரீட்சைகளின் மீது இருந்த கோபம் சொல்லி முடியாது. ஆகவே, "நான் சர்வாதிகாரியானால் பரீட்சைகளை ஒழித்து விட்டுத் தான் மறுகாரியம் பார்ப்பேன்" என்றேன். இந்த பயமுறுத்தலைக் கண்டு பயந்துதானோ என்னவோ, பரீட்சை அதிகாரிகள் அந்த வருஷம் எனக்குப் 'பாஸ்' கொடுத்து விட்டனர்.

மூன்றாவது வருஷம் என் கல்யாணத்துக்காக என் பெற்றோர்கள் வெகு மும்முரமான ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள். எத்தனையோ பெண்களை நான் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பினேன். ஆனால் ஒரு இடத்திலாவது எனக்குக் கல்யாணம் நிச்சயமாகவில்லை. காரணம் என் பெற்றோர்கள் ஏகத்தாராக வரதட்சணை கேட்டது தான்.

ஆகவே வரதட்சணை வாங்கும் வழக்கத்தின் மீது எனக்கு இருந்த கோபம் சொல்லி முடியாது. அந்த வருஷ மாணவர் சங்கத்தில், "நான் சர்வாதிகாரியானால் வரதட்சணை வாங்கும் கிராதகர்களை யெல்லாம் கழுவிலேற்றி விட்டுத் தான் மறு காரியம் பார்ப்பேன்" என்று கர்ஜித்தேன். இந்த விஷயமாக என் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த உணர்ச்சிகளை யெல்லாம் வெளியே கொட்டினேன். இந்த கர்ஜனையைப் பள்ளிக்கூடத்து மாணவர்கள், உபாத்தியாயர்கள் எல்லாரும் வெகுவாகச் சிலாகித்தார்கள்.

இப்படியாகத்தானே நான் சர்வாதிகாரியானால் என்ன பண்ணுவேன் என்பதைப் பற்றி என் கருத்து வருஷத்துக்கு வருஷம் மாறிக்கொண்டே வந்தது.

குமாஸ்தா வேலைப் பயிற்சிக்காக டைப் அடிக்கவும், சுருக்கெழுத்து எழுதவும் கற்றுக்கொள்ள வேண்டியிருந்த போது, நான் சர்வாதிகாரியானால் அவற்றை ஒழித்து விட்டுத்தான் மறு காரியம் என்று தீர்மானம் பண்ணியிருக்கிறேன்.

இப்படியாக என் எண்ணங்கள் மாறிக்கொண்டே வந்தன. கடைசியில் எழுத்தாளனாக மாறினேன். பேனாவைப் பிடித்து முதல் கட்டுரை எழுதி அது பிரசுரம் ஆனதுதான் தாமதம், என் எண்ணங்கள் எல்லாம் சடாரென்று மாறின.

இப்பொழுது நான் சர்வாதிகாரியானால் முன்னே சொன்ன ஒரு காரியத்தையும் செய்ய மாட்டேன். பரீட்சை விஷயம் நாசமாகப் போகட்டும், எனக்குக் கவலையில்லை! வரதட்சணை விஷயம் எக்கேடு கெட்டுப் போகட்டும்—அதாவது நான் என் ஐந்து மாதப் பெண் அனுவுக்கு (அனுராதாவைத்தான் நாங்கள் அனு என்று கூப்பிடுகிறோம்.) வரதட்சணை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேரிடும் வரையில். அதைப் பற்றியும் கவலை இல்லை.

சரி, நான் இப்பொழுது சர்வாதிகாரியானால் என்ன செய்வேன் தெரியுமா? சற்றுப் பொறுமையுடன் இருங்கள்; அடுத்த இதழில் விவரிக்கிறேன்.

திருப் பணியில் பங்கு


பாரதியார் ஞாபகார்த்த நிதிக்காக 19—11—44 இதழில் கண்டிருந்தபடி ரூ. 1—0—0 நன்கொடை அளித்தவர்களின் விவரம்:

ஸ்ரீமான்கள் கே. ஆர். கோதாரி, திருச்சி; கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர், கடயநல்லூர்; எம். டி. பி. ராஜராஜேஸ்வரன், நாமக்கல்; மயிலபண்ணை ஸ்ரீநிவாஸய்யர், பழநி; கெ. ராமதுரை, திருச்சி; எஸ். வேம்பு, சைதாப்பேட்டை; எஸ். கிஷோரி, பெங்களூர்; வி. எம். ஜி. ஸ்வாமி, செகந்திராபாத்; என். ரங்கஸ்வாமி ஐயங்கார், தியாகராயநகர்; டி. என். கோபால்சாமி நாயுடு, சங்கரலிங்கபுரம்.


மதுரைக் "கல்கி" ஏஜெண்டு மூலம் ஒரு ரூபாய் நன்கொடை அளித்தவர்கள்:—

ஸ்ரீமான்கள் சங்கையா நாடார், எஸ். ராமசாமி, எம். ஜி. நாயுடு, போதகுரு, நாகராஜன், வெ. செட்டியார், சிக்கந்தர், டி. எம். ராமச்சாரி, நாகமுத்து, பாலகிருஷ்ண ஐயர், எம். என். சுப்ரமண்ய ஐயர், மு. பி. ரா. சுப்பாக் கோனார், என். வேங்கடராமன், ராமசாமி, ராமய்யர், ராமையா பிள்ளை, டி. ஏ. நாகலிங்கம், எம். பி. வி. சுந்தரராமய்யர், எம். ஜி. சுப்பிரமணியன், காளிமுத்து, மாணிக்கம் பிள்ளை.

ஆக ரூ. 31—0—0



கல்கி



KALKI நவம்பர் 26.1944 4 அணா



விவரங்களுக்கு :

ஸ்வாமி பிலிம்ஸ், கோட்டயம்:
திருநெல்வேலி, திருவாங்கூர், கொச்சி,
முதலிய இடங்களுக்கு

ராஜா பிக்சர்ஸ், கோயமுத்தூர்:
கோயமுத்தூர், சேலம், நீலகிரி, பிரிட்டிஷ்
மலபார் முதலிய இடங்களுக்கு

ஹனுமான் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்
கோயமுத்தூர்:
தஞ்சை ஜில்லாவுக்கு

பிரபா பிக்சர்ஸ், பெங்களூர் ஸிடி:
மைசூர், குடகு, தென் கன்னடம், ஆந்திரா,
வட இந்திய முதலிய பிரதேசங்களுக்கு

சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட்,
கொழும்பு: - சிலோன்

தி சதர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்,
கோயமுத்தூர்:
இதர இடங்களுக்கு

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press.
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.